Shan Thayaparan
Sales Representative
416 567 7675
shan@shan123.com
SHAN
416.567.7675
info@shan123.com
1265 Morningside Avenue, Scarborough, ON M1B 5K2
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

IBC தமிழ் பத்திரிகை

THANA YOGANATHAN
Sales Representative
416-418-5749
thanaever@gmail.com
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
OFFICE: 905-305-1600
AAA Team
REAL ESTATE PROFESSIONALS

May 2019 | திருவள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி | இதழ் 05 | பிரசுரம் : கனடா | இலவசப்பிரதி



IBC தமிழ் பத்திரிகை
உங்கள் கைத்தொலைபேசியில் வாசிக்க

சிறீலங்காவில், ஐஎஸ் குண்டுத்தாக்குதலைப் பயன்படுத்த முனைப்பு:

சந்தர்ப்பவாத அரசியல்!

இலங்கையில் கடந்த மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தில் (21.04.19) நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப்பின்னர் ஐ.எஸ் எனப்படும் இஸ்லாமிய அரசாங்க அமைப்பின் அபாயம் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக மேற்குலக புலனாய்வு அமைப்புக்களின் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


படையினர் மீது நம்பிக்கை வைத்து வழமையாக வாழ்க்கையை தொடருமாறு, சிறிலங்காவின் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க உட்பட முப்படைத் தளபதிகள் மற்றும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் மக்களுக்கு உறுதிகளை வழங்கினாலும் மக்களிடமுள்ள அச்சநிலை முற்றாகத்தீரவில்லை. அத்துடன் புதிய தாக்குதல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.



சிறிலங்காவின் இந்த இக்கட்டான நிலையைப் பயன்படுத்த முனையும் அமெரிக்காவும் அதனுடன் பாதுகாப்புத்தொடர்பான சோபா (SOFA) அல்லது ஸ்ரேற்றஸ் ஒப் போர்சஸ் அகிறிமென்ட் (Status of forces agreement) எனப்படும் ஒப்பந்தம் ஒன்றை செய்ய அழுத்தம் வழங்கிவருகிறது.

அண்மையில் அமெரிக்க செனட்சபை குழுவில் இந்தோ-பசிபிக் கட்டளைத் தளபதி தனது அறிக்கையிடலை செய்தபோது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீன ஆதிக்கத்தை தடுக்க சிறிலங்காவுடன் அமெரிக்கா ஒரு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...



ஒரு தசாப்தம்...

"Helping individuals and families find their best options to deal with their debt and get their finances back on track.
CSC Credit Solution Centre
309-80 Corporate Rd., Toronto, ON M1H 3G5
Call Sri @ (416) 450-5011
Email: sri@sriv.ca

New JAASMIN Banquet & Convention Centre
Call THEVAN
Dir: 416 827 6660
905 477 3350 • 905 477 3331
www.newjaasmin.ca
info@newjaasmin.ca
90 Nolan Court Markham, ON L3R 4L9

All Your Mortgage Needs...
RBC Royal Bank
KOKUL KUMARASWAMY
Mortgage Specialist
647-880-3955
ADVICE YOU CAN BANK ON

HomeLife
Raj Ariyanayagam
Real Estate Broker
Direct: 416.930.4663
Office: 416.298.3200
E-Mail: rajhomes@hotmail.com
HomeLife Today

GTA West
LOTUS Funeral and Cremation Centre Inc.
416.834.5753
647.547.8188
121 City View Dr. Toronto, Ontario M9W 5A8
IT IS OUR PEOPLE THAT MAKE THE DIFFERENCE
PATRICIA PETER BBM.
Licensed Funeral Preplanning Director & After Care Advisor
GTA East
416.293.5211
647.547.8188
4164 Sheppard Ave E, Scarborough ON M1S 1T3
OGDEN FUNERAL HOMES
24 HRS 7 DAYS A WEEK PROFESSIONAL SERVICE



THE LAW OFFICES OF

MELENI DAVID

BARRISTERS AND SOLICITORS

வாகன விபத்தா?

அழைக்கப்பட வேண்டியவர் சட்டத்தரணி
மெலனி டேவிட்
வாகன விபத்து கோரிக்கைகளில் முன்னணி வகிக்கும்

சட்டத்தரணி மெலனி டேவிட்



அன்றும், இன்றும், என்றும் தமிழருக்காக தொடர்ந்து சேவை புரியும் சட்ட நிறுவனம்.

LAW OFFICE OF MELENI DAVID
நாங்கள் முகவர்கள் இல்லை சட்டத்தரணிகளே

Toronto மாநகரில் பலத்த நெருக்கடிகளுக்கு ஈடுகொடுத்து, தொடர்ந்து தமிழ் மக்களுக்காக, தமிழ் ஊழியர்களுடன் சேவை புரிந்து வரும் தமிழர் சட்ட நிறுவனம்.
THE LAW OFFICE OF MELENI DAVID


நம்பிக்கையுடன் அழையுங்கள்

416 271 5992

சிங்கள - முஸ்லிம் கலவரம் வெடிக்கும் அபாயம்

ஊரடங்கு உத்தரவு - சமூகவலைத்தளங்கள் முடக்கம்


இலங்கையில் தற்போது சிங்கள முஸ்லிம் இனங்களுக்கு இடையில் கலவரங்கள் வெடிக்கும் அபாயநிலை தோன்றியுள்ளது.



இனங்களுக்கு இடையில் வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் முஸ்லிம் ஒருவர் சமூக ஊடக பதிவொன்றை இட்டதால் சிலாபத்தில் உள்ள மசூதி மற்றும் முஸ்லிம் வணிக நிலையங்கள் சிலவற்றின் மீது கல்வீச்சுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதையடுத்து சிலாபம் காவல்துறைப்பிரிவில் கடந்த 12 ஆந்திகதி ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கபட்டது. அத்துடன் பேஸ்புக், வைபர், வட்சப் உட்பட்ட சமூக வலைத்தளங்கள் அனைத்தும் உடனடியாக சிறிலங்கா அரசாங்கத்தால் முடக்கப்பட்டன. ஆயினும் சிலாபம் பகுதியில் ஊரடங்குச்சட்ட பிறப்பிக்கபட்ட நிலையில் குளியாப்பிட்டிய, பிங்கிரிய ,தும்மலசூரிய ஆகிய பகுதிகளில் சிங்கள முஸ்லிம் தரப்புக்களுக்கு இடையில் வன்முறைகள் தலையெடுக்கமுனைந்தன. அதனையடுத்து அந்தப்பகுதிகளிலும் உடனடியாக கடந்த 12 ஆந்திகதி நள்ளிரவில் இருந்து 13 ஆந்திகதி காலை 6 மணிவரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே குளியாப்பிட்டிய - கரந்திப்பல பகுதியிலுள்ள சில முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்களவர்களை விடுவிக்கக் கோரி ஏராளமான சிங்களமக்கள் வெல்லம்பிட்டிய பகுதியில் உள்ள சிறிலங்கா காவல் நிலையத்தை கடந்த 12 ஆந்திகதி இரவு முற்றுகையிட்டனர். மறுநாள் காலை வரை இந்த முற்றுகை நிலை தொடர்ந்தது. மறுநாளான 13 திகதி காலை வெல்லம்பிட்டிய காவல் நிலையம் முன்பாக சிங்களமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சிறிலங்கா அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன 13 ஆம்திகதி காலை சீனாவுக்கு பயணமாகியுள்ள நிலையில் நாட்டில் பதற்றநிலை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.



சிறிலங்காவில் மற்றொரு கறுப்பு ஜுலை

முஸ்லிம் கிராமங்கள் மீது தாக்குதல்

சிறிலங்காவில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் இடங்கள் சிலவற்றில் முஸ்லிம் மக்களின் கடைகள் வீடுகள் பள்ளிவாசல்கள் மீது 13ம் திகதி திங்கட்கிழமை பகல் வேளையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீடுகள் மீது தீ வைக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. குருநாகலில் மூன்று பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. சிலாபத்திலும் ஒரு பள்ளிவாசல் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குருநாகல், குளியாப்பிட்டி, மடிகே, ஹெட்டிபொல, அனுக்கானா ஆகிய இடங்களிலேயே காடையர்களின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

முஸ்லிம் மக்கள் பயத்தின் நிமித்தம் காடுகளுக்குள் ஓடிச்சென்றுள்ளனர். மூவர் பலியாகியுள்ளனர், உடமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளன.

இராணுவமும் பொலிஸாரும் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த போதிலும் காடையர்களின் அடாவடித்தனத்தினைக் கட்டுப்படுத்த முடியாதிருந்ததை குறிப்பிடத்தக்கது.

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தவேளையிலேயே காடையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வடக்கின் நிலை மற்றும் பாதுகாப்பு

விக்னேஸ்வரன் - ஆளுனர் சந்திப்பு

வட மாகாணத்தின் அரசியல் நிலைமை மற்றும் அதன் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் இடையில சந்திப்பு இடம்பெற்றது.

வட மாகாண ஆளுநர் பணியகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில்பயங்கரவாத் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் விடுதலை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.



SMI
STANDARD MORTGAGES INC.
Residential & Commercial
SERVING THE COMMUNITY SINCE 2001

Raj Subrayam AMP
Director
Tel: 416 298 1700

• Mortgages
• Refinance
• Second Mortgages
(Can be Arranged within 24 Hrs)



80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Fax: 416 754 8651| www.standardmortgagesinc.com | raj@smi4loan.com

1–ஆம் பக்க தொடர்ச்சி

ஐ.எஸ் அமைப்பு குறித்த அச்சம்...

ராணுவப்பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்யவேண்டுமென பரிந்துரைத்தார்.

ஆனால் அமெரிக்காவுடன் இவ்வாறான ஒரு ஒப்பந்தத்தைச் செய்வதற்கு சிறிலங்கா இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க எதிர்ப்புத்தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் சிறிலங்கா ராணுவத்தின் வலுவை இழக்கச்செய்யும் என அச்சம் வெளியிட்டுள்ள மகேஷ் சேனாநாயக்க இவ்வாறு அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்வது ஒருவர் தனது சொத்தை எழுதிவிட்டு தற்கொலை செய்து கொள்வதற்குச் சமனானது எனவும் கடுமையாக விமர்சித்திருந்தார். இதன் அடிப்படையில்அமெரிக்கா-சிறிலங்கா சோபா ஒப்பந்தத்தைத் தான் எதிர்ப்பதாகவும் கடந்த வார இறுதியில் தெரிவித்துள்ளார். அத்துடன் சோபா உடன்பாட்டின் மூலம் சிறிலங்காவில் பிரசன்னப்படும் அமெரிக்கப்படையினரை உள்ளூர் சட்டங்களோ அல்லது சுங்கவிதிகளோ கட்டுப்படுத்தாது எனவும் எச்சரித்தார். (சோபா உடன்பாடுவந்தால் அமெரிக்க படையினர் இலங்கைக்குக் கொண்டுவரும் இராணுவ சரக்குகளை சிறிலங்கா சுங்கத்திணக்களம் சோதனையிட முடியாதென கூறப்படுகிறது)

ஆயினும் இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தரப்பு இவ்வாறான ஒரு ஒப்பந்தம்குறித்து ஆர்வம் கொள்வதாகவே நோக்கப்படுகிறது. அந்தவகையில் இந்தவாரம் (14-05-19 செவ்வாய்க்கிழமை) சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன குழு அமெரிக்காவுக்குச் சென்றது.

அங்கு வைத்து வியாழக்கிழமையன்று அமெரிக்க ராஜாங்க செயலாளர் மைக்பொம்பியோ (முன்னாள் சீஐஏ இயக்குனர்) குழுவுடன் திலக் மாரப்பன குழு பேச்சுக்களை நடத்தியது.

பயங்கரவாதத்தை முறியடிப்பது தொடர்பாக நடத்திய இந்தப்பேச்சுக்களின்போதுஇந்தோ-பசுபிக் மூலோபாயம், சிறிலங்காவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராணுவ உறவுகள், அமெரிக்கப் படையினரின் இலங்கை பிரசன்னத்துக்குரிய உடன்பாடு, இலங்கையின் அமைதிகாப்புக்கான உதவி, உட்பட்ட விடயங்கள்; கலந்துரையாடப்படவுள்ளது.

இறுதியில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சோபா உடன்பாடு ஒன்றை செய்வது குறித்த சாத்தியங்களை ஆய்வுசெய்யப்படுமெனவும் நம்பகரமாக தெரியவருகின்றது.

இந்த நிலையில் சிறிலங்கா அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, இந்தவாரம் தான் மேற்கொள்ளும் சீனப்பயணத்தின் போது சீன அரச தலைவர் ஷி ஜின்பிங்குடன் உதவியாளர்களின் உதவியின்றி மூடிய அறைப்பேச்சுக்களை நடத்துகிறார்

பீஜிங்கில் 15ஆம் திகதி நடைபெற்ற ஆசிய நாகரீகங்கள் (Conference on Dialogue of Asian Civilisations) என்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காவே மைத்திரிபால சிறிசேனவின்; சீனப்பயணம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சீன அரச தலைவர் ஷி ஜின்பிங் மற்றும் சீன பிரதமர் லி கெகியாங் ஆகியோருடன் அவர் நடத்திய பேச்சுக்களே முக்கியமாக நோக்கப்படுகின்றன.

இந்தப் பேச்சுக்கள் அண்மைய தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கை எதிர்நோக்கும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகள் சார்ந்ததாக அமைந்திருந்தன.

லண்டன் தமிழர்களை பதறவைத்த ‘மெட்ரோ வங்கி!’



பிரித்தானியாவில் லண்டன் மற்றும் தென் கிழக்கு பிராந்தியத்தில் 67 கிளைகளை கொண்ட மெட்ரோ வங்கி அதன் பாதுகாப்பு பெட்டக களஞ்சிய வசதிகளுக்காக லண்டன் தமிழ்மக்களிடம் பிரபலமான ஒருவங்கியாகும்.

ஜனவரியில் மெட்ரோ வங்கியின் கணக்கு அறிக்கையில் ஒரு பெரும் தவறு கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அதன் பங்குகள் தொடர்ச்சியாகச் சரிந்தது. சில முதலீட்டாளர்களும் வெளியேறினர். ஆயினும் வங்கி தனது சேவைகளை வழங்கிவருகிறது. இந்தவாரம் மெட்ரோ வங்கி தனது நிதிநிலையை 350 மில்லியன் பவுண்சுகளால் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கூறுகிறது.

இந்த நிலையில் மெட்ரோ வங்கி வங்குரோத்துநிலையைஅடைந்துவிட்டதால்; அந்த வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்களில் இருக்கும் பொருட்களை இனிமேல் எடுக்கமுடியாது என கடந்தவார இறுதியில் சமூகவலைத்தள வதந்திகள் பரவின.

இதனையடுத்து லண்டனில் தமிழ் மக்கள் செறிவான பகுதிகளில் உள்ள மெட்ரோ வங்கிகளை கடந்த சில தினங்களாக நூற்றுக்கணக்கான தமிழ் வாடிக்கையாளர்கள்.

குறித்த வங்கிகளின் பெட்டகங்களில் தாம் பாதுகாப்பாக வைத்த நகைகள், ஆவணங்களை மீண்டும் எடுத்துச்சென்றனர்.

லண்டன் ஹரோ பகுதியில் உள்ள ஹரோ ஒன் த ஹில் வங்கிக்கு ஐபிசி தமிழ் செய்தியாளர்கள் நேரடியாகச் சென்றபோது இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து வங்கி முகாமையாளருடன் பேசியபோது இது ஒரு வதந்தி என குறிப்பிட்டதுடன் இதுகுறித்து மெட்ரோ வங்கியின் தலைமையகம் வெளியிட்ட ஊடக செய்தியையும் பகிர்ந்தனர். அந்த செய்திக்குறிப்பில் மெட்ரோ வங்கி பெட்டகங்களில் உள்ள பொருட்கள் குறித்த உறுதி வழங்கப்பட்டுள்ளது

நிறைவுக் கட்டத்தில் இந்தியத் தேர்தல்

பா.ஜ.க - கொங்ரஸ் வெற்றியில் நம்பிக்கை



இந்தியப் பொதுத்தேர்தல் இந்தவாரத்துடன் நிறைவுக்கு வரும் நிலையில் ஆளும் பா.ஜ.க அணி மற்றும் கொங்ரஸ் கூட்டணி ஆகிய இரண்டு தரப்புகளும் வெற்றிவாய்ப்புக்கு முற்கூட்டியே உரிமைகோரி வருகின்றன.

ஏற்கனவே ஆறுகட்ட வாக்களிப்பு முடிவடைந்துவிட்டது. இறுதியாக 7ஆம் கட்டத்தேர்தல் எதிர்வரும் 19-ந் திகதி 59 தொகுதிகளில் நடைபெறவுள்ளது அத்துடன் இந்தியப்பொதுத்தேர்தல்களம் முடிவுக்கு வருகிறது.

அதன்பின்னர் எதிர்வரும் 23-ம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

தமிழகத்தைப்பொறுத்தவரை அதிமுக -பாஜக அணியும் திமுக கொங்ரஸ் அணியும் தத்தமது அணிகளே வெற்றிபெறுமென சூளுரைத்துள்ளள.

22தொகுதிகளிலும்தி.மு.க.வெற்றிபெற்றால் 10 நாட்களில் தமிழகத்தில் ஆட்சிமாற்றம் இடம்பெறுமென திமுக பொருளாளர் துரைமுருகன் கூறும் நிலையில் தேர்தல் முடிவுகளின் ஊடாக மத்திய பாரதீய ஜனதா அரசும், மாநில அ.தி.மு.க. அரசும் விரைவில் அகற்றப்படுமென வைகோ கூறியிள்ளார்.

புர்காவை அகற்றமாட்டேன்!

அடம்பிடித்த பெண் சிலாபத்தில் கைது!



இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்களுக்குப்பின்னர், முகத்தை முழுவதுமாக மறைக்கும் அனைத்து ஆடைகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டது.

ஆயினும் அந்தச்சட்டத்துக்கு கீழ்படிய மறுத்த பெண் ஒருவரும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், ஜயபிம பிரதேசத்தில் இடம்பெற்ற மரணவீடு ஒன்றுக்கு முகத்தை முழுவதுமாக மறைக்கும் புர்க்கா ஆடையை அணிந்தபடி குறித்த பெண் தனது கணவருடன் சென்றிருந்தார்.

எனினும்,புர்க்கா ஆடையுடன் இருந்த இவரைக்கண்ட அங்கிருந்த சிலர் புர்க்கா ஆடையை மாற்றிவிட்டு வருமாறு அறிவுறுத்தி போதிலும் அவர் அதற்கு மறுப்புத்தெரிவித்தார். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் காவற்துறையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு சென்ற காவற்துறையினர் குறித்த பெண்ணையும் அவரது கணவரையும் கைது செய்து கொண்டுசென்றனர்.

தாக்குதல்களுக்கு ஆட்சியாளர்களே காரணம்!

மீண்டும் சீறிய பேராயர் மெல்கம் ரஞ்சித்



இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து நன்கு தெரிந்திருந்தும் அதனை தடுக்கத் தவறிய குற்றத்தை நாட்டின் தலைமைகள் ஏற்கவேண்டுமென, சிறிலங்காவின் பேராயார் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளர்

தாக்குதலை தடுக்கும் பொறுப்பை தவறவிட்டகுற்றம் அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, நாட்டின் தலைமைகளுக்கும் பொருந்தும் என்பதை, தான் மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தனிப்பட்ட முறையில் தன்னை மிகவும் பாதித்ததாகவும், அந்த வலியை தான் இன்னமும் அனுபவித்து வருவதாகவும், பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறினார்.

முன்னதாக கருத்துத்தெரிவித்த பேராயர் மெல்கம் ரஞ்சித் இலங்கையில் வாழும் அனைத்து இனமக்களும் சமாதானத்துடன் வாழவேண்டுமானால் பெரும்பான்மையினத்தின் பௌத்த மதத்தை கண்டிப்பாக மதிக்கவேண்டும் எனக்குறிப்பிட்டிருந்தார். அத்துடன் பௌத்தர்களின் வழிகாட்டுதலுக்கு அமைய ஏனைய மதமக்கள் வாழ வேண்டும் எனவும் வலியுறுத்திய அவர், மேற்குலகநாடுகளை நம்பி ஏமாறாமல் மக்கள் வாழவேண்டும் எனவும் கோரியிருந்தார்.

2009 இல் முள்ளிவாய்கால் படுகொலைகள் இடம்பெற்றபோது அதற்காக சிறிலங்காவின் பேராயார் மெல்கம் ரஞ்சித் பெரிதும் வருந்தவில்லையென்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இலங்கைத் தேவாலயங்களில் பூசைகள் வழமை!

ஆனால் பக்தர்கள் அச்சம்!!

சிறிலங்கா தலைநகர் கொழும்பின் மறைமாவட்டம் உட்பட்ட இலங்கையிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12.05.19) முதல் வழமையான திருப்பலி பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்த மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள மூன்று நட்சத்திர விடுதிகளை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதையடுத்து பாதுகாப்பு காரணங்களால் திருப்பலி பூசைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதன்பின்னர் கடந்த ஞாயிறு பலத்த பாதுகாப்புகளுடன் அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் திருப்பலி பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும் தொடரும் அச்சநிலைகாரணமாக சில தேவாலயங்களில் பக்தர்களின் வரவு குறைவாகவே இருந்தது.

IBC தமிழ்

பத்திரிகை

தமிழர் ஆயுதங்கள் மௌனித்து ஒரு தசாப்தம் நிறைவு!

ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவென ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் ஆயுதங்கள் மௌனமாகி பத்து ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. முள்ளிவாய்க்காலில் முடக்கம் கண்ட ஆயுதப்போராட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை எவ்வாறு பயன்படுத்தினார்கள்? அவை எந்தச் சந்தர்ப்பத்திலும் பொது மக்களை இலக்கு வைக்கவில்லை என்பதை ஆட்சிப்பீடத்தில், எதிர்கட்சி வரிசையில் இருக்கும் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் ஒரே குரலில் பேசுவதை உயிர்த்த ஞாயிறு அன்று நாட்டில் நிகழ்ந்த குண்டுத்தாக்குதல் அவலத்தின் பின்னர் கேட்கக்கூடியதாக உள்ளது.

விடுதலைப்புலிகளின் போராட்டம் பற்றியும் தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பற்றியும் ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியினரும் நற்சான்றிதழ்கள் சமர்ப்பித்த வண்ணம் உள்ளனர். ஒன்று நடக்க இன்னொன்று நிகழ்ந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் பத்தாண்டு நினைவுகள் உலகெங்கும் தமிழ்மக்களினால் அனுட்டிக்கப்படும் நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றிய பேச்சு உலகளாவிய இரீதியில் நிகழ்ந்துள்ளது.

சிறிலங்கா தேசம் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வினைக் கொண்டுவந்திருக்குமேயானால், அந்த நாடு உலகின் மேலாதிக்க சக்திகளின் ஆயுத விளையாட்டுத் தளமாக இந்தக்கால கட்டத்தில் மாற்றம் பெற்றிருக்காது.

அமெரிக்கா, சீனா போன்ற உலக ஆதிக்க சக்திகளின் வலையில் சிக்கியுள்ள சிறிலங்கா அரசியல் தலைவர்கள் நாட்டின் நலனைப்பற்றி அக்கறை கொள்ளாமல் தங்கள் எசமானர்களின் விருப்பங்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்த வேளையில் 'முள்ளிவாய்க்கால் முடிவல்ல' எனக் கூறப்பட்டு மக்கள் தேற்றப்பட்டார்கள். அந்த சொற்பிரயோகம் பொய்யாகிப் போய்விடவில்லை.

அப்பாவி மக்களைப்பலிகொண்ட சர்வதேச பயங்கரவாதம் நாட்டில் நிகழும் வகையில் பாதுகாப்பு நிலை இருந்திருக்கிறது என்று கூறிவிட முடியாது.

இந்தியாவின் புலனாய்வுத்துறையினரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை ஏன் அலட்சியம் செய்யப்பட்டது என்பதற்கான காரணம் கண்டறியப்படவில்லை.

நாட்டில் மீண்டும் அவசரகால நிலை! அவ்வப்பொழுது ஊரடங்கு உத்தரவுகள். எந்த நேரத்திலும் ஓர் இனக்கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் சகல தரப்பினரிடமும் குடிகொண்டுள்ளது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் 36 ஆண்டுகள் இனக்கலவரம் என்ற அச்சம் இல்லாமல் நாட்டில் மக்கள் வாழ்ந்தார்கள். கடந்த 13.05.19 அன்று நாட்டில் ஜனாதிபதி இல்லை!

சமுகவலைத்தளப் பதிவு ஒன்று குருநாகல் பகுதியில் கலவரத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த பகல் வேளையிலேயே வர்த்தக நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டு எரியூட்டப்பட்டன. காடையர்கள் தமது கைவரிசையை வீதிகளில் காட்டி நின்றனர். காவல்துறையினர் பார்த்து நிற்க தாக்குதல்கள் நிகழ்ந்தன.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச நாட்டில் மீண்டுமொரு ஜூலை 83ஐ ஏற்படுத்திவிட வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தார். தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமது உறவுகளை நினைந்துருகும் நாளில் நாடே பற்றி எரியும் நிலை தோற்றம் பெறுகிறது.

முள்ளிவாய்க்கால் முடிவல்ல!

உங்கள் தொடர்புகட்கு

மின்னஞ்சல் : press@ibctamil.com

பிரித்தானியா சிறீ	+44 7832 769522	இத்தாலி ரஞ்சன்	+39 331 8595851
பிரான்ஸ் கலையகம்	+33 7558 55555	நோர்வே விக்கி	+47 998 95 050
யேர்மனி சுமித்திரன்	+49 151 27990990	டென்மார்க் கி.செ.துரை	+45 266 58809
சுவிஸ் ஜீவன்	+41 78 300 00 47	பெல்ஜியம் ரூபன்	+32 4888 38808
நெதர்லாந்து நாதன்	+31 6 1418 0532	கனடா கலையகம்	+1 416 477 2550
சிங்கப்பூர் கோபி	+65 9829 1944	இலங்கை கலையகம்	+94 21 2030 600
இந்தியா கலையகம்	+91 44 4203 3666		

பிரசுரம்

London Tamil Media Ltd.
Unit 1 10 Stonefield Way, Ruislip, Middlesex,HA4 0JS, United Kingdom.
Tel: +44 203 794 4000 • Email : info@ibctamil.com

முள்ளிவாய்க்காலின் 10 ஆண்டுகளில்...

சுதந்திரம்-இறைமை தீர்வைப்பெறும் இலக்குக்கு நகர்ந்தோமா?

இலங்கையை எவன் ஒருவன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றானோ அவன் இந்து சமுத்திரத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். இது பனிப்போர்க்காலத்தில்நிலவியகோட்பாடு.பனிப்போரின் முடிவில் இந்தக்கோட்பாடு தன்னைத்தானே கொஞ்சம் உறை நிலைப்படுத்தியிருந்தது.

ஆனால் இப்போது இதே இலங்கையை மையப்படுத்தி கடந்த ஏப்ரல் 21 இல் வெளிப்பட்ட ஐ. எஸ்ஸின் நாசகாரத்துக்குப்பின்னர் ஐ.எஸ்ஸின் நாசகாரத் தலைவர் பக்தாதியும் ஒரு செய்தியைக் கூறினார்.

சிரியாவில் தமதுபிடியில் இறுதிக்கோட்டையாக இருந்த அல்-பகூஸ் பகுதி அமெரிக்கக் கூட்டுப்படையினரிடம் இழக்கப்பட்ட நகர்வுக்கு பழிவாங்கவே இலங்கையில் உயிர்த்த ஞாயிறுதினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதே இந்த செய்தி.

இதன் பின்னரும் இந்து சமுத்திரத்தை மையப்படுத்திய சில அக்மார்த்தனமான ஐ.எஸ் செய்திகள் வந்திருக்கின்றன. இந்திய காஷ்மீரில் தமக்குரிய பிராந்தியம் ஒன்றை உருவாக்கிக் கொண்டதாகவும் அதன் பெயர் விலாயா ஹிந்த்(Wilayah of Hind) என முதலில் ஒரு செய்திவந்தது.

அதற்குப்பின்னர் பாகிஸ்தானில் சீனா தனது பட்டுப்பாதைக்காக பில்லியன்களைக் கொட்டி உருவாக்கிய குவாதர் துறைமுகத்துக்கு அருகே உள்ள 5 நட்சத்திர விடுதி மீதும் ஒரு ஐ.எஸ் அனுதாபத் தாக்குதலை பலூசிஸ்தான் விடுதலை ராணுவம் நடத்தியதான செய்திவந்தது.

இவையெல்லாம் இலங்கைத்தீவு அமைந்துள்ள இந்துமா கடலை அண்மித்து இடம்பெறும் பூகோளப்போட்டியின் புதிய நாசகார அத்தியாயங்கள் குறித்து வெளியுலகுக்கு அனுப்பப்படும் செய்திகள்.

ஆனால் இந்தவேளை இதேதீவில் இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தேசிய இனத்தின் மீது நடத்தப்பட்ட குரூரமான ஒரு நாசகார ஆட்டத்துக்குரிய பொறுப்புக்கூறப்படாமலேயே ஒருதசாப்தம் கடக்கின்றது.

பொறுப்புக்கூறல் என்றால் அது தனிமனிதரிடம் கோரும் பொறுப்பல்ல மாறாக அனைவரையும் சார்ந்த கூட்டுப்பொறுப்பாகவே மாறுகின்றது சிறிலங்கா அரசாங்கத்துடன் தொடர்புடைய பொறுப்புக் கூறல் பெரும் படுகொலைகள், கடத்தல்கள், காணாமல்போதல்கள் உடமை அழிகள் என தமிழர் இருப்பை நாசமாக்கிய வன்முறைசார்ந்துள்ளது

மறுபுறத்தே தமிழரான நாமும் பொறுப்புக்கூற வேண்டும் சுதந்திர மனிதர்களை தண்டிக்க இயலாது எனக்கூறுகிறது. உலகத்தின் பெரும் பட்டயமான மாக்னா கார்த்தா. ஆனால் இலங்கைத்தீவில் இதைப்போன்ற சுதந்திர மனிதர்கள் மிகமோசமாக 2009 இல் அனைத்துலக வல்லாதிக்கங்களால் தண்டிக்கப்பட்டார்கள். மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டார்கள் ஆனால் இந்த அழிவுகளுக்குப் பின்னரான அடைவுகளை பெறமுடியாத நிலைக்கு தார்மீகமாக தமிழர்களும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்.

ஏனெனில் உள்ளதும் போச்சடா நொள்ளைக் கண்ணா என நிலையை மாற்றிவிட்டோம். ஒருபேரழிவுகளுக்குபின்னர் உருவாகவேண்டிய அடைவுகளைப்பெற காலத்தின் தேவைகருதி ஒரு மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு பதிலாக மல்லின அரசியல் மற்றும் பதவிகளுக்கான அடிபிடிகளையும் வெளிப்படுத்திநின்றோம். இடைக்கிடையேபலெதெநசியோன் எனப்படும்உலகின் மனித உரிமை அரங்கின் உள்ளேயும் வெளியேயும் நின்றோம் அதனையும் மறுப்பதற்கு இல்லை.

என்ன செய்வது? காலம்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றதே என இப்போது ஒருகருத்தியலை முன் வைக்கலாம் ஆனால் இந்தக் கருத்தியலுக்கு அப்பால் ஆளுமை மிக்க மனிதர்களின் குறுக்கீட்டு முடிவுகளாலும் சில வரலாறுப்பதிவுகள் தீர்மானிக்கப்பட்டன.

2009 க்கு முன்னர் ஈழத்தமிழினத்தை வழிநடாத்திய தலைவன் ஊடாக இந்த கருத்தியலை நேரடிச்சாட்சியாக கண்ட இனம் இது மே 18 இன் பத்தாம் ஆண்டு நினைவுக்குகாக நிச்சயமாவே எமது நெஞ்சார்ந்த துக்கிப்பு பிலாக்கணங்களை மே 18 என்ற தினத்தில் செய்துவிட்டு கடந்து சென்று விடுவோம்.

இது நிச்சயமாவே செய்யவேண்டிய நெஞ்சார்ந்த துக்கிப்புத்தான். ஏனெனில் கூட்டு நினைவுறுத்தல்கள் ஒரு மக்கட்கூட்டத்தின் ஆத்மபலத்தில் காலம் காலமாக நிலைத்து நிற்கக் கூடியவை. வரலாற்றை மாற்றும் சக்தி கொண்டவை. இதனை யூதர்களும் ஆர்மேனியர்களும் இன்றுவரை தமது கூட்டு நினைவுறுத்தல்கள் ஊடாக நிறுவிவருகின்றனர்.

ஆனால் மே 18 அல்லது நவம்பர் 27 கூட்டு நினைவுறுத்தல்களுக்கு அப்பால் இந்த 10 ஆண்டுகளில் தமிழினத்துக்கு கிட்டிய அடைவுகள் யாது?

முள்ளிவாய்க்கால் நாசகாரத்தில் கொல்லப்பட்ட தமிழினத்துக்கு இல்லையென்றால் வெற்றிபெற்றால் எங்கள் கேடயங்கள் வரும் இல்லையேல் கேடயங்கள் மீது எங்கள் உடலங்கள் கிடக்கும்! என வரலாற்றில் கூறிய சுபார்தானிய வீரர்கள் போலவே முள்ளிவாய்க்கால் வரை போராடி வீழ்ந்த தமிழர் படையின் தியாகத்துக்கு இந்த 10 ஆண்டுகளில் கிட்டிய அடைவுகள் யாது?

ஆனால் முள்ளிவாய்கால் என்ற நாசகாரத்தின் பின்னர் ஈழத்தமிழினத்துக்கு கிட்டிய அங்கீகாரம் யாது? இந்த வினாவுக்கு உண்மை மனிதர்களாக பதில் உரைத்தால் கிட்டுவது சாதகமான பதில் அல்ல. ஒரு தேசத்தின் அனைத்துலக அங்கீகாரம் என்பது அதன் அரசியல் சமூக பொருளாதாரப்பலம் ஆகிய காரணிகளின் அடிப்படையில் வருவது. அவ்வாறான காரணிகளை உள்ளூரிலும்உலகஅரங்கிலும்இந்தப்பத்துவருடங்களில் தமிழினம் ஏறுமுகப்படுத்தியிருக்கிறதா?

முள்ளிவாய்கால் பேரழிவுக்குப்பின்னர் தாயக மக்களின் தேசியப்பிரச்சினைக்கு சுதந்திரமும் இறைமையுமுடைய தனியரசு ஒன்று மட்டுமே தீர்வாக அமைய முடியும் என்பதை அறவழியில் நிருப்பிக்கவாவது தமிழினத்திடம் தற்போது ஆற்றல்மிக்கதலைமைத்துவம் ஒன்று உள்ளதா?

முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்குப்பின்னரான நான்காவது ஆண்டில் தமிழீழ சுதந்திர சாசனம் முரசறையப்பட்டது ஆனால் இதனை அன்று முரசறைந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இன்றைய நிலையாது?

இல்லையென்றால் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்தப்பிரகடனத்தை செய்திருந்தாலும் கூட இதனை ஏனைய அமைப்புகள் ஏன் ஏற்கவில்லை.

இதற்கும் அப்பால் தாயக மக்களுடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அரசியல் சக்திமையங்களின் குவியநிலை என்ன?

உன்னையே நீ அறிவாய் தத்துவத்தின் ஊடாக இது எல்லோருக்கும் பொருந்தும். ஆகமொத்தம் ஒரு தேசத்துக்குரிய அனைத்துலக அங்கீகாரத்தைப்பெறுவதற்கு அதன் அரசியல் சமூக பொருளாதாரப்பலத்தை பெறுவதற்குரிய செயலூக்கத்தின் அடைவில் முள்ளிவாய்க்கால் நினைவின் 11 ஆம் ஆண்டிலாவது முன்னகர்ந்திருப்போமா?

ஒரு பொறிமுறை செயலாற்றும் போதே அதன் நகர்வுகள் முன்னிலைக்கு வரும் இது பொறியியல் விதிமட்டுமல்ல தமிழர்களின் அரசியல் பொறிமுறைக்கும் உரிய விதிதான்.

அப்படியாயின் முள்ளிவாய்க்கால் பேரழிவின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளின் தார்மீகத்துடன் எங்கள் நெஞ்சங்களில் கை வைத்து ஒரு வினாவைத்தொடுப்போம்.

தாயகமக்களின் தேசியப்பிரச்சினைக்கு சுதந்திரமும் இறைமையும் உடைய ஒரு தீர்வைப்பெறும் இலக்கைநோக்கி நாம் நகர்ந்தோமா? நகர்கின்றோமா? இனியாவது நகர்வோமா?

குறள் பால்: **அறத்துப்பால்** குறளியல்: **துறவறவியல்** அதிகாரம்: **அருள் உடைமை** குறள்: 242



நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.

நல்லநெறியில் வாழ்ந்து, நமக்கு உதவும் அறம் எது என ஆய்ந்து, அருளுடன் வாழ்க; எல்லாச் சமய நெறிகளால் ஆய்ந்தாலும் அருளே நமக்குத் துணையாகும்.

பத்திரிகையில் வெளியாகும் செய்தி, விபரங்கள் அனைத்தும் தவறுகள் இல்லாது பிரசுரிக்க, ஐபிசி தமிழ் பத்திரிகையானது அதன் வரையறையுள், தன்னால் முடிந்தளவு பிரயாசிக்கும். அதனையும் மீறி தவறான விபரம் பிரசுரிக்கப்படும் பட்சத்தில் - இதழ், பக்கம், தவறான விபரம் என்பனவற்றினை எமது மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.

நவிகேசன் நடராசா

ஐ.எஸ் அண்ட் சஹ்ரான் நாசகார கொம்பனி செய்த அழிச்சாட்டியம் எல்லா இலங்கை மக்களின்ரை ஈரல் குலையை ஒரு முறுக்கு முறுக்கினது உண்மைதான். ஆனா பத்து வருசத்துக்கு முந்தி இதேகாலப்பகுதியிலை முள்ளிவாய்க்காலிலையும் எங்கட சனம் துடிச்சது.

ஆனா ஐ.எஸ் அண்ட் சஹ்ரான் கொம்பனி செய்த ரணகளத்திலையும் சந்தடி சாக்கிலை கந்தப்போடிக்கும் காற்பணம் எண்ட கணக்கா தமிழரின்ரை விசயத்திலை இளக்கமா? மூச்! இறுக்கம் இறுக்கம் தான் எண்ட கணக்கா சிங்கக்கொடி சீருடையார் நிக்கினம்.

சும்மா ஒரு சாட்டுக்கு, அவசரத்துக்கு முன்னாள் போராளியளின்ரை உதவி தேவையெண்டு காட்டிப்போட்டு பிறகு பல்கலையிலை கைவைக்கினம். தலைவரின்ரை பிறந்தநாளுக்கு கேக் வெட்டினா குற்றம் எண்டு வழக்குப்போடினம்.

சிலாவத்துறை நேவிகாம்பை ஒருக்காலும் எடுக்க மாட்டம் எண்டு சொல்லினம். ஆக மொத்தம் ஐ.எஸ் அண்ட் சஹ்ரான் நாசகார கொம்பனியின்ரை பாட்டு வாய்ச்சதாலை சிங்கக்கொடியார் தமிழரின்ரை தலையிலை மிளகாய் அரைக்கினம்.

பழம்நழுவி பாலிலை விழுந்து அதுவும் நழுவி வாயிலை விழுந்த கதையாக கோத்தபாயர் குசியிலை இருக்கிறாராம். உலக காவற்கார வீட்டுக்கார ரொபேட் ஓ பிளேக்கார் தன்ரை (முன்னைய) வித்துவத்துக்கு சேர்ட்டிபிக்கற் குடுத்ததிலை அவருக்குப் புளுகமாம்.

ஓ பிளேக்கரை.. உங்களுக்குத் தெரியுந்தானே? கொஞ்ச வருசத்துக்கு முந்தி சிங்கக்கொடியார் வீட்டிலை பெரியஇடத்துத்; தூதரா இருந்தவர். பிறகு பெரிய இடத்து ராஜாங்கத்திலையும் தெற்கு சக மத்திய ஆசியச் செயலாளரா இருந்தவர்

அப்பிடிப்பட்டவர் போனகிழமை கொழும்பிலை நடந்த நிகழ்வு ஒண்டிலை மைக்பிடிச்சபோது,கோத்தபாயபாணி,நாட்டுக்கு இப்பதேவை எண்டாராம். அத்தோடை கோத்தபாயரின்ரை புலனாய்வுக்காரர் வலுதிறமானவை எண்டும் சொன்னாராம்

பிறகென்ன இதைக்கேட்ட கோத்தபாயர், அடுத்த எலக்சனுக்கு இது ஒரு சேர்ட்டிபிக்கற் என குசிப்பட்டாராம்.

இதுக்குள்ளை, உங்களுக்கு இன்னொரு விசயம்; தெரியுமே? இந்தக்கிழமை சிங்கக்கொடி வெளிவிவகார திலக்மாரப்பனரார் ரீமுக்கும் அமெரிக்க ராஜாங்க மைக் பொம்பியோ ரீமுக்கும் வோசிங்டனிலை குசுகுசுபேச்சு நடக்கப்போகுதாம் இந்தக் குசுகுசுப்பேச்சுக்குரிய நிகழ்ச்சிநிரல்யாதெனில்,பயங்கரவாத ஒழிப்பு!

ஐயோ உள்ளதும் போச்சே! உல்லாசப் பயணத்துறையும் போச்சே எண்ட கவலையிலை இருக்கிற சிங்கக்கொடிப் பிரதமர் ரணிலார், எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு இடையிலை உல்லாசமான பயணத்துறையை கட்டியெழுப்பி வெளிநாட்டுக்காரரரை இழுக்கிறதுக்குப்பெரும் பிரயத்தனப்படுகிறார்.

இதுக்காக உயிர்குடிச்ச ஞாயிறன்று இலங்கையிலை பலியான வெளிநாட்டுக்காரரின்ரை உரித்துக்காரருக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலரை இழப்பீடா வழங்க ரணிலார் தரப்பு முடிவு செய்திருக்கு. ஆனால், காசெல்லாம் பெரிசில்லை உயிர்தான் பெரிசு என சொல்லுற வெளிநாட்டுக்காரர்களோ இப்போதைக்கு சிங்கக்கொடியார் பக்கம் வரமாட்டம் எண்டு அடம்பிடிக்கினம்.

இதன் விளைவு என்ன தெரியுமே? கிட்டடியிலை கொழும்பிலை தரையிறங்கின சுவிஸ் எயார் விமானத்திலை இருந்து ஒரேயொரு பயணிதானாம் இறங்கினார்.

இதுவும் ஐ.எஸ் அண்ட் சஹ்ரான் நாசகார கொம்பனிக்கதைதான். உயிர்குடித்த ஞாயிறு குண்டுதாரிகளுக்கும் ஹிஸ்புலா- தீன் அரசியல்வாதிகளுக்கும் இடையிலைகனெக்சன் இருக்குதெண்டுகதையள் வந்தவுடனை எங்கப்பா குதிருக்குள்ளை இல்லையெண்ட கணக்கா அமைச்சர் தீனார் கொதிச்சுப்போனார். யானோ குற்றவாளி எண்டவர், வேணுமெண்டா நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைச்சு என்னை விசாரியுங்கோவன் எண்டு சொல்லுறார்

சும்மா சொல்லக்கூடாது சிக்கலுக்கு உள்ளாகியுள்ள ஹிஸ்புலா- தீன் அரசியல்வாதிகளுக்கும் உதவ முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் குடிசார் தலையள் எல்லாரும் ஒரேஅணியிலைநிக்கினம். ஆனால் எங்கடை தமிழ்அரசியல்வாதியளோ தமிழரின்ரை விசயத்திலை இப்ப மட்டுமில்லை எப்பவும் இழுபாணி- சப்பாணி அல்லது குடுமிபிடி தான்!





பாக்கிஸ்தானிய அகதிகளை வடக்கில் தங்க வைக்கும் முயற்சியை வரவேற்கலாமா?



அரசியல்
கோபி இரத்தினம்

நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அங்கிருந்து அச்சம் காரணமாக வெளியேறியதையடுத்து அவர்கள் நீர்கொழும்பு காவல் நிலையத்திலும், அப்பகுதியிலுள்ள இரண்டு அஹமதி பள்ளிவாசல்களிலும் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கியிருக்கும் பள்ளிவாசல்களுக்கு சிறிலங்கா காவல்துறை இராணுவமும் பாதுகாப்பு வழங்கிவருகின்றன. இந்நிலையில் இந்த அகதிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறு பௌத்த பிக்குகளும் உள்ளூர்வாசிகளும் கோரிக்கை விடுத்துவருகிறார்கள்.

இவ்வாறு நீர்கொாழும்பில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் எண்ணிகை பற்றி மாறுபட்ட தகவல்கள் வெளிவந்துள்ளன. அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் (UNHCR) வெளியிடப்பட்ட தகவல்களின் படி 1600 அகதிகள் வரை தமது பதிவில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் அகதிகளை ஏனைய இடங்களிற்கு மாற்றுவதனை சிங்கள கடும்போக்காளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். அதனால் இவர்களை வடக்கில் தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் தங்கவைப்பதற்கு வடமாகாண ஆளுனர் சுரேன் இராகவனும், தென்மாகாண சபையின் ஆளுனர் கீர்த்தி தென்னக்கோனும் மாத்திரம் உடன்பட்டிருக்கிறார்கள். இருப்பினும், இது விடயத்தில் இறுதிமுடிவினை சிறிலங்கா அரசாங்கம் இன்னமும்எடுக்கவில்லை எனத் தெரியவருகிறது. அதேசமயம் இந்த அகதிகளை நாட்டிலிருந்து வெளியேற்ற உதவுமாறு சர்வதேச அமைப்புகளை சிறிலங்கா அரசாங்கம் கோரியிருக்கிறது.

மேற்படி அகதிகளில் பெருமளவிலானவர்கள் பாக்கிஸ்தானில் வாழும் அஹமதி மற்றும் சியா இஸ்லாமிய மதப்பிரிவுகளைப் பின்பற்றும் ஹசாரா இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்கள். இன்னொரு தொகுதியினர் கிறிஸ்தவர்கள். இவர்களைத் தவிர மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் என பாக்கிஸ்தான் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுபவர்களும் அடங்குகின்றனர். இஸ்லாத்தின் அஹமதி மதப்பிரிவினர் தமது இறைதூதராக அஹமது என்பவரைக் கருதுவதாகவும் ஏனையவர்கள் முஹம்மதுவை இறைதூதராக ஏற்றுக்கொள்வதனால் அஹமதியர்களை முஸ்லீம்கள் அல்லர் என பாக்கிஸ்தான் அரசாங்கம் 1974 இல் அரசமைப்பு மூலமாக அறிவித்தது. இஸ்லாமிய சுன்னி மதப்பிரிவினரின் அதிகாரம் செலுத்தும் பாக்கிஸ்தானில், அஹமதியர்கள் மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்கள். இந்துக்கள், சியா பிரிவு இஸ்லாமியர்கள் எனச் சிறுபான்மையினர் நீண்ட காலமாகவே ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். அஹமதி பிரிவினர் இஸ்லாத்திற்கும் எதிரானவர்கள் (காபிர்கள்) என பாக்கிஸ்தானில் உள்ள அடிப்படைவாதிகள் கூறிவருவதனால் இக்குழுமத்தைச் சேர்ந்தவர்கள் உயிரச்சம் காரணமாக ஆயிரக்கணக்கில் நாட்டை விட்டு வெளியேறிவருகிறார்கள்.





2012-14 காலப்பகுதியில் 1200 பாக்கிஸ்தானிய அகதிகள் சிறிலங்காவிற்கு வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெசாவர் நகரில் அமைந்திருக்கும் All Saints Church தலிபான்களால் தாக்கப்பட்டதையடுத்து இந்த அகதிகளின் வருகை அதிகரித்தாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரை, ஐ.நா. வின் அகதிகளுக்கான உடன்படிக்கை (951 Convention relating to the Status of Refugees and its 1967 Protocol) எவற்றிலும் அது கையொப்பமிடவில்லை. ஆகவே நாட்டுக்குள் வந்து அகதித் தஞ்சம் கோருபவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு அதற்குக் கிடையாது. இருப்பினும் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் வேண்டுகோளை ஏற்று இவர்களது தஞ்சக் கோரிக்கையை ஏற்றுகொள்ளும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் வரை தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கு இணங்கியுள்ளது.

இந்த அகதிகளை தனித்து UNHCR நிறுவனமே பராமரித்து வருகிறது. கிடைக்கப்பட்ட தகவல்களின்படி தனிநபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு இலங்கை ரூபா 12,000ம் குடும்பமொன்றிற்கு இலங்கை ரூபா 20,000ம் வழங்கப்பட்டு வருகிறது. ஐ.நா. வழங்கும் இக்கொடுப்பனவிற்கு மேலதிகமாக சிறிலங்கா அரசாங்கம் எந்த உதவிகளையும் செய்வதில்லை. அகதிகளின் குழந்தைகள் கல்விகற்பதற்கான வசதியோ, வளர்ந்தோர் தொழில் செய்வதற்கான அனுமதியோ சிறிலங்கா அரசாங்கத்தால் வழங்கப்படுவதில்லை.

நிர்கதிக்கு உள்ளாகியிருக்கும் இந்த அகதிகளை வவுனியாவில் தங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்வதாக செய்தி வெளியான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டதிலிருந்து ஒரு புறம் ஆதரவும், இன்னொருபுறம் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இம்முயற்சியினை வரவேற்றிருக்கிறார் ஆனால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதனும், சார்ல்ஸ் நிர்மலநாதனும் தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர். அதுபோன்று வவுனியா மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளின் தவிசாளர்களும் தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

அகதிகளை வவுனியாவில் தங்க வைப்பதற்கு தமிழ்மக்கள் ஆதரவு வழங்கவேண்டும் எனக் கோருபவர்கள், உலகின் பல நாடுகளில் ஈழத்தமிழர்கள் அகதித் தஞ்சமடைந்து வாழ்வதனைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தமிழர்கள் மற்றைய நாட்டு அகதிகள் மீது இரக்கம் காட்டவேண்டும் எனவும் தமது பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கு தார்மீக ஆதரவினை வழங்கவேண்டும் எனவும் கூறுகிறார்கள். ஈழத்தமிழர்களில் பெரும் பகுதியினர் தமது வாழ்நாளில் ஒருதடவையாவது அகதி வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். ஒருவேளை தமிழர்கள் அகதிகளாக இடம் பெயராமிலிருந்திருந்தாற் கூட அகதிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டிய மனிதாபிமானக் கடமை அவர்களுக்குண்டு. ஆகவே பாக்கிஸ்தானிய அகதிகளை வவுனியாவில் குடியமர்த்தும் விடயத்தில் அவர்கள் சாதகமாக நடந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்ப்பதில் நியாயமுண்டு. இருப்பினும் நடைமுறையில் இது சாத்தியமானதா? பின்விளைவுகளை கருத்தில் எடுக்காமல் வெறுமனே உணர்வுபூர்வமாக இவ்விடயத்தை அணுகமுடியுமா?

குறித்த அகதிகள் எந்நேரத்திலும், சிங்கள பௌத்த இனவாதிகளினதும், வகாபிச இஸ்லாமிய தீவிரவாதிகளினதும் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய அபாயம் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த அகதிகளுக்கு எதுவித பாதுகாப்பினையும் தமிழ்மக்களால் வழங்க முடியாது. தமக்கென ஒரு நடைமுறை அரசை வைத்திருந்த காலத்தில் இவ்வாறான கோரிக்கை வைக்கப்பட்டிருப்பின் அதனை சாதகமாக பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். இன்று எல்லாவற்றையும் இழந்து நிற்கும் தமிழர்கள் தங்களது பாதுகாப்பினையும் கேள்விக்குள்ளாக்க விரும்பமாட்டார்கள். அதுபோன்று இந்த அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது என்ற சாக்கில் இராணுவத்தினர் தமது பகுதிகளில் நிலைகொள்வதனையும் தமிழ்மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதனை வெறுமனே கொள்கை அடிப்படையில் அறிக்கை விடும் தரப்புகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.


TEKNO
PROUDLY PRESENTS
IBC தமிழா
TORONTO 2019
POWERED BY
IDEAL.VENTURES
SPONSORED BY
TNEXT
CO-SPONSORED BY
MELENI DAVID
VIBRANT HOSPITALITY GROUP
SATURDAY
JUNE 29TH AT 5PM
SCOTIABANK ARENA
ஒரு மேடை
ஆயிரம் கலைஞர்கள்
BUY YOUR TICKETS NOW
IBCTAMIL.COM/CANADA
PLATINUM
SkyRoute TRAVEL SERVICES INC.
CTS BUILDING SUPPLIES LTD
NAVA WILSON
5SPICE
GOLD
Southern Aroma
Blue Ocean
CSI
SILVER
Aalayaa
SAN PRO SIGNS
NEW OCEAN
Shinol
DEVADAS LAW
NEW SPICELAND
BRONZE
Netwyn.Place
MEDIA PARTNERS
CTBC
ஈழநாடு
Monsoon Journal
YORK
woodside
ekuruvi
தமிழ்வின்
Lankasri
Cine Ulagam
EVENT PARTNER
ARYA
IBC தமிழ்

தொடர்கிறது....

அந்த நேரம் இரு அணிகளாக பிரிந்திருந்த மருத்துவர் காந்தனின் மருத்துவ அணி, பிரிகேடியர் சொர்ணம் அவர்களுடன் நிலையெடுத்திருந்த மருத்துவர் யோன்சனின் அணியை வந்து சந்திக்கிறது. அப்போது அங்கே இருந்த தளபதிகளில் ஒருவரான மகிந்தன் இரு மருத்துவ அணிக்கும் உடனடி பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்கிறார். பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு காயப்படும் போராளிகளுக்கான சிகிச்சை இடங்கள் ஒழுங்குபடுத்துப்படுகின்றன. இதே வேளை சிங்களப்படைகளும் இவர்களின் தங்கும் இடத்தை தேடி அலைந்து கொண்டிருந்தனர். அன்றைய இரவுக் பொழுது விடிந்திருந்தது.

அனைவரும் எதோ ஒன்றுக்கான பணியில் இருக்க மருத்துவர் காந்தன் தனது தாடியை மழித்து புதிய உடை ஒன்றை அணிகிறார். அதைப் பார்த்த தளபதி சொர்ணம் என்ன காந்தன் கல்யாணத்துக்கு எங்காவது போறியா...? புதுசா வெளிக்கிடுறாய்?



விடுதலையின் இறுதி வலிந்து தாக்குதல்

வெற்றுப் புன்னகையோடு அனைவரும் துப்பாக்கிகளை பற்றிக் கொள்ள மருத்துவர் காந்தன் சாதாரணமாக புன்னகைத்து விட்டு தன் உடையை சரிபார்த்துக் கொள்கிறார்.

அப்போது வந்து சேர வேண்டிய இன்னும் ஒரு தொகுதிப் போராளிகள் அவ்விடத்துக்கு வந்து சேர, மீண்டும் ஒரு முன்நகர்வுக்கான ஒழுங்குகளை செய்கிறார் கட்டளைத் தளபதி சொர்ணம் அவர்கள். அதன்படி அருகில் இருந்த ஒரு முகாம் ஒன்றை இலக்கு வைத்து தாக்கி அழித்துக் கைப்பற்றுகிறார்கள் போராளிகள். அச்சண்டை பயங்கரமாக இருந்தாலும் போராளிகளின் பக்கத்தில் பாரிய சேதங்கள் எதுவும் வரவில்லை. அப்படைமுகாம் வீழ்ந்த பின் மீண்டும் எமது படையணிகளால் முன்னாள் அடிக்கப்பட்டிருந்த ஒரு அணையை நோக்கி படையணி நகர்கிறது.

அப்போது தளபதி சொர்ணம் அவர்களுடனான போராளிகள் முன்நிலையில் நின்று சண்டை பிடித்தபடி அணையை நோக்கி நகர்ந்து செல்ல பின்னணியில் இருந்த மருத்துவ அணி மீண்டும் இரண்டு அணிகளாக பிரிந்து மருத்துவர் யோன்சனின் அணி சொர்ணம் அவர்களை நோக்கியும், மருத்துவர் காந்தனின் அணி வேறு ஒரு பகுதியை நோக்கியும் நகர்கின்றது. அப்போது குறிப்பிடப்பட்டிருந்த அணை இருந்த பகுதிக்கு சென்று கொண்டிருந்த போராளிகள் மீது மூர்க்கமான தாக்குதலை செய்கிறது சிங்களப்படை. பல வீரச்சாவுகள், பல காயங்கள் என போராளிகள் வீழ்ந்து கொண்டிருக்க, அவர்களைத் தூக்கிக் கொண்டு அணையை நோக்கியே நகர்கிறது அப் போராளிகளின் அணி.

அங்கே குறிப்பிட்ட இடத்தில் புலனாய்வுத்துறைப் படையணிப் போராளி கலை தனது அணியுடன் நிற்கிறார். அவரிடம் தளபதி நிற்கும் இடத்தை கேட்டறிந்து கொண்டு நகர்ந்த மருத்துவ அணியையும் போராளிகளையும் இலக்கு வைத்து சிங்களத்தின் குறிச்சூட்டு (Sniper) அணி இயங்கிக் கொண்டிருந்தது. அத் தாக்குதலே பல போராளிகளின் இழப்புக்கு காரணமாகலாம் என்ற நிலையிலும், அவற்றைத் தாண்டி தளபதி சொர்ணம் அவர்கள் இருந்த இடத்துக்கு வந்து சேர்கிறது அப் போராளிகளின் அணி.

அங்கே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அணையோடு இருந்த ஒரு (இது என்ன வடிவம் தெளிவு படுத்தவும்) வடிவ பதுங்ககழியில் இருந்து கொண்டு கட்டளை வழங்கிக் கொண்டிருந்த சொர்ணம் அவர்களும், அதன் அருகே இன்னொரு பதுங்ககழியில் இருந்து கொண்டு கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த கணனிப்பிரிவின் சிறப்புப் பொறுப்பாளர் சார்ள்ஸ் அவர்களையும் அப் போராளிகள் சந்திக்கின்றனர். அப் போராளிகள் அணியில் மூன்று மருத்துவப் போராளிகள் மற்றும் ஒரு தொடர்பாடல் கண்காணிப்புப் (Monitoring) போராளி மற்றும் சண்டையணிப் போராளிகள், காயப்பட்ட போராளிகள் என பலர் இருந்தனர்.

அவர்கள் தளபதி சொர்ணம் அவர்களின் பதுங்ககழிக்கு அருகில் இருந்த சிறு பதுங்ககழியை பாதுகாப்பரணாக்கி அதற்குள் தங்கி இருந்த சிறு இடைவெளியில் தொடர்பாடல் கண்காணிப்புப் போராளி அவசரம் அவசரமாக அனைவருக்கும் எச்சரிக்கை விடுகிறான்.

“10 நிமிடங்களில் இந்த இடத்தில் பெரும் எடுப்பிலான தாக்குதல் ஒன்றை செய்வதற்குத் திட்டமிடுகிறான். பல்முனைத் தாக்குதலாக இருக்கும். அனைவரும் கவனமாக இருங்கள்”

இதைக் கேட்ட போராளிகள் தம்மால் முடிந்தவரை தம்மை பாதுகாத்துக் கொள்ள காப்பெடுக்கிறார்கள். விமானப்படையின் கிபிர் மற்றும், மிக் விமானங்கள் முதல் எதிரியிடம் இருந்த அத்தனை மோட்டார் வகை எறிகணைகளும் அப்பிரதேசத்தை சுற்றி தாக்குதலைச் செய்தன. 10 நிமிடங்களுக்கு மேலாக நீண்ட அந்தத் தாக்குதல் இவர்களின் இடத்திற்கோ அல்லது மற்ற போராளிகள் நின்ற பகுதிக்குள்ளோ நடத்தப்படவில்லை. அதனால் மீள் ஒருங்கிணைப்புச் செய்து மீண்டும் ஒரு தாக்குதலைச் செய்ய திட்டமிடுவதாக கண்காணிப்புப் போராளி தெரிவிக்கிறான். அவனின் கூற்றைப் போலவே சரியான இலக்கு நோக்கி கடுமையான தாக்குதலைச் செய்தது. சிங்களப்படை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதியான வலிந்து தாக்குதல் வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருந்த அத் தருணத்தில் நடக்கவே கூடாத அந்த சம்பவம் நடக்கிறது.

சிங்களத்தின் பல்முனைத் தாக்குதல் ஓய்வடைந்த போது மருத்துவப் போராளிகள் தங்கி இருந்த பதுங்ககழியில் இருந்த 10 க்கு மேலான போராளிகளில் 5-6 போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். ஓரிரண்டு பேர் தப்பி இருந்தனர். அதே நேரம் அருகில் இருந்த பதுங்ககழியில் இருந்து மகிந்தன் என்ற போராளி அவசரமாக மருத்துவரை அழைக்கிறான்.

“அண்ண 55 காயப்பட்டிட்டார் ஓடி வாங்கோ அண்ண...” பெரும் விருட்சமாக நிமிர்ந்து நின்று இப் போராட்டத்தின் சுமைகளைத் தாங்கிய பெருந் தளபதி தனது காலில் பாரிய காயமடைந்திருந்த தருணம், மீண்டும் எம் விடுதலைப் போராட்டம் முடக்கப்படப் போவதற்கான அறிகுறியை காட்டி நின்றது. ஆனாலும் அவர் தளரவில்லை. அக் காயத்தின் வேதனையோடும் தன் போராளிகளுக்கு இறுதிக் கட்டளையிடுகிறார்.

“என்னை சுடுங்கோடா.... என்னைக் காப்பாத்த என்று இதில யாரும் இருக்க வேண்டாம் என்னை சுட்டுப் போட்டு முன்னுக்கு அடிச்சுக்கொண்டுபோங்கோடா... கொஞ்சம் கூட பயப்பிடாதீங்க. தம்பி நிக்குது. தம்பிய கவனமா பாருங்கோ என்னை காப்பாத்த யாரும் மினக்கட வேண்டாம். முன்னுக்கு அடிச்சு இறங்குங்கோ... என்னை சுடுங்கோடா...”

அவர் கட்டளையிட்டுக் கொண்டிருந்த போதே அவரது உடலில் மருத்துவர் யோன்சனால் செலுத்தப்பட்டிருந்த வலிநிவாரணி அவரை நித்திரைக்கு கொண்டு சென்றது. அதன் பின் அங்கே சண்டையிடும் போராளிகளின் மனநிலை கொஞ்சம் தழும்பி இருந்தது. ஆனாலும் தம்பி என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சார்ள்ஸ் எடுக்கும் முடிவுகளை அங்கே நின்ற அனைவரும் ஏற்க தயாராகவே இருந்தனர். சண்டையை வழிநடாத்தும் தளபதிகள் அனைவரும் தம்பிக்கு சாதகமான முடிவுடனே இருந்தனர். சண்டையைத் தொடர்வதாகவும் நாம் அனைவரும் இறந்தாலும், இச்சண்டை இலக்கை அடையும் வரை தொடர வேண்டும் என்றும் தளபதிகள் போராளிகள் உட்பட தம்பியும் விரும்பினார். அதனால் சண்டை தொடர்ந்தது. ஆனாலும் தளபதி சொர்ணம் அவர்களை ஒரு அணியுடன் பின் நகர்த்துவதென்றும், ஏனையவர்களே சண்டையிடுவதென்றும் முடிவாகியது. அதனால் அந்த இடம் விட்டு நகர்ந்து வேறு இடத்தில் இருந்து கொண்டு சண்டையை தொடர முனைந்தார்கள் புலிகள். அதற்கிடையில் ஒருங்கிணைப்புச் செயலகத்தில் இருந்து வந்த தகவலின் படி உடனடியாக பிரிகேடியர் சொர்ணம் அவர்களை பின்நகர்த்துவதோடு மட்டுமன்றி அனைவரையும் பின் நகருமாறு அறிவுறுத்தப்பட்டது.

தளபதி சொர்ணம் அவர்களின் போராளி மகிந்தன் இந்த விடயத்தை “அண்ண! அம்மான் ஆளையும் கொண்டு உடனே பின்னுக்கு வரட்டாம். என்ன செய்வது?” என்ற வினாவோடு தெரிவிக்கிறார்.

அம்மானின் கட்டளைக்கு பணிந்து போராளிகள் இலக்கை நோக்கி செல்லாது மீண்டும் பின்நகர தொடங்குகிறார்கள்.

அப்போது மருத்துவர் காந்தனின் அணி, மருத்துவர் யோன்சனின் அணியிடம் இருந்து விடைபெற்று சார்ள்சுடன் நின்ற போராளிகளுக்கான மருத்துவ அணியாக நிலை கொள்கிறது. யோன்சனின் மருத்துவ அணியில் இருந்த போராளிகளும் கட்டளைத் தளபதி சொர்ணம் அவர்களின் பாதுகாப்புப் போராளிகளும் அவரின் கட்டளைகளுக்கு கீழ் போராடிக் கொண்டிருந்த அனைத்துப் போராளிகளும் பின்நகர்வதற்காக சென்று கொண்டருந்தார்கள். ஆனால் மூடப்பட்டிருந்த பாதைகளை திறந்து கடற்கரை வழியாக வெளியேற வேண்டி இருந்தது. அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதற்காக கடற்கரை வழியாக பெரும் சண்டை ஒன்றை தளபதி லோரன்ஸ் தலமையிலான போராளிகள் செய்து கொண்டிருந்தார்கள்.

மாலை நேரம் இரவாகிக் கொண்டிருந்த போது இருமுறை எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்து மீண்டும் மீண்டும் முயன்று கொண்டிருந்தார்கள் போராளிகள்.

அப்போது திடீர் என்று கண் முழித்த பிரிகேடியர் சொர்ணம் “டேய் என்னை சுட்டுப் போட்டு முன்னுக்கு அடிச்சுக் கொண்டு போங்கோடா என்னைக் காப்பாத்துறதுக்கு மினக்கட வேண்டாம்” என கட்டளை இடத் தொடங்கினார்.

மருத்துவர்களோ அவரின் கட்டளையை ஏற்க முடியாதவர்களாக அவரின் காயத்துக்கு மீண்டும் வலிநிவாரணி ஒன்றை ஏற்றியதன் மூலம் அவர் அமைதியாகின்றார். அந்த நேரம் கடற்கரை வழியாக பாதையும் உடைக்கப்பட்டு வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருந்தார் தளபதி லோரன்ஸ் அதனூடாக சிறு நீரேரி வழியாக நகர வேண்டி இருந்தது. ஆனாலும் தலை தூக்க முடியாத அளவு எறிகணைத் தாக்குதல்களும், சினைப்பர் தாக்குதல்களும் இருந்தன. அதனால் நிலத்தோடு நிலமாக தளபதி சொர்ணம் அவர்களை தூக்கியபடி z வடிவத்தில் நகர்ந்து சென்று வெளியேறினர் போராளிகள்.



தமிழின அழிப்பின் நினைவலைகள்
இரத்தினம் கவிமகன்

ஆனாலும் அந்த இடத்தில் பல போராளிகளை இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தது. நிலத்தோடு நிலமாக நகர்ந்தவர்கள் ஓரளவு தப்பித்துவிட எழும்பி ஓடி வெளியேற முனைந்தவர்கள் வீழ்ந்து கொண்டிருந்தார்கள். அவற்றையும் தாண்டி போராளிகள் வெளியேறி இருந்தனர். வெளிக் கொண்டுவரப்பட்டிருந்த பிரிகேடியர் சொர்ணம் அவர்களைப் பின்னணி மருத்துவநிலைக்கு கொண்டு சென்றார்கள் மருத்துவ அணியில் இருந்த மருத்துவப் போராளிகள்.

மருத்துவர் யோன்சன் உட்பட்ட போராளிகள் மீண்டு வர வேண்டிய மருத்துவர் காந்தனின் அணிக்காக கடற்கரையில் காவல் நின்றனர். ஆனாலும் மருத்துவர் காந்தனைக் காணவே இல்லை. அப்போது அங்கே வந்திருந்த சார்ள்ஸ் மருத்துவர் காந்தன் சிறுநீரேரிக்குள் இறங்கியதை தான் கண்டதாகவும், அதன்பின் எங்கே என்று பார்த்த போது காணவில்லை என்றும் தெரிவித்தார். பின்னால் வந்த தளபதி லோரன்ஸ்சும் அதே நிலையை கூறினாலும் கடற்கரையைத் தாண்டி வெளி வந்ததற்குரிய சாட்சியங்கள் இல்லை என்றும் தெரிவித்த போது தான் மருத்துவர் காந்தன் 08.03.2009 அன்று எம் மண்ணை நேசித்தாரோ அம்மண்ணுக்காக தன்னுயிரை தியாகித்து வீரச்சாவடைந்ததை புரிந்து கொண்டார்கள் போராளிகள்.

லெப்டினன் கேணல் காந்தன் உட்பட லெப்டினன் கேணல் கபிலன், கப்டன் நிலவரசி மற்றும் லெப் இன்மதி ஆகிய மருத்துவப் போராளிகளும் வீரச்சாவடைந்திருந்தனர். அத்தோடு இச்சண்டையின் வேவுப்போராளிகளான லெப் கேணல் விந்தன் உட்பட்ட பல போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர்.

வலிய படையணிகளின் உத்வேகத் தாக்குதல்களுடன் உலகம் வியக்க நிமிர்ந்து நின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைக்கான இறுதி போராட்ட வரலாறு தனது இறுதி வலிந்து தாக்குதலை சாளையூடாக தேவிபுரம் வரையிலான சண்டையுடன் முடித்துக் கொண்டது.

Uthayan Iyampillai
Sales Representative
Dir. : 416-827-1366
E-Mail : iuk2410@gmail.com
Website : www.iyamhomes.com

Century 21
Century 21 Green Realty Inc.,
Each Office Independently Owned & Operated
Off : 905-565-9565 Fax : 905-565-9522
6980 Maritz Dr. Unit 8, Mississauga ON L5W 1Z3


தமிழின
அழிப்பு நாள்
நினைவுகள்!
MAY
18

முள்ளிவாய்க்கால்:



ஆண்டு நீள்
அடுக்கடுக்காய் வருமே
ஆறா வடு நாட்கள்.

ஆற்றுப் படுத்தலுக்காய்
ஆங்காங்கே
அணி கட்டி நின்று
கன்னங்கள்
துடைப்போமே.

நாட் காட்டிப் பக்கமெலாம்
நனைந்து கிடக்குமே குருதியில்
நினைவழியா
நாட்களாய்.

மேடைகள் நிறுவி
விழிகள் முட்ட முட்ட துயரெலாம் கொட்டிக் கொட்டித்
தீர்த்து மூச்சு விடுவோமே.

பட்ட பாடு படும் பாடுகள் எண்ணிக்
கண்களில் நீர் பனித்து நிற்போமே.

சுடர் ஏந்திச் சோகித்தும்.

உறுதி எடுத்து நெஞ்சில் உரம்
ஏற்றியும்.

எழுச்சி உரைகளுக்கு நரம்புகள்
முறுகியும்.

துயர மொழிகளுக்கு
இதயம் உருகியும்.

உணர்வு மண்டலங்களில்
பீனிக்ஸ் குருவிகளாய்
ஒவ்வோர் உளமும் தீ முழுகித் தீ முழுகி
சாம்பல் பூத்து மீண்டிடுமே.

கூடுமிடத்து அருகருகாய் ஒன்றித்தும்.

அறியாதோராகினும் அருகுள்ளோர் முகங்கள் பார்த்து
கருத்தால்
புன்னகைத்தும்.

கையறு நிலைப் பங்காளர்களாய் நட்புப் பூண்டும்.

அப்போதைக்கு
மட்டுமாக
மனப்
புண்ணாற்றி.

சுய சமாதானம்
தாங்கி.

கூடுமிடத்
தொண்டர்
பகரும்
தேனீரும்
பருகி

ஆலயம் சென்ற ஒரு நிறைவுடன்
அவசரராய் அவரவரும் வண்டி ஏறி விரைவோமே.

அடுத்து வரும் வலி சுமந்த நாளை எண்ணி
சந்திப்போமெனவும் சிலருக்கு கைகளையும்
அசைத்துச் செல்வோமே.

இதற்கு மேலாய்

வானலைகளில்
செய்தி இழ்களில்
சின்ன பெரிய திரைகளில் என

முத்தமிழ் களங்கள் திறந்து
முனகி
குமுறி
அலறி
ஓலமிட்டு
கூக்குரலெடுத்து
அபயச் சங்கு ஊதியும்
சூழுரைத்தும்
குத்தியும் புரழுவோமே.

போதாமைக்கு

உணர்ச்சி கொப்பளிக்கும்
சொற்களைத் தேடி அடுக்கி
முகநூலில் கண்ணீர் வடியக் கவிதைகள் ஏற்றியும்

ஆய்வரங்குகளில்
ஆங்காங்கே குறிப்புகள் பொறுக்கி
எவரும் கேட்காத கேள்வி ஒன்றைக் கவனமாய்த்
தொடுத்து
அரசியற் புலமையை அனைவரறியச் செய்த
பெருமைகள்
தாங்கியும்

உள்ளத் தீயினை அணைப்பதற்காய்
கண்ணீர் ஊற்றுவோமே.

ஆற்றாமையின்
சப்புக் கட்டலுக்காய் விதியைக் குற்றம் சாட்டி
கடமையை
விட்டுத் தப்புவோமே.

ஆற்றுப் படுத்த மட்டும்
அணி திரழ்வதால்
இன்னமும்
தோற்றுப் படுத்தவராகவல்லவா
நிற்கின்றோம்.

புண்ணுக்குப் புனகு தடவி விட்டு
தொழு நோயின் ஆணி வேரைச் சீவி எறியாது
ஆளாளாய் எட்டி எட்டித் தானே நடக்கின்றோம்.

அறிவும் பொருளும்
ஆட்புலமும் நமக்கு அகண்ட உலகெங்கும்
ஆறாய்ப் பெருக்கெடுத்தும்

இன்னமும் ஐநாவில்
தோற்றுத் தானே படுக்கின்றோம்.

இனவழிப்பின்
துருப்புச் சீட்டை உயிராயுதமாய்
மௌனித்த கைகள்
நம்மிடம் கையளித்த பின்னும்

வில்லை
இழுக்க
இன்னமும் தமிழனுக்கு ஒரு
மாற்று
விஜய பலம் கிட்டவில்லையே.

முள்ளி வாய்க்கால்
எலும்புக் கூடுகளுக்கு
போத்துக்கேயர் காலத்தே முத்திரை
குத்தப்பட்டதே என்ன செய்தோம்.

நிறை கற்பிணியாய்
நில மாதா
புதைகுழி களைச் சுமந்து
வயிற்று நோவெடுத்து
அலறிக் கிடக்கிறாளே பிரசவம் எவர் பார்த்தோம்.

கறையான்கள் கட்டிய புற்றில் கருநாகங்கள் குடியேறி
மலைப் பாம்புகளுடன் நல்லரசு
மடி குடித்து
நல்லிணக்க மகுடி கேட்டு
மயங்கிக் கிடக்க
அவர் கதிரைகளுக்காகத் தானே
இன்னமும்
கைநாட்டு வைக்கின்றோம்.

கடை கடையாய்க் கட்சிகள்
வைக்க பல கனவான்கள் தோன்றிடினும்
ஒரு குடை கீழ் ஒன்றி நிற்க ஒரு
இன மானம்
இன்னமும் தோற்றப் படவில்லையே.

உள் வெளி சாணக்கியர் கூட்டு
ஏப்ரல் இருபத்தி ஒன்றில்
ஓர் இராட்சதனை ஈன்றாகி விட்டதே.

இன முரணர்களுக்கு இனி
இரட்டிப்புத் தில்லு தான்.

இனி சிரியா லிபியா
காட்சிகள் நீளலாம்.

ஆற்றில் விழுந்த காகித
ஓடமாய் நம் கதையும் நனைந்து
தாழலாம்.

உள்ளூர்த் தலை விதியை எழுத
உலகப் பேனாக்கள்
நீ நானென மை நிரப்புகின்றன.

நிலக் கண்மணிகள் களக் காளைகள் என
கம்பி மறிப்புக்களின் பின்
கட்டப் படுகின்றன.

ஆண்கள் கடலுக்கு
பெண்கள் நம் படைகளுக்கே எனும் வாசக மன்னர்கள்
மீண்டும்
பலிக் களமேற வருகின்றனர்.

இனி புதிய மே பதினெட்டுகளுக்கும்
மேற்குலகின்
கண்ணுக்குத் தெரியாத பச்சைக்
கொடிகள்
அசைவு காட்டலாம்.

என்ன செய்யப் போகிறோம்.

அவர்கள் அந்த மாதிரிக் காய் நகர்த்துகிறார்கள்
என்று எப்பவும் போல் ஒரு பெரு மூச்சை
இழுத்து விட்டு விட்டு இனியும் உறங்கத் தான்
போகிறோமா இன்னும் ஒரு பத்தாண்டிற்கு...

- அகத்தியன் தொல்காப்பியன்



முள்ளிவாய்க்கால்: அப்பா...

நெஞ்சம் மறக்குமா



"தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தையின் அன்பின் முன்னே..." இது சினிமாவில் வரும் பாடல் வரிகள் என்றாலும் மிக மிக உண்மையான வரிகள். இதற்கு என் அப்பா பொருத்தமான உதாரணம். அவர் வார்த்தைகளில் எங்கள் எதிர்காலத்துக்கான நல் வழியே அதிகம் இருக்கும். அவர் உளியாக இருந்தே எம்மை செதுக்கினார்.

"உளி விழுகையில் வலி என நினைக்கும் எப்பாறையும் சிலையாவதில்லை" என்பதைப் போல அப்பாவின் சொற்களில் இருக்கும் கடினமும் இறுக்கமும் வலி என்று நாம் நினைத்திருந்தால் உயர்ந்திருக்க மாட்டோம் என்பது தான் உண்மை. "அப்பா..." என் மீது அதிக அக்கறையும், அன்பும் கொண்டவர். சாதாரண குடும்பங்களைப் போலவே நானும் அவர் மீது அதிக அன்பை கொண்டிருந்தேன். எப்போதும் என் அம்மா கூறுவதைப் போல நான் அப்பா பிள்ளை தான். அதில் எனக்கு எதிலும் இல்லாத பெருமையும் சந்தோசமும். என் அப்பா தான் என் முதல் ஆசான், முதல் காதலன், முதல் தோழன்... இவ்வாறு பல முதல் என்ற வார்த்தைகளுக்கு சொந்தமானவர்.

என் அப்பா கிருஸ்ணபிள்ளை சாந்தகுமார். ஒரு அரசாங்க பாடசாலையில் பணி புரிந்த வரலாற்று ஆசிரியர். 2009 இற்கு முன்னான நிழலரசு காலத்தில் அவரும், அம்மா 2 தம்பிகள் அம்மம்மா மாமா என அழகான குட்டிக் குடும்பமாக நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆனால் திட்டமிட்டு வல்லாதிக்க சக்திகள் எனது குடும்பத்தின் மொத்த சந்தோசத்தையும் 2009 ஆம் ஆண்டு பறித்தெடுத்தது.

16 வயது இளையவளாக நான் பள்ளியில் பல கனவுகளை சுமந்து வாழ்ந்த காலம் அது. க.பொ.த சாதாரண தரத்தில் கற்றுக் கொண்டிருந்த போதே என் இலக்கு ஒன்றே ஒன்று தான். எமது தமிழீழ நிழலரசின் நீதித்துறை தான். சட்டவாளராக, நீதியாளராக... என எம் தாயகத்தின் சட்டத்துறைக்குள் பணியாற்ற வேண்டும். இக் கனவு கூட இந்த கொடியவர்களால் நிர்மூலமாக்கப்பட்டு மாத்தளன் மண்ணோடு மண்ணாகி விட்டது. அடிக்கடி என் அப்பா இவ் விலக்கை கூர்மைப் படுத்திக் கொண்டே இருப்பார். "நீ லோயராக வேணும்" இதை மட்டுமே எனக்குள் விதைத்தவாறு இருந்தார். அவர் கனவோ, என் கனவோ இன்றுவரை நிறைவேறவில்லை.

வழமையாகஎன்பிறந்தநாள்வந்தால்வீட்டில் கோழிக்கறி தான் சமையலாக இருக்கும். எல்லோரும் ஒன்றாக இருந்து சமைத்து சாப்பிட்டு சந்தோசமாக வாழ்ந்த காலத்தை தொலைத்து, எப்போது மரணிப்போம் என்று தெரியாத நிலையில் ஒவ்வொரு நொடிகளையும் கடந்து கொண்டிருந்த போது என் பிறந்தநாள் வருகிறது. அப்போது மாத்தளனில் நாம் இருக்கின்றோம். திரும்பும் இடமெங்கும் எறிகணைகளும், வான் தாக்குதல்களும் நிறைந்து போய் ஊரே சிதறிப் போய்க் கிடக்கிறது. இரத்த வாடை தான் அதிகம் காற்றோடு கலந்து வருகிறது. இந்த நிலையிலும் என் அப்பா யாரிடமோ ஊர்க் கோழி ஒன்றை வாங்கி வந்தார்.

அச் சாப்பாடு தான் அவரும் நாமும் சேர்ந்து சாப்பிடும் இறுதிச் சாப்பாடு என்று கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் அது தான் நடந்தது. என் பிறந்தநாள் சாப்பாடுதான் நாம் சேர்ந்து சாப்பிட்ட இறுதி உணவு. நினைத்தாலே நெஞ்சம் வெடிக்கும் கணம் அது. என் தந்தையோடு வாழ்ந்த அக் கணத்தை தாங்க முடியாத வேதனையோடு தான் நான் மறக்க முடியாமல் தவிக்கிறேன்.

என் அப்பாவிடம் எம்மை விட எம் நிழலரசின் மீது உள்ள பற்றுதலை யாராலும் மாற்ற முடியாது. நாம் எத்தனையோ தடவை கெஞ்சி மன்றாடிப் பார்த்தோம். அவரின் செல்லப்பிள்ளையான நான் அப்பாவை விட்டுப் பிரிய மாட்டேன் என அழுது புரண்டு கெஞ்சினேன். ஆனால் என் தந்தைக்கு அக் குரலை விட, தேசத் தாயின் அழுகுரலே சத்தமாக கேட்டது. அதனால் தான் 20.04.2009 அன்று நாம் அவரை விட்டுப் பிரிய வேண்டிய சூழ்நிலை வந்தது. பிரிந்து விட்டோம். "நாங்கள் தோற்றுப் போக மாட்டோம். நாங்கள் சாக மாட்டோம். இது தற்காலிக தோல்விகள் தான். எமது படையணிகள் இச்சண்டையில் நிச்சயம் வெல்லும் அதனால் நாம் நிம்மதியாக வாழலாம்" என்று பல தடவை உறுதியாக சொல்லிய என் தந்தையை நாம் அன்று தனித்து விட்ட நிலையில் பிரிந்து விட்டோம்.

அவரது பிறந்தநாள் அடுத்தநாள் (21.04.2009) வந்த போது அவரது முகத்தை பார்க்கக் கூட முடியாதவளாக சிங்களத்தின் முகாம் ஒன்றின் திறந்தவெளிச் சிறையில் இருந்தோம். என்னால் படிக்க முடியவில்லை. நினைவுகள் முழுக்க அப்பாவே நிறைந்து கிடந்தார். அப்பாக்கு என்ன ஆச்சுதோ? அப்பா சாப்பிட்டாரோ? என்ன செய்யுறாரோ? என்று மனசு முழுக்க அவரின் நினைவே மட்டும் சுமந்து படிக்க கூட முடியாத நிலையில் நான் இருந்தேன்.

அப்பாவைத் தேடித் தேடி களைத்துப் போனோம். சிங்கள தேசத்தால் செய்யப்பட்ட இனவழிப்புப் போர் முள்ளிவாய்க்காலில் நிறைவுற்ற போது வட்டுவாகல் எனும் இடத்தில் சிங்கள இராணுவத்தினரிடம் சரணடைந்த அப்பா இன்றுவரை எம்மிடம் வரவே இல்லை. அங்கே சரணடைந்து எனக்கு எவ்வாறு தெரியும் என்று நீங்கள் கேட்கலாம். அப்பா சரணடைந்த அந்த இடத்தில் அப்பாவைக் கண்ட அப்பாவின் விருப்பத்துக்குரிய மாணவன் ஒருவர் உறுதியாக கூறினார். அப்பா தன்னை "கவனமாக இருடா, பயப்பிடாத இனி என்ன நடந்தாலும் நடக்கட்டும். மாஸ்டர கவனமாக பாருடா" என்று அவரது தந்தையைப் பற்றி கூறிவிட்டுச் சென்றாராம். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என்று தெரியாத நிலையிலும் தான் நேசித்த மாணவனோடு பேசிவிட்டுத் தான் சென்றிருக்கிறார். இம் மாணவன் மட்டுமல்ல பல உறவுகள் அப்பாவை வட்டுவாகல் பாலம் கடந்து இராணுவம் மக்கள் அனைவரையும் அடைத்து வைத்திருந்த முல்லைத் தீவு வெளிக்குள் கண்டிருக்கிறார்கள். அப்பா அவர்களோடு கதைத்து விட்டுத் தான் சென்றிருக்கிறார். அதன் பின்னாலே அப்பாவும் அவருடன் கூடி நின்ற பலரும் காணாமால் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்று வரை எந்த தகவலும் இல்லை. தேடித் தேடி என் கால்களும், தாயின் உடல் நலமும் கெட்டுப் போய்விட்டது. இப்போது என் தம்பிகள் பெரியவர்கள் ஆகி விட்டார்கள். அவர்கள் அப்பா பற்றி கேட்கும் கேள்விகளுக்கு பதில் இல்லாமல் தவிக்கிறேன். யாரிடம் முறையிடுவது? மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடமா? சர்வதேசத்திடமா? அல்லது அப்பாவை வலிந்து காணாமல் போகச் செய்த இந்த கேடுகெட்ட இலங்கை அரசிடமா? என்ற வினாவுக்கு, நாம் யாரிடம் முறையிடவில்லை? என்ற வினாவே விடையாகிறது. சர்வதேச ஊடகங்கள் தொடக்கம் அமைப்புக்கள் வரைக்கும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடக்கம் சர்வதேச அரசுகள் பலவற்றுக்கும் எம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட என் அப்பாவை பிரிந்து 10 வருடங்களை கடந்து செல்லத் தான் முடிந்ததே தவிர, அப்பா கதை என்று அறிய முடியவில்லை. ஆனாலும் "அப்பா வருவார்" என்ற நம்பிக்கை மட்டும் என் வாழ்க்கையில் விட்டுப் போகாது... அந்த நாளுக்காகவே நான் இப்போதெல்லாம் காத்திருக்கிறேன். ஏனெனில் அவரது மகள் அவரின் ஆசையான சட்டவாளராக வர முடியவில்லை என்பதற்கு மன்னிப்பும், அவரது வழியிலையே ஆசிரியையாக வந்ததற்கான வாழ்த்தையும் பெற வேண்டும்...

- தாயகனின் மகள்
தர்சிகா

முள்ளிவாய்க்கால்: அப்பா வருவாரா...?!

நெஞ்சம் மறக்குமா

எனது தந்தையை எனது மூன்றாவது அகவையில் இறுதியாக கண்டேன் அந்தக் கணங்கள் ஞாபகத்தில் உள்ளது. முள்ளிவாய்க்கால் வெள்ளை மணலில் நட்சத்திரங்களால் சூழ்ந்த இரவொன்றில் படுத்திருந்து நான் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

நான் பிறந்ததில் இருந்து A.P.J. அப்துல் கலாம் அவர்களைப்போன்ற ஒருவனாக வளர வேண்டும் என ஆசைப்பட்டார். அதையே என்னோடு வாழ்ந்த நாட்களில் அடிக்கடி கூறுவார். "என் செல்லம்" என்று கொஞ்சும் ஒவ்வொரு நாளும் அப்துல்கலாம் ஐயாவைப் போல விஞ்ஞானியாக வர வேண்டும் என்றே கூறுவார். அதற்காகவே அவர் எழுதிய நூல்கள் யாவற்றையும் சேகரித்தார்.

அவை ஒவ்வொன்றிலும் நான் அவற்றை எந்தெந்த வயதில் கற்க வேண்டும் என எனது அப்பா எழுதியிருந்தார் எனக்கு நினைவு இல்லை. ஆனால் என் தாய் அப்புத்தகங்கள் பற்றி அடிக்கடி இப்போது கூறுகிறார்.

எனது அப்பாவை முள்ளிவாய்க்காலில் 2009 வைகாசி 17 அன்று இழந்தது போல் புத்தகங்களையும் இழந்தோம். என்னை திரும்ப சந்திப்பார் என்ற நம்பிக்கையில் என்னை எனது சித்தியின் கைகளில் ஒப்படைத்தார்.

தந்தையை விட்டு பிரிந்த அப்பொழுது இன்றும் நினைவில் இருக்கிறது. அந்த தென்னை மரங்களால் நிறைந்த தோப்புக்குள் சிங்கள இராணுவம் அவரை அழைத்துச் சென்றது இன்றும் நினைவிருக்கிறது. என் அப்பாவையும் அவரோடு கண்ணன் மாமாவையும் இராணுவம் அழைத்துச் சென்றது. ஆனால் இதுவரை எங்கே என்று தெரியவில்லை.

என்னை சித்தியிடம் கையளித்த போது சிறு குறிப்பேடு ஒன்றில் என்னை எவ்வாறு வளர்க்க வேண்டும் என எழுதிக் கொடுத்திருந்தார். அதை இப்போது அவா எனக்கு சொல்லுவா. இவ்வாறு என்னை திட்டமிட்டு வளர்க்க விரும்பிய எனது தந்தையை காண்பதற்கு ஏங்கிக்கொண்டு 10 ஆண்டுகளாக தவம் இருக்கின்றேன். அவர் வருவார் என்ற நம்பிக்கையிலை...


- கலைக்கோனின் மகன்
திகழ்நிலவன்



இப்பக்கம் உங்களுக்கான களம். இதில் நீங்களே விருந்தினர்கள். சமூக-அரசியல் விடயங்களை தாராளமாக நீங்கள் முன்வைக்கலாம். பதிவாகியிருந்த கருத்துரைக்கு எதிர்வினையையும் ஆற்றலாம். பரஸ்பரம் அனைவருக்குமான ஒரு உரையாடல்களமாக இந்த விருந்தினர் பக்கம் அமைகின்றது.



ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றுத் துயராக அமைந்த முள்ளிவாய்க்கால் நினைவை தமிழ் மக்கள் எவ்வாறு கால வழியில் எடுத்துச்செல்லப் போகிறோம். தமிழ் மக்களின் இருப்பு இலங்கைத்தீவில் தங்கள் வரலாற்றை பேணிக்கொள்வதில்தான் உறுதியடைய முடியும். சிங்களபௌத்த இனவாத அரசு தான் புரிந்த இனப்படுகொலை வரலாற்றை நினைவழிப்பு செய்யும் வஞ்சகத்தை நாசூக்காக நிறைவேற்றி வருகிறது. இந்த நினைவழிப்புக்கு எதிர் செயலை எவ்வாறு முன்வைக்கப் போகிறோம் என்பது எமது



எதிர்கலதிற்கும் முக்கியமானது.

வைகாசி விசாகம் புத்தன் ஞானமடைந்ததன் பெயரால் இலங்கை தீவு முழுவதும் அரச ஆதரவோடு கொண்டாடப் படுகிறது. புத்தனின் போதனைகளுக்கு எதிரான செயல் கொண்டவர்கள் மதத்தையும் தமது வஞ்சக அரசியலுக்கு கருவியாக்க தவறியதில்லை. பௌத்தர்கள் வாழாத வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதேசங்களில் வைகாசி 'வெசாக்' பெரும் கோலாகலமாக முள்ளி வாய்க்காலின் பின் கொண்டாடப் படுவதை காணலாம். வீதியெங்கும் ஒளிகளால் வர்ணித்து இம்மாதத்தில் கொண்டாட்ட மனோபவத்தை விதைக்கும் அரசாங்கத்தின் செயலின் பின்னால் நாசகார நோக்கம் இருக்கிறது. அது முள்ளிவாய்கால் இனக்கருவறுப்பின் நினைவழிப்புக்கான நுண் திட்டத்தினுடைய மிகக் கூரான ஆயுதம். எங்கள் சந்ததியையே அக்காலத்தை கொண்டாட்ட மனோபாவத்திற்குள் தள்ளும் நச்சு செயல். வைகாசி என்பது எமக்கு ஒளியான மாதமல்ல. எமது தீரா துயரின் இருள் சூழ் மாதம். வைகாசி தமிழருக்கு விசாக மாதமல்ல அது நாச மாதம். இதனை நாம் எவ்வாறு முன்னிறுத்த போகிறோம் என்பது எமது அரசியலை மக்கள் எப்படி செப்பனிட விரும்புகிறார்கள் என்பதை அடுத்தவருக்கு அறிவிப்பதுமாகும். மேலும், தமிழ் அரசியல் தலைவர்களை மக்களின் விருப்புக்கு தலைமை ஏற்க வேண்டுமே தவிர மக்களின் நலனுக்கெதிரான சக்திகளுக்காக தரகு பார்பதல்ல தலைமைத்துவம் என்பதை இடித்துரைக்க வைப்பதுமாகும்.

நவம்பர் 27 மாவீரர் நாளாக ஒளியேந்தி எமக்காக உயிரை ஈகம் செய்தவர்க்கு மதிப்பளிக்கும் பண்பாட்டு நாளாக வடிமவமைத்துக் கொண்டோம். வராலாற்றின் சுவடுகளை காவும் நாளாக உருமாற்றிக் கொண்டோம். ஆனால் இனவழிப்பின் அடையாள நாளை நினவழிப்பு செய்யும் திட்டத்தை நாம் எதிர்கொள்ள வேண்டாமா?

அன்பினிய தமிழ்மக்களே ! நாமும் இந்த உலகில் மற்றயவர்கள் போல சுதந்திரம் கொண்ட சக மக்கள் சமூகமாக, எமது பண்பாட்டை பாதுகாத்து வளர்க்கவும் பரிமாறவும் விரும்பும் மக்களாக, எமது மொழியை பேச விரும்பும் மக்களாக, எமது பூர்வீக நிலத்தில் நாமே வாழ்வதில் பெருமையுள்ள மக்களாக, எமது பொருளாதாரத்தை மேம்படுத்தி ஏனைய உலக சமூகங்களின் பொருளாதரத்தில் பங்களிக்க விரும்பும் மக்களாக இருக்கக்கேட்டோம். ஆனால் அதற்கு மறுக்கப் பட்டோம் மேலும் சிதைக்கப்பட்டோம்.எம்மைக் காக்க



போராடினோம்.

போர் கண்ணீரைத் தந்தது எங்கள் குருதியை விலையாய் கேட்டது எங்கள் உயிரை பலியாய் கேட்டது. கொடுத்தோம். எமக்கு வேறு வழியில்லை. வேறு தெரிவை விதிக்கப் பட்ட வாழ்வும் எமக்கு தரவில்லை. கண்ணீர் விட்டு கண்ணீர் விட்டு, குருதி கொட்டி குருதி கொட்டி, ஊனமுற்று ஊனமுற்று, உயிர் விதைத்து உயிர்விதைத்து போராடினோம். பல பத்தாண்டுகளாய் போராடினோம். முன்னேறினோம். புயலில் சுழன்றாலும் தீயில் வெந்தாலும் மீண்டும் நிமிர்ந்து மீண்டும் உயிர்த்து முன்னேறினோம். எம்மை நாமே காத்துக்கொள்ள சக்திகொண்டு முன்னேறினோம்.

எமது வலிமையை அநீதியும் அதர்மமும் வஞ்சகமும் கொண்டு சிங்கள தேசம் உலக சக்திகளுடன் கூடி அழித்தது. எமது நீதிக்குரல்கள் கேக்காதவாறு தங்கள் காதுகளை இந்த உலகம் அடைத்துக் கொண்டது. தங்கள் அதர்மம் தெரியாதவாறு கண்களை பொத்திக் கொண்டது. அறத்தை பேச மறுத்து வாயை கட்டிக் கொண்டது. உலக நாடுகளின் நாடாளுமன்றங்கள் முன் தவமாய்க் கிடந்தோம். எங்கள் நியாயம் கேட்கப்படவில்லை. நீதி பேசப்படவில்லை. அதர்மம் பார்க்கப் படவில்லை. வல்லமையுள்ள உலகு வஞ்சகமாய் எம்மை கருவறுத்தது.

மே 18- தமிழினக் கருவறுப்பின் அடையாள நாள். குருதி கொட்டி விடுதலைக்கு காத்திருந்த காலப் பொழுதொன்று இருளிய நாள். இந்நாளை, இந்த நூற்றாண்டின் மனித நாகரிகத்தினது அவமான நாளாக உலகுக்கு உணர்த்துவோம். ஜனநாயக உலகு கொண்டுள்ள வஞ்சகத்தின் நாளாக உணர்த்துவோம். மனித அறத்தின் அழுக்கு நாளாக உணர்த்துவோம். தர்மத்தின் நிந்தனை நாளாக உணர்த்துவோம். நீதியின் இழி நாளாக இந்நாளை உணர்த்துவோம்.

அதற்காக தமிழர் வாழும் இடமெங்கும் இரவு ஏழு மணியிலிருந்து -மேற்கு நாடுகளில் ஒன்பது முப்பதிலிருந்து பத்து நிமிடங்கள் எங்கள் மின் விளக்குகளை அணைத்து எங்கள் சூழலை சுற்றி இருளாக்குவோம். இறந்த உயிர்களை நினைவுகூர சிறு கைவிளக்கேற்றி அந்த சிற்றொளியில் நம் தேவைகளை நிறைவு செய்து கடப்போம். அரசியல் கட்சிகளற்ற மக்கள் இயக்கமாக இதனை நிறைவேற்றுவோம்.

இந்தநாளை, மனித நாகரிகத்தின், நீதியின், அறத்தின், ஜனநாயகத்தின், தர்மத்தின் கரிய நாளாக, இருள் நாளாக உலகுக்கு அறிவிப்போம். இருளேந்தி அறிவிப்போம். இருளால் சூழ்வோம் நகரங்களையும் எமை சுற்றிய உலகையும்.எம்மை இனக்கருவறுப்பு செய்த உலகுக்கு இந்நாளின் எம் செய்தியாகட்டும் அது. உணரட்டும் உலகு விளக்கேந்தி வீரரை வணங்கும் பண்பாடுள்ள நாங்கள் இருளேந்தி அநீதியை அறிவிப்போம்; இந்த உலகுக்கும் எம் சந்ததிக்கும்.



தாயகத்தில் முள்ளிவாய்க்காலில் இன அழிப்பு இடம்பெற்று ஒரு தசாப்தகாலம் நிறைவுக்கு வந்துள்ளது. கால அளவில் பத்துவருடங்கள் என்பதுமிகப் பெரிய காலம்தான்.இந்த நீண்ட காலத்துக்குள் எமது தாயக பூமியில் அரங்கேறிய இன அழிப்புக்கு நீதி கிடைத்ததா என்றால் இல்லை. ஐக்கிய நாடுகள் சபையில் எத்தனை தடவைகள் எப்படியெல்லாமோ பேசுக்கள் இடம்பெற்றன.எத்தனையோ அமைப்புகள்,அரசியல் கட்சிகள்,எடுத்து சொல்லியும் நீதி கேட்டும் இன்று வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே தமிழ் இன அழிப்புக்கான நீதியும் போர்க் குற்றம் புரிந்தமைக்கான தண்டனையும் கிடப்பில் கிடக்கின்றன. சரி பல வாத பிரதிவாதங்களில் இருபக்கமும் இருந்தவர்கள் போர் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று எடுத்துக் கொண்டாலும்,அவற்றை ஐ,நா,பாதுகாப்பு சபை ஆராய்ந்து தெளிவான அறிக்கையுடன் நீதி வழங்கி இருக்க வேண்டுமல்லவா? அதை இன்றுவரை செய்யவில்லையே ஏன்? இந்த கேள்வி ஒரு தசாப்தகாலம் முடிந்தும் இன்றும் தொக்கி நிற்கிறது. சர்வதேச நாடுகளின் பாராமுகமும், இந்தியா, சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளின் உதாசீனமும்தான் இந்த நிலைக்கு காரணம். அது மட்டுமல்லாமல் இலங்கையின் வடகிழக்கு பிரதேசம் அரசாலும், அரசுக்கு ஆதரவான நாடுகளாலும் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

மறக்கமுடியுமா எமது மண்ணின் அவலத்தை.மறக்கலாம், மறந்துவிடு என்று மனசுகள் சொன்னாலும் அது நடக்கின்ற காரியமா? அத்தனை சுலபத்தில் மறக்க அது என்ன சம்பவமா? ஓர் அழிவின் வரலாறு அல்லவா. இந்த அகிலம் இருக்கும்வரை நினைத்து நினைத்து வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு வஞ்சக வரலாறு அல்லவா. மே 17, 18, ஒவ்வொரு ஆண்டும் வரத்தான் போகின்றது மேதினியும் இதைக் கடந்து போகத்தான் போகின்றது. நாம் இழந்ததை, எம்மினம் எதிர்பார்த்ததை, இந்த உலகம் தருமா? என்ற கேள்வி எல்லோருக்கும் இருக்கின்றது. பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் பல நேரங்களில் பேசாப் பொருளாகப் போய்விட்ட எம் இனத்தின் உரிமையும், உணர்வுகளும் நாளடைவில் உலர்ந்து உக்கி மறைந்து போய்விடுமோ என்ற அச்சம் அன்று தொட்டே இன்றுவரை இருந்து கொண்டே இருக்கின்றது.

எமது மண்ணில் அன்று நடந்த அவலங்களை, கொடூரங்களை காணொளிக் காட்சிகளாக பார்த்து கண்கள் குளமாகி கதறியழுத எம் புலம்பெயர் உறவுகள் இலட்சோபலட்சம் பேர். வானொலிகளில் செய்தி கேட்டு நெஞ்சம் தணலாகி போனவர்கள் எண்ணிலடங்காதவர்கள். வன்னி மண்ணின் அவலத்தை, வடகிழக்கில் மக்கள்பட்ட துன்பத்தை சொல்ல வார்த்தைகள் இல்லாமல் தவித்த எம் மக்களின் தவிப்பை இன்றுவரை இந்த சர்வதேச சமூகமும், ஐ.நாவும் தணிப்பதாக இல்லை.போர் நடந்தது.பேரழிவு வந்தது. ஆனாலும் உலகம் வாய்மூடி மௌனியாகவே இருந்தது.

தேரிழுத்துவாழ்ந்தமக்கள்கூட்டம்தெருவில் வந்து கிடந்தது. வேர் அறுந்த செடியைப் போல சீரழிந்து போனது. முள்ளிவாய்க்கால் முள் வேலிக்குள் முடங்கிப் போன எம் மக்களின் அடிப்படை வசதிகளைக் கூட அன்று அரசும், அரச சார்பற்ற அமைப்புகளும் செய்து கொடுக்க முன்வரவில்லை.அரச சார்பற்ற வெளிநாட்டு அமைப்புகள் அரசால் தடை செய்யப்பட்டன. என்பதும் அறியப்பட்ட செய்தியே. வெட்டவெளிப் பொட்டலிலே எம் மக்கள் இருந்தார்கள். சுட்டெரிக்கும் வெயிலில் கைகளில் தட்டை ஏந்தி நின்ற காட்சிகளைப் பார்த்து கண்கலங்கியவர் ஏராளம். மரணத்தின் வாசலிலே எம் மக்கள். மரத்தடி நிழலினிலே எம் மக்கள். வெட்டை வெளியில், வெட்டும் மின்னலில், கொட்டும் மழையில், கட்டாந்தரையில், கிடந்தது கஷ்டப்பட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் கிண்டல் கேலிகளிலும், குண்டர்களின் குதறல்களிலும் பசிக் கொடுமையிலும், பிணியிலும் கிடந்து உளன்றார்கள். ஒரு ஐரோப்பிய நாட்டில் இப்படிப் பட்ட கொடூரம் ஏற்பட்டிருந்தால் சர்வதேசம் பார்த்துகொண்டு இருந்திருக்குமா? கண்டிப்பாக இருக்காது. மூன்றாம் உலக நாடுகளில் என்ன நடந்தாலும் அதை ஒரு பொருட்டாக இந்த சர்வதேச சமூகம் எடுப்பதில்லை என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அனைத்து இன்னல்களையும் தாங்கிக் கொண்டு அன்றும் இருந்தார்கள். இன்றும் எந்தவித தீர்வும் இல்லாமல் இருகின்றார்கள்.

காணி அபகரிப்புகளும், தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளும் அன்றிலிருந்து இன்றுவரை நடந்துகொண்டுதான் இருக்கின்றது. போர் முடிந்து பத்து ஆண்டுகள் நிறைவு பெற்றபின்னரும் தமிழர்கள் மத்தியில் இன்னும் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. இந்தக் காலக்கட்டத்தில் தமிழ் அரசியல் வாதிகளின் ஆரோக்கியமான செயற்பாடுகள் எதுவும் எமது மக்களுக்கு அனுகூலமாக அமையவில்லை என்பதை யாரும் மறுத்துக் கூற வாய்ப்பு இல்லை. தற்கால அரசுக்கு ஆதரவாக பல சந்தர்பங்களில் தமிழ் தேசியக் கூட்டணி செயல்பட்டது கண்கூடே. இதை மக்களும் அறிவார்கள் சர்வதேச சமூகமும் அறியும். தமிழ் தலைமைகளின் கையாலாகாத தனம், தமிழ் மக்கள் மத்தியில் இன்று அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரசில் ஏற்படவிருந்த பாரிய மாற்றத்தைக் கூட தமிழர் தரப்பே தகர்த்து எறிந்தது என்ற உண்மைகளும் மக்களுக்கு தெரியாமல் இல்லை.

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரும், இன அழிப்பும் நிகழ்ந்து ஒரு தசாப்தம் நிறைவுக்கு பின்னரும் இன்னும் எம்மக்களுக்கு சரியான தீர்வு ஒன்றை கொடுப்பதற்கு சர்வதேசமும், ஐக்கிய நாடுகள் சபையும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் தமிழ்தேசிய அரசியல் தரப்பும் முறையான முன்னெடுப்புகளை எடுக்காமல் இருந்தது, இருப்பது தமிழ் மக்களின் துரதிஸ்டமே என்பதை விட வேறு என்னவாக இருக்க முடியும்.

- கோவிலூர் செல்வராஜன்

முள்ளிவாய்க்கால்: அப்பாவுக்காக...



நிசம் என் கண் முன்னே மிக மிக நெருக்கமாக இருக்கின்றது. ஆனால் அதனை மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அப்பா! இந்த சொல்லின் மகிமை உலகம் அறிந்ததுதான். அப்பா என்றால் அனைவருக்கும் பிடிக்கும் தான், ஆனால் என் அப்பா வித்தியாசமானவர். அப்பா என்ற வரையறையில் இருந்து மாறுபட்டவர். அவரை என் அப்பா என்று சொல்வதில் அத்தனை பெருமை எனக்கு.

என் மனதிற்கு எத்தனையோ தடவை சொல்லி விட்டேன். நிசத்தை ஏற்றுப் புரிந்து கொள் என்று. ஆனால் அது ஏனோ என் சொல்லை காதில் ஏற்றுக் கொள்கின்ற மனநிலையில் இல்லை. அதனால் அடிக்கடி நிசத்தை உணராமல் அழுது தீர்க்கிறது. "அப்பா இல்லாத எனது பல்கலைக்கழகம், அப்பா இல்லாத என் வீடு, அப்பா இல்லாத என் வாழ்க்கை. அப்பா இல்லாத ... என்று ஒவ்வொன்றையும் நினைக்கத் தொடங்கும் போதே எனது நேத்திரங்கள் முழுதாய் நனைந்து போகிறன. வெளியே சொல்ல முடியவில்லை. என் மனதில் உள்ள வேதனைகளை நிச்சயம் என் பேனாவால் எழுதிவிட முடியாது.

கடவுள் உண்மையில் இரக்கமற்றவர். என்னையும் என் அப்பாவையும் பிரித்து வேடிக்கை பார்க்கும் கொடியவர். இரண்டு வருடத்துக்கு முன் என் அம்மா எம்மை விட்டு பிரிந்த போது எம் அப்பா இருந்தார். இப்போது அப்பாவும் இல்லை என்ற போது தான் எமக்காக யாரும் இல்லை என்று தோன்றுகிறது. சுற்றி அத்தனை பேர் இருந்தும் தனியே உள்ளது போன்று ஒரு தவிப்பு. அதன் காரணமும் அப்பா தான். ஏனெனில் எமக்கு அவரே எல்லாமாக இருந்து பழகி விட்டார். நல்ல அப்பாவாக, அன்பான அம்மாவாக, எதையும் பகிர்ந்து கொள்ளும் தோழனாக, இன்னும் எத்தனையோ உறவாக எம் அப்பா எம்மோடு வாழ்ந்தார். எங்கள் அப்பாவின் இடத்தை யாராலும் நிரப்பி விட முடியாது. அது என்றும் வெற்றிடமாகவே இருக்கும்.

நான் வீட்டுக்கு விடுமுறையில் வந்து பல்கலைக்கழகம் திரும்பும் போது, மறைத்து வைத்த பூந்தி லட்டை கையில் வைப்பார். அதுவும் ஒன்றல்ல இரண்டல்ல பத்துப் பதினைந்து இருக்கும். வீட்டில் இருந்து விடைபெறும் ஒவ்வொரு நொடியும் அத்தனை கனமாக இருக்கும். பல்கலைக்கழகம் சென்ற பின் தினமும் எனக்கான அலாரம் அவரின் தொலைபேசி அழைப்புத் தான். காலை மாலை என்று தினமும் குறைந்தது 5 முறையாவது அழைப்பார். அதற்காகவே என் கையில் எப்போதும் என் கைபேசி இருக்கும். தவறுதலாக நான் எடுக்கவில்லை என்றால், என் நண்பிகளான அபிக்கோ, பவானிக்கோ எடுத்துவிடுவார். அதனால் நான் அப்பாவின் அழைப்பை தவற விடுவதில்லை.

இப்போதெல்லாம் என் கைபேசிக்கு வரும் அழைப்புக்களை பெரும்பாலும் தவற விட்டுவிடுவேன். இப்போது கைபேசியை நான் கவனிப்பதே இல்லை. அதில் வரும் அழைப்புக்களையும் எதிர்பார்ப்பதில்லை.

எனது ஒவ்வொரு பிழைகளுக்குமான தீர்வு என் அப்பா தான். நான் பிழை விடும் போதெல்லாம் ஒற்றை வார்த்தையால் என்னை கட்டிப் போடுவார். " அதை விடு இனி அப்பிடி நடக்காமல் பார்த்துக் கொள்..." இது தான் எனக்கு என் பிழைகளைத் திருத்துவதற்கான மருந்து. ஆனால் இப்போதெல்லாம் எதாவது பிழை விட்டால் நெஞ்சம் அவ்வாறு பதறுகிறது. தவறு விடும் போது அந்த வார்த்தையை கேட்காது இருப்பது அப்பா அருகில் இல்லை என்பதைக் குத்திக் காட்டுகிறது. ஏனெனில் என் ஒவ்வொரு நாட்களின் ஒவ்வொரு வினாடியும் அவர் என்னோடு இருந்திருக்கிறார். அப்பா நிச்சயமாக கண்டிப்பானவர். ஆனால் வரையறைகளை வகுப்பவர் அல்ல. சுதந்திரமாக எம்மை வளர்த்தார்.

எந்த விடயத்தையும் அப்பாவிடம் நாம் கதைக்க முடியும் என்ற துணிவை எமக்குள் விதைத்திருந்தார். அதனால் எமக்கு எதனையும் மறைக்கக் கூடாது, நாமும் எல்லாவற்றையும் தெரிந்திருக்க வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்தார். எம்மில் அத்தனை நம்பிக்கை அவருக்கு. காசு என்று கேட்டால் இல்லை என்றால் கூட எப்படியோ எமக்குத் தந்து விடுவார். ஆனால் ஒரு ரூபாவிற்குக் கூட கணக்கு கேட்க மாட்டார். நாங்களாக கூறினாலும் காதில் எடுக்க மாட்டார். எமக்கான தேவைகள் அத்தனையையும் ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்துச் செய்வார். உடைகள் தொடக்கம் அத்தனையும் சிறந்தவற்றையே நான் அனுபவிக்க வேண்டும் என்பதில் திடமாக இருந்தார். மற்ற பிள்ளைகளை விட நாம் எந்த விதத்திலும் குறைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

அவரைப் பற்றி என்னால் துளியளவு கூட எழுதிட முடியாது. " அப்பா " என்ற சொல்லுக்குள் அடக்கி விட முடியாத உன்னதம் அவர். எம் நெஞ்சங்களை அனலாக்கி விட்டு பிரிந்து விட்ட உயர்வான உறவு அவர். அப்பா பற்றி எழுத என் பேனாவோ காகிதமோ இடம் கொடுக்குதே இல்லை. ஆனால் என்றும் அவர் நினைவுகளுடனே பேசிப் பேசி இவர் கண்ட கனவுகளை நினைவாக்குவோம் என்பது மட்டும் நிசம். நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து விட்டாலும், எம்முள் ஓடும் குருதித் துணிக்கைகளில் நிறைந்து கிடக்கும் உங்களின் எண்ணங்கள் யாவும் நிச்சயமாக இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் பிள்ளைகளூடாக நிறைவேறும். இது உங்கள் மீது உங்கள் பிள்ளைகள் கொண்ட அன்பின் மீது சாட்சியம்...

சிதம்பர பாரதி திருச்செந்திநாதன்

முள்ளிவாய்க்கால்: உலகமும்...... அதன் நலன்களும்!

முள்ளிவாய்க்கால் ஒற்றைச் சொல் அல்ல. இது வெற்றுச் சொல்லும் அல்ல. இது இனஅழிப்பின் சொல். இப்படியொரு இனஅழிப்பு எதிர்காலத்தில் எங்கும் நடந்து விடக்கூடாது என உலகின் முன் அறைகூவும் விழிப்புச் சொல்.

ஆனால் இந்த உலகம் இந்தச் சொல்லை, இலங்கைத்தீவின் ஓர் இடத்தினது பெயராக நிலைநிறுத்த முனைகின்றது.

இந்தச் சொல்லுக்கு பரிகாரமாக நீதியினை வழங்க வேண்டிய உலகம், போர்குற்றங்களாகவும், மானிடத்துக்கு எதிரான குற்றங்களாகவும், படுகொலைகளாகவும் விடயங்களைச் சுருக்க முனைகின்றது

இனப்படுகொலைக்கான பரிகார நீதிக்கு மாறாக, நிலைமாறுகால நீதி எனும் இனநல்லிணக்க போதனை செய்கின்றது.

இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

உலக அரசுகளின் இந்தோ-பசுபிக் அரசியற் சதுரங்கத்தில் இலங்கைத்தீவு முக்கிய கேந்திர மையமாக மாறிவிட்டது.

அமெரிக்காவின் கழுகுப்பார்வையும், சீனாவின் டிறாகனும் இந்த கேந்திர மையத்தை நோக்கி உள்ளன.

இந்நிலையில்தான் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என்பது மூடிய அறைக்குள் நடந்த இனப்படுகொலையல்ல. உலகின் செய்மதி வலைப்பின்னலின் கண்காணிப்பில் இருந்தவொரு நிலப்பரப்பில்தான் இவ் இனவழிப்பு நடந்திருந்தது. இந்த வினவழிப்புக்கான ஆதாரங்கள் உலக வல்லரசு நாடுகளிடம் குவிந்து கிடக்கின்றன.

சாட்சியமற்ற போரின் சான்றுகளாக அவை உள்ளன. இருந்தும் சிங்களத்தின் தமிழின அழிப்பை உலக நாடுகள் இன்றுவரை அங்கீகரிக்கவில்லை. இதனை இரு தரப்புக்களாலும் நடாத்தப்பட்ட "ஓர் போர்க்குற்ற" நடவடிக்கைகளாகச் சித்தரிக்கவே உலக அரசுகள் விரும்புகின்றன.

இந்த இனவழிப்பு அங்கீகார மறுப்பு என்பது, இனவழிப்புக்கான ஆதாரப்பற்றாக்குறை காரணமாகவோ அல்லது ஆதாரங்களைத் திரட்டுவதில் உள்ள சிரமங்கள் காரணமாகவோ இடம் பெறவில்லை.

மாறாக இனவழிப்பை அங்கீகரிப்பதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் காரணமாகவே உலக அரசுகள் இவ்வாறு நடந்து கொள்கின்றன. இனவழிப்பை அங்கீகரித்தால் அது ஏற்படுத்தும் புவிசார் அரசியல் தாக்கங்களும், அது அரசுகளின் நலன்களில் ஏற்படுத்தும் பாதிப்புகளுமே இதற்குக் காரணமாக இருக்கின்றன.

அதாவது தமிழர்களுக்கு நடந்தது ஓர் இனஅழிப்பு என்பதனை அங்கீகரித்தால், ஏற்றுக்கொண்டால் அதற்கான பரிகார நீதியினை வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு உலகம் தள்ளப்படும்.

சிங்களத்தின் இனவழிப்பை அங்கீகரித்தால் பின்னர் சிறிலங்கா அரசுடன் தொடர்புகளைப் பேணுதல் சிரமமாக அமையும். சிறிலங்கா அரசின் ஊடாக இலங்கைத்தீவில் தமது நலன்களை அடைந்து கொள்வதற்கு முயலும் அரசுகள் எவையும் சிறிலங்கா அரசை இனவழிப்புக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்க மாட்டாது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுதல் அவ்வளவு சிரமமானது அல்ல.

சிறிலங்கா அரசுடன் மட்டுமல்ல, பொதுவாகவே எந்த ஒரு அரசையும் இனவழிப்புக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்குவது நீதியின் பாற்பட்ட ஒரு விடயமாக ஏனைய அரசுகளுக்கு அமைவதில்லை. தமது அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்கான ஒரு ஏற்பாடாகவே இனவழிப்புக் குற்றச்சாட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப் பின்னணியுடனேயே ஈழத் தமிழ் மக்களுக்கெதிரான சிங்களத்தின் இனவழிப்பு விடயத்தில் அனைத்துலக அரசுகளின் நடத்தையை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அரசுகளின் நடத்தை இவ்வாறு இருந்த போதிலும் அரசுகளின் கட்டமைப்புகளுக்குள் இயங்கும் நீதி மீது அக்கறை கொண்ட துறைசார் நிபுணர்கள் தமக்குக் கிடைக்கும் வரையறைக்குட்பட்ட வெளிக்குள் உண்மைகளை வெளிக் கொணர முனைவதுண்டு. உதாரணமாக, 2011ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள்குழு, சிறிலங்கா தொடர்பான தனது அறிக்கையில் சிறிலங்கா அரசு மேற்கொண்டது இனவழிப்பு என்பதனை வெளிப்படையாகக் கூறாவிடினும், அவர்கள் விபரித்த விடயங்கள் இனஅழிப்புக்கான கூறுகளைக் கொண்டிருந்தன.

நீதிக் கோட்பாட்டைப் புறந்தள்ளி அனைத்துலக அரசுகள் எடுக்கும் முடிவுகளை அறச்சீற்றத்துடன் எதிர்த்துநின்று போராட வேண்டிய கடப்பாடு இனவழிப்புக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளான இனமாகிய ஈழத்தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆர்மேனிய மக்கள் தமக்கெதிரான இனவழிப்புக்கு உலக அங்கீகாரத்துக்காக 100 ஆண்டுகள் தாண்டியும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இதுபோலவே ஈழத்தமிழர்களும், தமக்கு நடந்தேறிய ஓர் இனப்படுகொலை என்பதனை உலகத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான ஓர் மக்கள் இயக்கத்தை உலகப்பரப்பில் கட்டமைக்க வேண்டிய கடப்பாட்டினை இந்த பத்து ஆண்டுகள் உணர்த்தி நிற்கின்றன.

தமிழ் மக்கள் சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் என்ற நிலையில் இருந்து, ஒரு தேசம் என்பதற்கான தகைமை கொண்ட மக்கள் என்ற வகையில், தமது சுயநிர்ணய உரிமைக்குப் போராடுதலும், சிறிலங்கா அரசின் இனப்படுகொலைக்குள்ளாகும் மக்கள் என்ற வகையில் இனப்படுகொலைக்கெதிரான பரிகாரநீதியாக தன்னாட்சி உரிமையை கோரிப்போராடுதலும் ஈழத்தமிழ் மக்களின் நீதிக்கும், அரசியல் இறைமைக்குமான மூலோபாயங்களாக காணப்படுகின்றன.

இதில் தமிழின அழிப்பினை உலகை ஏற்றுக் கொள்ளச் செய்தல் என்பது மீண்டும் ஒரு இனஅழிப்பு நடைபெறாமல் தடுக்க மட்டுமல்ல, 2009 இனஅழிப்புக்கான பரிகார நீதிக்கான பொறிமுறையாகவும் இதுவே காணப்படுகின்றது. அப்பரிகார நீதியே தமிழர்களுக்கான நிரந்தர அரசியற்தீர்வுக்கு வழிகோலும் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதுவே முழு இலங்கைத்தீவுக்கான அமைதியாகவும் இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால்: நினைவுக் குறிப்புகள்!



மே 10 தொடக்கம் 15 மதியம் வரைக்கும் இந்த (புகைப்படம்) முள்ளிவாய்க்கால் பொதுநோக்கு மண்டபத்திற்கு முன்னால் உள்ள வீட்டில் தான் இருந்தேன். அன்று நான் பார்த்த பலர் இன்று வரை காணாமல் போனவர்கள் பட்டியலில் தான் இருக்கிறார்கள். உயிருடன் இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. அன்றைய மதியமே விடத்தல் பற்றைகள் உள்ள இடத்திற்கு சென்று விட்டோம். எனக்கு எத்தனை மீற்றர் அப்பால் என்று சொல்ல முடியவில்லை.

உண்மையில் என்னதான் நடந்தது? இன்று வரை பலரது கேள்வியும் இதுதான். முழுமையான தகவல்களை யாராலும் சொல்லமுடியாதுள்ளது. ஏன் முள்ளிவாய்க்காலுக்கு இயக்கம் வந்தது. காட்டுப்பக்கம் போயிருக்கலாமே? இவர்களெல்லாம் ஏன் சரணடைந்தவை சயனைட் குடித்திருக்கலாமே? உவங்கள் அடிக்கிறதுக்கு கனக்க ஏதோ வைத்திருந்தாங்களாமே? கிளிநொச்சியோட காட்டுக்குள்ள போயிருக்கலாமே? என்றும், உந்த இயக்க குடும்பங்கள் எல்லாம் எப்படி வெளிநாடு வந்தவை? காசு எங்கால?

வெளிநாட்டுக்கு வந்தவுடன் எங்கட மக்களில் சிலர் கேட்ட கேள்விகள் இவை.

என்னால் நிறைய விடயங்கள் எழுதமுடியவில்லை. அதற்குரிய இடத்திலும்; நான் இல்லை. அதனால் சில கதைகள் கிடப்பிலேயே இருக்கின்றன.

இதில் சரணடைதல் பற்றி சொல்லலாம். மனைவி பிள்ளைகளை விட்டு விட்டு சயனைட் குடியுங்கோ என்று இயக்கம் சொல்லியிருக்கவில்லை. அப்படி செய்யவும் பல போராளிகளால் முடியவில்லை. நெஞ்சை கல்லாக்கியவர்களும் இருந்தார்கள். அவர்கள் முள்ளிவாய்க்காலை விட்டு வெளியேறவும் இல்லை.

1990 ஆண்டு மணலாற்றுக்காட்டில் இருந்து தலைவர் சாவகச்சேரி வந்தபொழுது அங்கிருந்து வந்தவர்களில் ஒருவர் தான் மொட்டை திலீப். இவருக்கு ஒரு கால் இல்லை. சைபர் படையணியில் இருந்து நிதித்துறை பாண்டியன் நிர்வாகத்திற்குள் கடமையாற்றியிருந்தார். யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் காலத்தில் லெப். கேணல் றெஜித்தன், மொட்டை திலீப் போன்றவர்களை மீண்டும் இம்ரான் பாண்டியன் படையணியின் தளபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்தனர்.

மே 15 அன்று என்னை என் சகோதரன் கைதாங்கலாக வீதியால் கொண்டு செல்லும் போது

மொட்டை திலீப் அண்ணை வீதியில் நிற்கிறார்.

"இயக்கம் என்னை குடும்பத்தோட ஆமிட்ட போகச்சொல்லிட்டுது. என்ன செய்யிறது என்றே தெரியவில்லை. "உனக்கு கால் இல்லை. எங்களோட அடிச்சுக்கொண்டு வாறது கஸ்டம்" என்று சொல்லிட்டாங்களடா.. என்று சொல்லியிருந்தார்"

இயக்கம் எல்லாரையும் ஆமியிட்ட போகச்சொல்லிட்டுது என்று அப்பொழுது தான் எங்களுக்கும் தெரிஞ்சுது. அதுவரைக்கும் அரசல்புரசலாக பேசபட்டவையே. ஏற்கனவே பல போராளிகள் குடும்பங்களுடன் சென்று விட்டார்கள்.

பின்னர் சிறிது தூரம் சென்றிருந்த நாங்கள். அதிலிருந்த பனை வடலிக்கு அருகில் என்னை படுக்க வைத்து விட்டு மீண்டும் எனது சகோதரன் பதுங்குகுழி அமைத்துக்கொண்டிருந்தார்.

அடுத்தடுத்த நாட்களில், சரணடையாமல் அனைத்து போராளிகளும் சயனைட் குடிச்சிருந்தா? சிறிலங்கா அரசின் உண்மையான முகத்தினை வெளி உலகிற்கும் தெரிந்திருக்காது. சரணடைதலும் ஒரு வகையான தியாகம் தான்



மழை வெள்ளத்திற்குள்ளும் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும். மழைநீரால் நிரம்பியிருக்கும் பதுங்குகுழிக்குள் மக்கள் இறங்கி நிற்பார்கள்.

காயமடைந்தவர்களை வீதிக்கரைக்கு கொண்டுவருவதே மிகவும் கடினமானதாக இருந்தது. மழைவெள்ளமும் எங்களை வாட்டி வதைத்துவிட்டுத்தான் சென்றது. அந்தநேரத்தில், வலைஞர்மடம் பகுதியிலேயே பத்திரிகையின் அச்சுஇயந்திரத்தினை வைத்திருந்தோம். பாரஊர்தி ஒன்றில் இயங்கும் நிலையில் வைக்கப்பட்டிருந்தாலும் அன்றைய நாள் மழைவெள்ளத்தால் பத்திரிகையை வெளியிடமுடியவில்லை. பாரஊர்தியின் சில்லுகள் வரை வெள்ளம் நிரம்பியிருந்தது,.. அச்சு இயந்திரத்திற்கும் பிளேட்மேக்கருக்கும் இடையில் தான் நான் இரவில் படுத்திருப்பேன். அதற்குள் படுத்தால் தான் எனக்கு நித்திரையே வரும். அது எனக்கு ஒரு பதுங்குகுழி.



படம் எடுக்கிற பல இடங்களில் எனக்கு சனம் கெட்டவார்த்தையில் பேசுவினம். சிலர் திட்டினவர்களே தேநீர் தருவார்கள். அவர்களது வலியையும் பசியையும் என்னால் போக்கமுடியாது. சில இடங்களில் அடிக்க வந்திருக்கினம். "நான் வைத்தியசாலையில் வேலை செய்யிறன். அங்க சொல்லித்தான் எடுக்கிறன்" என்று சொன்னபடியால் பேசமால் போடுவினம். ஏப்பிரல் 22 2009 அன்றைய காலை நானும் மதியும் வலைஞர்மடம் சென்றிருந்தோம்.

வலைஞர்மடத்தில் இருந்து முள்ளிவாய்க்காலுக்கே அன்றைய தினம் காயப்பட்டவர்களை கொண்டு செல்லமுடிந்தது. இந்தப்படங்களை நான் எடுக்கும் போது, காயமடைந்த இந்த முதியவரை தூக்கி வந்தவர்கள் என்னை கண்டபடி பேசினவை. அவர்களால் முதியவரைத்தூக்கிக்கொண்டு கடற்கரை மணலில் நடக்கமுடியவில்லை. துப்பாக்கி ரவைகள் அதிகம் வந்துகொண்டிருந்தது. நான் அவர்கள் பேசினதை காதில் போடாமல் நானும் அவர்களோடு சேர்ந்து மாறி மாறி தூக்கி வந்தேன். அவர்களிடம் நான் எந்த விபரங்களையும் கேட்கவில்லை. அவர்கள் பேசக்கூடிய நிலையில் அப்போதிருக்கவில்லை. கடைசியாக இந்த முதியவரை இரட்டைவாய்க்காலிலும் படம் எடுத்திருந்தேன். அப் பகுதியில் நின்ற ஒருவர் உந்துருளி ஒன்றில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உதவியிருந்தார்.





ஏப்பிரல் 20, 2009. 1000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நாள். 1500 மேல் படுகாயம்.

மேலே காணப்படும் புகைப்படத்தில் காணப்படும் இடம் புதுமாத்தளன் றோ.க அரசினர் தமிழ்கலவன் பாடசாலை. இப்பாடசாலையே "புதுமாத்தளன் வைத்தியசாலை" 2009 ஏப்பிரல் 20 ஆம் வரை பல்லாயிரக்கணக்கான மக்களை உயிர்பிழைக்கவைத்த இடம் இதுவே மரத்தில் சாய்ந்து இருக்கும் தாய் ஒருவரை பாருங்கள். அவர் சாய்திருந்த மரம் இன்றும் இருக்கின்றது. இந்த மரத்திற்கு கீழேயே காயமடைந்தவர்களை கிடத்துவார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களிற்கு சிகிச்சை வழங்கப்பட்ட புதுமாத்தளன் வைத்தியசாலை பல தடவை நேரடியாக சிறிலங்கா படையினரின் தாக்குதலுக்குள்ளானது. ஏப்பிரல் 20 2009 அன்று வைத்தியசாலைக்குள் புகுந்த சிறிலங்கா படையினர் ஏற்கனவே காயமடைந்த மக்களில் பலரை சுட்டுப்படுகொலைசெய்திருந்தனர்.





















முள்ளிவாய்க்கால்: பொறுப்பு கூறலுக்கான அனைத்துலக நீதி

தமிழர் தாயகத்தில் சாட்சியமற்ற இனஅழிப்பு போர் ஒன்றை சிறிலங்கா அரசு நடத்தியது. பின்னராக வெளிவந்த இனஅழிப்பின் சான்றுகளுக்கு பொறுப்புக்கூற வைக்க வேண்டிய இடத்தில் சிறிலங்கா அரசு தற்போது உள்ளது.

இதனை மையப்படுத்தித்தான் சிறிலங்காவை அனைத்துல குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென ஈழத்தமிழ் மக்கள் போராடி வருகின்றனர்.

இதில் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்வி சிறிலங்கா அரசினை நோக்கி உள்ளது

கடந்த பத்து ஆண்டுகளாக வலிந்துகாணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களின் (தாய்மார்கள், பெண்கள்) போராட்டம் என்பது இதற்கு சான்றாகவுள்ளது.

இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய இடத்தில் உள்ள சிறிலங்கா அரசு, 146 679 பேருக்கான பதிலைச் சொல்ல வேண்டிய நிலையிலும் உள்ளது

146 679 என்பது வெறும் இலக்கங்களின் கூட்டு அல்ல. ஒவ்வொரு இலக்கங்களின் பின்னாலும் ஒரு உயிர் உண்டு. அதாவது 'ஒரு இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒன்பது' உயிர்கள்.

ஐ.நாவின் அறிக்கையொன்றில் போரில் 80 பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் என சொல்லப்பட்டிருக்கின்ற போதும், இந்த எண்ணிக்கை உள்ளோர் எங்கே என்பதே கேள்வியாக உள்ளது.

2008-2009ம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் வன்னிப்பெரு நிலப்பரப்பில் போர் சூழலுக்குள் இருந்தவர்களுக்கும், பின்னர் அங்கிருந்து வெளியே வந்தவர்களுக்கும் இடையில் காணப்பட்ட 'வெளியின்' அடிப்படையில் இத் தொகை கணிக்கப்பட்டுள்ளது.

அதாவது 146 679 பேரே அந்த 'வெளியாகும்'. உள்ளிருந்தவர்கள், வெளியே வந்தவர்கள் யாவுமே சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்ட புள்ளிவிபரங்களாகும்.

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் வணக்கத்துக்குரிய இராஜப்பு ஜோசப்பு ஆண்டகை அவர்களே, இதனை ஆதாரபூர்வமாக வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

இதற்கான பதில் இன்னமும் இல்லை.

இந்நிலையில்தான் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்களது போராட்டம் கடந்த பத்து ஆண்டுகளில் முக்கியமான ஒன்றாகவுள்ளது.

வெள்ளை வான்களிலும், காவல் அரண்களிலும், விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதிலும் என பல்வேறு வகையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உச்சமாக, போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட பலர் எங்கே என்பது முக்கிய கேள்வியாக சிறிலங்கா அரசினை நோக்கியுள்ளது.

இவர்கள் காணாமல் போனவர்கள் அல்ல. இவர்கள் காணாமல்'ஆக்கப்பட்டவர்கள்' என்ற வகையில் இதற்கான 'பொறுப்புக்கூறலை' ஏற்க வேண்டிய நிலையே சிறிலங்கா அரசுக்கு அச்சங்கொடுக்கின்ற ஒன்றாக உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளின் நீதிக்கான தொடர் போராட்டம், தமிழர் தாயகம் எங்கும் ஓயாத உணர்ச்சிக்குரலாக ஒலித்துக் கொண்டேயுள்ளது. இப்போராட்டங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் தாய்மார்களாகவும் பெண்களாகவும் உள்ளனர்.

இது ஆர்ஜென்ரீனாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களைத் தேடும், தாய்மார்களின் நீதிக்கான போராட்டத்தை ஞாபகப்படுத்தும் ஒன்றாக உள்ளது.

இலங்கைத்தீவுக்கு பயணம் செய்கின்ற ஒவ்வொரு சர்வதேச பிரநிதிகளின் வாயில்களிலும் இத்தாய்மார்களின் கண்ணீர்குரல், அனைத்துலக சமூகத்தின் நீதியைக் கோரி நிற்கின்றது. ஜெனீவா-ஐ.நா மனித உரிமைச்சபையிலும் இதற்கான இலங்கைத்தீவில் குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டு வருகின்றது.

சிறிலங்கா தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களும் இக்குரலையே பிரதிபலித்திருந்தன.

'இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எவரும் இன்று உயிருடன் இல்லை' என கூறியுள்ள இலங்கையின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே,அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்பதுபற்றி தகவல் தர மறுத்துள்ளதுடன், சிறிலங்கா படைத்தரப்பை காப்பாற்றிக் கொள்வதிலேயே கருத்தாயிருக்கின்றார் என பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். இவர் மட்டுமல்ல சிறிலங்கா அரச தரப்பினர் யாவருமே படைத்தரப்பை காப்பாற்றிக் கொள்ளவதிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளனர்.


ஆனாலும் நீதிக்கான குரல் ஒலித்துக் கொண்ட இருக்கின்றது.

இந்நிலையில்தான் சமீபத்தில் சிறிலங்கா அரசாங்கம் ஐ.நா மனித உரிமைச்சபையில் சிறிலங்கா தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 30-1 தீர்மானத்துக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவாகரத்தினை கையாள ஒரு அலுவலகத்தை நிறுவியுள்ளது.


இது, ஐ.நா தீர்மானத்தின் பரிந்துரைக்களுக்கு முரணாக, பாதிக்கப்பட்ட தரப்பின் கருத்துக்களையோ, அனைத்துலக வல்லுனர்களின் பங்களிப்பையோ ஏதுமன்றி, அனைத்துலக சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு மாறான, தன்னிச்சையாக ஒன்றை நிறுவி அதற்கான பிரநிதிகளையும் இலங்கை அரசாங்கம் அமர்த்தியுள்ளது மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

நீதிக்காக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் முற்றாக இதனை நிராகரித்துள்ளனர். இது அனைத்துலகத்தை ஏமாற்றும் ஒரு









நடவடிக்கை என கூறுகின்றனர்.

சிறிலங்கா அரசு இவ்வாறான ஆணைக்குழுக்களை நியமிப்பது புதிதல்ல. கடந்த காலங்களிலும் பல ஆணைக்குழுக்களை நியமித்துள்ளது.

1994-1998-2006-2013 ஆகிய காலகட்டங்களில் பல்வேறு பொறிமுறையில் ஆணைக்குழுக்கள் சிறிலங்காவின் ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை யாவுமே எந்த அதிகாரமும் அற்ற விசாரித்து வாக்குமூலங்களை பெறுகின்ற ஆணைக்குழுக்களாவே இருந்துள்ளன.

இந்த ஆணைக்குழுக்கள் தொடர்பில் இரு ஆணைக்குழுக்களில் செயலராக பணியாற்றியிருந்த எம்.சி.எம். இக்பால் அவர்கள் இந்த ஆணைக்குழுக்களில் உள்ளார்ந்து தான் அவதானித்த விடயங்களை கட்டுரையொன்றின் மூலம் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளார்.

'இவ்வாணைக்குழுக்களின் அறிக்கைகளில் குறித்த காலத்தில் பல பாரிய புதைகுழிகள் பற்றிய விபரங்களும், சித்திரவதை முகாம்கள் பற்றிய விபரங்களும் உள்ளன. இது தொடர்பில் அவ்வகையிலான புதைகுழிகளுக்கு அருகாமையில் வசித்தவர்களும் சித்திரவதைக்குள்ளாகி உயிர் தப்பியவர்களின் சாட்சியங்களும் உள்ளன. அவற்றுடன் தொடர்புபட்டவர்கள் பற்றிய விபரங்களும் பதியப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் இதுவரையில் இவ்விடயங்கள் தொடர்பில் சம்பந்தபட்டவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என அவர் குறிப்பிட்டுள்ள விடயம் மிக முக்கியமானது.

அதாவது சிறிலங்கா அரசதரப்புநியமிக்கின்ற ஆணைக்குழுக்களின் நிலைமை.

சிறிலங்கா அரசின் முப்படைகளுக்கும் அதிபொறுப்பானவர் ஜனாதிபதியே என்ற நிலையில், தனது அதிகாரத்துக்கு உட்பட்ட படையினர் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களை காப்பாற்றுகின்றவராகவே இருக்கின்றார் என்பதனைத்தான்

எம்.சி.எம். இக்பால் அவர்களுடைய கூற்று மெய்பிக்கின்றது.

தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற மைத்திரியே போரின் இறுதி நாட்களில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். இந்நிலையில் அக்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர் சம்பவங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவராக அவர் மட்டுமன்றி அவருக்கு கீழ் இருந்த, இருக்கின்ற படையதிகாரிகளும் உள்ளனர்.

இது வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல், குற்றவாளியே குற்றங்களை விசாரிப்பதாக உள்ளது. இது சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கே உரிய வேடிக்கையாக உள்ளது.

இந்நிலையில் தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு போரின் போது கொல்லப்பட்டவர்களாக கருதப்படுகின்ற 146 679 பேருக்கு மட்டுமல்ல, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பதிலையும் கூற வேண்டிய இடத்தில் சிறிலங்கா அரசு உள்ளது.

இந்நிலையில்தான் தமக்கு நடந்தேறிய இனப்படுகொலைக்கு, போர்குற்றங்களுக்கு, மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறவைக்கவும், அதன்வழியே தமக்கான பரிகார நீதியினைப் பெற்றுக் கொள்ளவும் சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கோரி வருகின்றனர்.

உயிர் விலை கொடுத்த சவக்காடு, மறந்து போகுமா முள்ளிவாய்க்கால், மே 18

முள்ளிவாய்க்கால்: தமிழர் தலைவிதி தமிழர் கையில்!

"தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியை தாமே தீர்மானித்தல்"

ஈழத்தமிழர் தேசம் தனது அரசியல் நிகழ்ச்சிநிரலை தானே தீர்மானிக்கும் வகையில் வியூகம் அமைத்து செயற்பட வேண்டிய அவசியத்தினை முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த பத்து ஆண்டுகள் உணர்த்தி நிற்கின்றது.







2009ல் தமிழர் தேசத்தை ஆக்கிரமிப்புச் செய்த சிங்கள அரச கட்டமைப்பு, அனைவரும் இலங்கையர்கள் (சிறிலங்கன்ஸ்) என்ற ஒற்றைச்சொல்லுக்குள் அடக்கியவாறு, ஒற்றையாட்சி சிங்கள பௌத்த கோட்பாட்டுக்குள் தமிழர்களை நிரந்தமான அடிமைகளாக வைத்திருக்கவே அது முனைகின்றது.

தான் ஆக்கரமிப்புச் செய்த தமிழர் தேசத்தை தனது இராணுவபிடிக்குள் நிரந்தமாக வைத்திருந்தவாறு, சிங்களமயமாக்கல், பௌத்த மயமாக்கலை அரச கட்டமைப்பு செய்து வருகின்றது. இது ஒருவகையிலான இனஅழிப்பாகும்.

இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதனை மறுதலித்து, தமிழர்களை ஒரு சிறுபான்மையினக் கூட்டமாக அவர்கள் மீது அரசியற்தீர்வுத்திட்டம் என்ற பெயரில் ஒன்றை திணிப்பதற்கு அரச கட்டமைப்பு முனைகின்றது.

இந்நிலையில்தான், முள்ளிவாய்க்காலின் பின்னரான இப்பத்தாண்டு காலத்தில் தமிழர்கள் தமக்கான அரசியல் தலைவிதியினை தாமே தீர்மானிக்க ஒரு செயற்திட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சிறிலங்கா ஆட்சியாளர்களதும், அனைத்துலக அரசுகளதும் நிகழ்ச்சிநிரலுக்கு உட்பட்டு எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக, தமக்கான அரசியல் அரங்கை தாம் எவ்வாறு அமைத்துக் கொள்ளலாம் என்பது குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியதொரு காலகட்டத்திற்கு ஈழத்தமிழினம் எத்தனிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழர் தலைவிதி தமிழர் கையில் என்பதாக பொதுவாக்கெடுப்பு நோக்கிய மக்கள் இயக்கமாக அது பரிணமிக்க வேண்டியகட்டத்தில் உள்ளது.

உலகில் ஒடுக்கப்பட்ட மக்கள், அரசற்ற சிறிய தேசிய இனங்கள் தமது அரசியற்கனவுகளை, அரசியற்பெருவிருப்புகளை, தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிப்பதற்கான வழிவகைகள் குறித்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர். 2017ம் ஆண்டில் குர்திஸ்தானிலும் கத்தலோனியாவிலும் நடைபெற்ற தனிநாட்டுக்கான பொதுவாக்கெடுப்புகள் ஈழத்தமிழர்கள், தமக்கான பொதுவாக்கெடுப்புக்கான செயற்வழிப்பாதைக்கு உற்சாகத்தை கொடுத்துள்ளன.

உலகஅரசுகளின் ஆதரவு இல்லாமல் எவ்வாறு இச்செயற்திட்டத்தினை வெற்றியடைய முடியும் என்ற கேள்வியும் காணப்படுகின்றது. ஆனால் மாறிவரும் தற்போதைய உலகஒழுங்கிலும், அனைத்துலக சட்டங்களிலும், அரசற்ற இனங்களாலும், அமைப்புக்களாலும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய அரசியல் சட்ட வெளிகள் அனைத்துலக அரங்கில் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசுகளின் விருப்பத்தை வெறுமனே நிறைவேற்றும் சேவகர்களாகத் தமிழ் மக்கள் இருக்காது, தமிழ் மக்களின் நலன்களையும் அரசுகளின் நலன்களையும் ஒரேகோட்டில் இணைய வைக்கக்கூடிய வழிவகைகள் குறித்து நாம் சிந்திக்க முடியுமே தவிர அரசுகளின் நலன்களை நிறைவேற்றிக் கொடுக்கும் எடுப்பார் கைப்பிள்ளைகளாக தமிழ்மக்கள் இருக்க முடியாது எனக் கூறப்படுகின்றது..

அந்தவகையில் தமது அரசியற் தலைவிதியியை தாமே தீர்மானிக்கும் உரிமையினை வலியுறுத்துவதாக பொதுவாக்கெடுப்பு நோக்கிய செயல் வழிப்பாதை அமைகிறது.

தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வும் தமிழ் மக்களால் தீர்மானிக்கப்படுதல் முக்கியமானது. இது தமிழீழ மக்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாட்டின்பாற்பட்ட அடிப்படையான உரிமையாகும். தமிழீழ மக்களது தேசிய இனப்பிரச்சினைக்கான எத்தகைய தீர்வும் இனபடுகொலையிலிருந்த தமிழர் தேசத்தைப் பாதுகாக்கக் கூடியவகையில், தமிழ் மக்களுக்கான ஈடுசெய்நீதியின் அடிப்படையில் எட்டப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு தமிழீழ மக்களுக்கு பரிகாரநீதியின் அடிப்படையிலான அரசியற்தீர்வு அவசியம் என்பதனை வலியுறுத்துகிறது.

தமிழ் மக்களின் அரசியற்தலைவிதியைத் தமிழ் மக்களே தீர்மானிக்கும் வகையில் தமிழீழத் தனியரசு உள்ளடங்கலான அரசியற்தீர்வு குறித்து தாயகத்திலும், ஈழத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதே இச்செயல்ழிப்பாதை சென்றடையும் இடமாகவுள்ளது.

தமிழர் தலைவிதி தமிழர் கையில் என்ற முழக்கத்துடன் பொதுவாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கமாக தமது அரசியற்தீர்வை நோக்கி ஈழத்தமிழர்கள் பயணிக்க வேண்டிய கட்டத்தை முள்ளிவாய்க்காலின் பின்னரான இந்த பத்து ஆண்டுகள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

முள்ளிவாய்க்கால்: நாம் என்ன செய்யப் போகின்றோம்?

இலங்கையில், மிக நீண்டகாலம் தொடர்ந்த உள்நாட்டுப் போரானது, பேரழிவுகளோடு 2009 இல் முள்ளிவாய்க்கால் என்னும் இடத்தில் முடிவிற்கு வந்தது.

இறுதி யுத்தத்தில் நடைபெற்ற யுத்தக்குற்றங்கள் பலவற்றிற்கான ஆதாரங்கள் இருந்தும், எதுவும் 'முறையாக' இன்னமும் விசாரிக்கப்படவில்லை.

இலங்கையில் இன அழிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட, போரிலே பலவகைகளிலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கான 'பரிகார நீதி' இதுவரை கிடைக்கவில்லை.

ஒரு கொடிய போரின் மூலம் ஆயுதப் போராட்டம் இல்லாமலாக்கப்பட்டு, பத்து வருடங்களாகி விட்டன. பத்து வருட கால ஈழத்தமிழரின் ஒட்டுமொத்த வாழ்வியலில், அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஆரோக்கியமான முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

இந்த வருடத்தில் (2019), அப்பாவி மக்களைக் குறிவைத்துப் பயங்கரவாதக் குழுவினரால் நிகழ்த்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த இலங்கையின் நிலைமை மேலும் சீரழிந்திருக்கிறது. இத்தகைய மோசமான நிலைமை, இலங்கையினுள்ளே தொழிற்படக்கூடிய பேரினவாத அதிகார சக்திகளுக்கும் இலங்கையை முன்வைத்துச் சதி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சர்வதேச சக்திகளுக்கும் சாதகமானதாகவே இருக்கும். மத ரீதியான மற்றும் இன ரீதியான முரண்பாடுகள் மேலும் கூர்மைப்படுத்தப்படக் கூடும். இலங்கை அரசின் 'பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள்', இலங்கையின் சிறுபான்மை இனங்களை மோசமாகப் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படக் கூடும்.

எது எப்படியிருந்தாலும், விழிப்புணர்வுடனும் ஒற்றுமையுடனும் சாத்தியமான ராஜதந்திர அணுகுமுறைகளுடனும் நீதிக்கான போராட்டங்களைத் தொடரவேண்டியவர்களாக ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள்.

பேரினவாதம், மதவாதம், தேசிய அடிப்படைவாதம் போன்றவற்றின் நிழல்களிலே தொழிற்படக்கூடிய அடிப்படைவாத சக்திகளிடம் இருந்து விலகியிருக்கும் கண்ணியத்தை ஈழத்தமிழினம் கொண்டிருக்க வேண்டும். மட்டுமல்ல, அத்தகைய தீய சக்திகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ளும் ஓர்மத்தையும் ஈழத்தமிழினம் கொண்டிருக்க வேண்டும்.



நிகழ்ந்திருக்கும் அநீதிகள் குறித்த உரையாடல்களை அறிவுபூர்வமாகத் தொடர்வதும், நீதிக்கான போராட்டங்களைப் பல்வேறு தளங்களில் வீரியமாக முன்னெடுப்பதும் அவசியமாகும். வேண்டிய தருணங்களில் போராடிக்கொண்டிருப்பது மட்டுமல்ல, 'வேண்டாத இடங்களில்' விலகியிருப்பதும் விடுதலை அரசியல் செல்நெறிக்கு வேண்டியதாகும்.

மரணித்த மாந்தரை, சேற்று நிலத்தில், புதைக்க முடியாமல் திண்டாடிய நாட்கள்

தெய்வம் தந்த பூவே

"ஆளப்போறான் தமிழன்"

சுரம் – 5

என். சொக்கன்



அன்றைக்கு, எதேச்சையாக திலீப் அறைக்குள் எட்டிப்பார்த்தார் காஞ்சனா. அவன் ஓர் எலக்ட்ரானிக் இசைக் கருவியைப் பிரித்துப் போட்டு மேய்ந்துகொண்டிருந்தான்.

'பய வசமா மாட்டிகிட்டான்' என்று துள்ளினார் காஞ்சனா, நேராகக் கஸ்தூரியிடம் ஓடினார், 'அம்மா அம்மா, இந்த திலீப் என்ன பண்றான்னு வந்து பாரேன்'

அம்மா வந்து பார்ப்பதற்குள் அந்த எலக்ட்ரானிக் சாதனத்தைப் பழையபடி மாட்டிவிட்டான் திலீப். அதைத் தொட்டுப் பார்த்தால்அது எந்தப்பிரச்னையும்இல்லாமல் சமர்த்தாக இயங்கிக்கொண்டிருந்தது.

காஞ்சனா திகைத்துப்போனார். இப்போதுதானே இந்தச் சாதனம் துண்டு துண்டாகக் கீழே கிடந்தது. எப்படி மறுபடியும் அதை இணைத்து ஒழுங்காக இயங்கவைத்தான் இவன்? ஆச்சர்யத்தில் வாயடைத்து நின்றார் அவர்.

அக்காவும் தம்பியும் இப்படி அடிக்கடி சண்டைபோட்டாலும், காஞ்சனா, திலீப் இருவரையும் ஒன்றாகவே இசை வகுப்புகளுக்கு அனுப்பிவைத்தார் சேகர். அவர் நினைத்ததுபோலவே, திலீப் ஓர் அசாதாரணமான இசை மாணவனாக வளர்ந்துகொண்டிருந்தான்.

1975ம் ஆண்டு, ஆர். கே. சேகர் 'பென்படா' என்கிற மலையாளப் படத்துக்கு இசையமைத்துக்கொண்டிருந்தார். அதற்குப் பாடல்களை எழுதிய கவிஞர் பெயர், பரணிக்காவு சிவக்குமார்.

அந்தப் படத்துக்கு, மொத்தம் நான்கு பாடல்கள் தேவைப்பட்டன. அவற்றில் மூன்று தயாராகிவிட்டது, கடைசிப் பாடலின் மெட்டுக்காக எல்லோரும் காத்திருந்தார்கள்.

அப்போது திலீபுக்கு வயது எட்டோ, ஒன்பதோ. அப்பாவுடன் ரெகார்டிங் பார்க்க வந்திருந்த அவன், ஹார்மோனியத்தில் விளையாட்டாக ஏதோ வாசித்துக்கொண்டிருந்தான்.

அன்றைக்கு திலீப் வாசித்த அந்த இசை, அங்கே இருந்த எல்லோரையும் கவர்ந்தது, 'தம்பி, அதைக் கொஞ்சம் மறுபடி வாசிச்சுக் காட்டு' என்று யாரோ கேட்டார்கள்.



திலீப் மறுபடியும் வாசித்தான், 'இந்த ட்யூன் ரொம்ப நல்லா இருக்கே' என்று பாராட்டினார் அவர், 'பேசாம இதையே நம்ம படத்துக்குப் பாட்டா வெச்சுட்டா என்ன?'

ஆர். கே. சேகருக்கு உற்சாகம். அதுவரை எத்தனையோ பேருக்கு இசை நடத்துனராக வேலை பார்த்திருக்கும் அவர், அன்றைக்குத் தன்னுடைய சொந்த மகனின் மெட்டுக்குச் சங்கீத ஒப்பனைகள் செய்து அலங்கரித்தார். 'வெள்ளித்தேன் கிண்ணம் போல்' என்று தொடங்கும் அந்தப் பாடலை பி. ஜெயச்சந்திரன் பாடினார்.

இந்தச் சம்பவம், எவ்வளவு தூரம் உண்மை என்பதை யாரும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனால், அந்தப் படத்தில் பாடல் எழுதிய பரணிக்காவு சிவக்குமார், பிரபல பாடகர் கே. ஜே. யேசுதாஸ் இருவரும், 'வெள்ளித்தேன் கிண்ணம் போல்-தான் ஏ. ஆர். ரஹ்மானின் முதல் பாட்டு, ஒன்பது வயதில் அவர் அந்தப் பாடலுக்கு இசை அமைத்தார்' என்று அடித்துச் சொல்கிறார்கள்.

இது உண்மையா, பொய்யா என்கிற சர்ச்சைக்குள் நாம் நுழையவேண்டாம். அந்தச் சின்ன வயதிலேயே திரை இசை மெட்டுகளை அடையாளம் காணக்கூடிய வல்லமை ரஹ்மானுக்கு இருந்திருக்கலாம் என்றுமட்டும் ஒரு வரி குறித்துவைத்துக்கொண்டு, மேலே போகலாம்.


இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதுபோல இன்னொரு சம்பவம். இதுவும் கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் நடந்துதான்.

அப்போது ஆர். கே. சேகரிடம் உதவி இசையமைப்பாளராகப் பணிபுரிந்துகொண்டிருந்தவர்களில் ஒருவர், ஆகுல அப்பல ராஜு. பின்னர் ஏ. ஏ. ராஜு என்ற பெயரில் சில படங்களுக்கு இசையமைத்தவர், தமிழில் மிகப் பிரபலமான 'ஒரு தலை ராகம்' படத்தில்கூட இவருடைய இசைப் பங்களிப்பு இருந்திருக்கிறது.

இந்த ஏ. ஏ. ராஜு, ஒருமுறை சேகரைப் பார்க்கச் சென்றிருந்தார். அவரிடம் தன்னுடைய மெட்டு ஒன்றை ஹார்மோனியத்தில் வாசித்துக் காண்பித்தார்.

அவருடைய கெட்ட நேரம், வாசிக்கும்போது ஒரு சின்னத் தவறு செய்துவிட்டார். அதை சேகர் கண்டுகொண்டாரோ இல்லையோ, பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒன்பது வயது திலீப் கவனித்துவிட்டான், சட்டென்று சிரித்துவிட்டான்.

சேகருக்குப் பெருமை தாங்கவில்லை, 'குறும்புக்காரப் பையன், நீங்க ஒரு சின்னத் தப்பு செஞ்சதும், உடனே சிரிச்சு மானத்தை வாங்கறான், பாருங்களேன்' என்று விளையாட்டாகச் சொன்னார்.



திலீபின் இசைப் பிரியம் அதிகரிக்க அதிகரிக்க, அவருக்குப் படிப்பில் ஆர்வம் குறைந்துகொண்டே போனது. 'ஒவ்வொரு வருடக் கடைசியிலும், திலீபுடைய பாடப் புத்தகங்களைப் பார்த்தால், அந்த வருடம் முழுக்க இதை யாராவது படித்தார்களா, இல்லையா என்று சந்தேகமே வரும், அந்த அளவுக்குப் புத்தம்புதுசாகப் பாடப் புத்தகங்களை வைத்திருப்பார்' என்று குறும்பாகச் சிரிக்கிறார் அவரது அக்கா.

இத்தனைக்கும், வகுப்பில் திலீப் எப்போதும் முதல் வரிசையில்தான் உட்கார்ந்திருப்பான். யாருடனும் அநாவசியமாகப் பேசமாட்டான், கலாட்டா, கிலாட்டா எதுவும் கிடையாது, ஆனால் படிப்பு என்று வந்துவிட்டால்மட்டும் அரை கிலோமீட்டர் தூரம் ஓடிவிடுவான்.

திலீபிடம் ஆசிரியர்கள் சந்தித்த இன்னொரு பிரச்னை, அவனுடைய நீளமான முடி. முகத்தை மூடும் அளவுக்குக் கிட்டத்தட்ட அரையடிக் கூந்தலையே வளர்த்துவைத்திருந்தான் அவன்.

அந்த முடியைச் சிறியதாக வெட்டிக்கொள்ளும்படி கேட்டுக் கேட்டு ஆசிரியர்கள் சலித்துப்போனார்கள். 'ம்ஹூம், முடியவே முடியாது' என்று மறுத்துவிட்டான் திலீப்.

சரி, முடி வெட்டிக்கொள்ளதான் விருப்பம் இல்லை. குறைந்தபட்சம் அதை ஒழுங்காக வாரிக்கொண்டு பள்ளிக்கு வரலாம்தானே?

திலீப் அதையும் செய்யமாட்டான். தலை முடி முன்னால் விழுந்து கண்ணை மறைக்கப் பள்ளிக்கு வருவதுதான் அவனுக்குப் பிடித்திருந்தது.

இத்தனைக்குப்பிறகும், பத்மாசேஷாத்ரி பால்பவன் பள்ளி ஆசிரியர்கள் திலீபைச் சகித்துக்கொண்டிருந்தார்கள் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான், அவனுடைய இசை ஞானம்!

அப்போதெல்லாம், பள்ளியில் எந்த விழா கொண்டாடினாலும், ஆசிரியர்கள் முதலில் திலீபைதான் தேடுவார்கள். கலை நிகழ்ச்சிப் பட்டியலில் முதலாவதாக, திலீபின் இசை நிகழ்ச்சிதான் இருக்கும்.

ஆரம்பத்தில் ஹார்மோனியம் வாசிப்பது, கீபோர்ட் வாசிப்பது என்று சிறிய அளவில் தொடங்கிய திலீப், கொஞ்சம் கொஞ்சமாக அவன் கற்றுக்கொண்ட இசை சமாசாரங்களையெல்லாம் பள்ளி விழாக்களில் அரங்கேற்ற ஆரம்பித்தான். தன்னந்தனி ஆர்க்கெஸ்ட்ராவாக மேடையை ஆக்கிரமித்த அவன், சீக்கிரத்திலேயே அந்தப் பள்ளிமுழுக்க ஒரு 'குட்டி ஸ்டார்' ஆகிவிட்டான்.

இத்தனைக்கும், திலீப் அப்போது குட்டிப் பையன். கீபோர்டைத் தூக்கிச் சுமக்கக்கூட முடியாது. யாராவது ஆசிரியர்கள்தான் உதவி



செய்வார்கள். ஆனால் மேடை ஏறி வாசிக்கத் தொடங்கிவிட்டால், அவனுக்கு இந்த உலகமே மறந்துவிடும்.

பள்ளி மேடைகளில் திலீப் வெறுமனே அடுத்தவர்களுடைய இசையை வாசித்துக் காட்டுவதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. ஆசிரியர்கள் எழுதிய குட்டிக் குட்டிப் பாடல்கள், கதைகளுக்கெல்லாம் சொந்தமாக ட்யூன் போட்டு அசத்தினான்.

இந்த இசைத் திறமை காரணமாக, திலீபுக்குப் படிப்பு வரவில்லையே என்று யாரும் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஏதோ பாஸ்செய்கிற அளவுக்குப் படித்தால் போதும் என்று கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார்கள்.

ஆர். கே. சேகருக்குத் தன்னுடைய மகனின் இசை ஞானத்தைப்பற்றி நிறையப் பெருமை உண்டு. ஆனால் அதேசமயம், திலீப் தன்னைப்போல் ஓர் இசையமைப்பாளராக வரவேண்டும், சங்கீதத்தை நம்பிப் பிழைக்கவேண்டும் என்றெல்லாம் அவர் வற்புறுத்தவில்லை, 'தாராளமா ம்யூசிக் கத்துக்கோ, ஆனா ஸ்கூல்ல நல்லாப் படிக்கணும்' என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார்.

தொடரும்...

Residential
Commercial
Condos Land
& Investment
Properties

Raj Nadarajah
Sales Representative
Email: nanohomes@gmail.com
RE/MAX
RE/MAX EXCEL REALTY LTD Brokerage
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Independently Owned and Operated
PHONE: 905-475-4750 • FAX: 1-866-817-6115



Direct: 416-333-6115 • www.nanohomes.ca

ALL SEASONS INSURANCE
BROKERAGE INC.

GREAT RATES ON COMMERCIAL!

Get your FREE, no obligation quote today and no brokerage fees are applied

Good Service Is Good Business

Save Up to 30%

When You Bundle Home & Auto



Many Discounts Available:

- Multi-Vehicle Discount
- Autonomous Brake Discount
- Green Vehicle Discount
- Students away from home save up to 50% on auto insurance

Call Us or Stop By Today!

4865 Sheppard Avenue East, Unit 2
Toronto, ON M1S 3V8

Office: 416-628-7754
Cell: 416-826-4298
www.allseasonsinsurance.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...


FINANCIAL BENEFITS

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



2016 நவம்பர் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஸ்யாவின் தொடர்பு குறித்த றொபேர்ட் மூலர் விசாரணை கமிஷன் அறிக்கை நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது தெரிந்தது. முதலில் நான்கு பக்க ரெய்லர் விட்ட நீதியமைச்சர் வில்லியம் பார் இப்போது 448 பக்கங்கள் கொண்ட அடுத்த ரெயிலரை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கை அமெரிக்க அரசியல் களத்திலும் மக்கள் மன்றத்திலும் ஊடகங்களிலும் இப்போது புயலாக வீச ஆரம்பித்துள்ளது.



நீதி அமைச்சர் வில்லியம் பார் வெளியிட்ட அறிக்கையானது றொபேர்ட் மூலர் விசாரணை கமிஷனின் முழுமையான அறிக்கையல்ல. அதிபரை காப்பாற்ற வசதியான வகையில் சென்சார் செய்யப்பட்ட ஓர் அறிக்கை மட்டுமே.

இந்த அறிக்கையில் உள்ள அமெரிக்க அதிபருக்கு வாய்ப்பான பக்கங்கள் எவை ?

ஒன்று அமெரிக்க அதிபர், றீஸ்ராட் எனப்படும் விசாரணையை சந்திக்க வேண்டியதில்லை. பதவியில் இருந்து விலகி, சந்திக்கவேண்டிய அதி உயர் பீடத்தை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றமே இது. இதனுடைய வழக்கை இனி அவர் சந்திக்க வேண்டியதில்லை, தப்பிவிட்டார்.

அதாவது முன்னாள் பிரேசிலின் அதிபர் டீல்மா ரூசெப் மீது கொண்டுவரப்பட்ட விசாரணை போன்ற ஒரு விசாரணையை ட்ரம்ப் மீதும் சிபாரிசு செய்ய போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி உள்ளது.

இந்த மதிப்பீடு அதிபரின் பதவி நாற்காலியை உடனடியாக சரித்து வீழ்த்தாது அவருக்கு பாதுகாப்பை வழங்கியுள்ளது. இதனால்தான் கேம் இஸ் ஓவர் என்று அமெரிக்க அதிபர் தனது தரப்பில் எழுதியிருக்கின்றார்;

மேலும் ஒரு படி பாய்ந்து, அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னதாக இந்த நாள் தான் வெள்ளை மாளிகையின் வெற்றித் திருநாள் என்று வெள்ளை மாளிகை பெண் தொடர்பாளர் கெல்யாணி கொன்வே கூறியிருக்கிறார்.

இந்த விசாரணையில் சட்டவாட்சியின் முக்கிய மூன்று மூலக்கூறுகளான சட்டம், நீதி, நிர்வாகம் என்பவற்றில் சட்டமியற்றும் அரசியல் பிரிவும், வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கும் நீதிப் பிரிவும் தான் முக்கியம் பெற்றிருந்தன. ஆனால் இப்போதோ நீதிப் பிரிவு செயலிழந்துவிட்டது. ஏனென்றால் அதிபருக்கு எதிரான நீதி விசாரணை கிடையாது.

ஆனால்அரசியல்பிரிவுதோற்றுவிடவில்லை அது உறங்காது. அரசியல் களத்தில் டொனால்ட் ட்ரம்பிற்கு எதிரான பிரச்சாரங்கள் இனி வலுக்கும். எதிர்வரும் 2020 தேர்தலில் அதிபர் வெற்றிக்கு துணை புரியும் என்று கருதப்பட்ட இந்த அறிக்கையானது இப்போது அவருடைய தோல்விக்கே வழிகாட்டும் என்றே கருதப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சியான டெமக்கிரட் கட்சியின் பிரதிநிதிகள் சபை தலைவர் நான்சி பிலேசி அம்மையார் நீதி அமைச்சரின் அறிக்கையை ஏற்க முடியாது என்று கூறி, இதற்கு எதிரான தமது அரசியல் போராட்டம் தொடரும் என்று பதிவிட்டுள்ளார்.

கேம் இஸ் ஓவர் ஆட்டம் முடிந்தது என்று டொனால்ட் ரம்ப் ரிவிற்றரில் எழுதினாலும், ஆட்டத்தில் தனக்கே வெற்றி என்று அவரால் எழுத முடியாமல் போய்விட்டது கவனிக்கத்தக்கது.

ஆட்டம் ஓவர் என்றால் அதில் மூன்று நிலைகள் இருக்கின்றன.. ஒன்று வெற்றி, இரண்டு தோல்வி, மூன்று சமநிலை இதில் எது நடந்திருக்கிறது என்பதை கூறாமல் கேம் இஸ் ஓவர் என்று கூறியிருக்கிறார். இதற்குக் காரணம் அந்த அறிக்கையில் அவருக்கு எதிரான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

ஆதாரங்கள் எவை..?

அதிபருக்கு எதிராக 14 குற்றங்களை அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது, ஆனால் இப்போது வெறும் இரண்டு குற்றங்கள் மட்டுமே அம்பலப்படுத்தப்பட்டுள்ளன, மற்றவை மறைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க விவகாரம் நீதியமைச்சரின் கையில் அதிகாரம் இருப்பதனால் மறைக்கப்பட்டுள்ளது. அதை வெளிக்கொண்டு வரும் பலம் எதிர்க்கட்சிகளிடம் இல்லை. காரணம் காங்கிரசில் அவர்களுக்கு பெரும்பான்மை இல்லை.

இதுதான் இதுவரை இதற்கான வியாக்கியானம்.

இந்த அறிக்கையின் 370 வது பக்கத்தில் ஒரு பந்தி வருகிறது, அது அதிபரின் மீது நடவடிக்கை எடுக்க போதிய ஆதாரம் இருக்கிறதென கோடி காட்டுகிறது.

வெள்ளை மாளிகையின் வக்கீலான டொன் மக்கொன்னிடம் தொலைபேசி வழியாக பேசிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் றொபேட் மூலர் விசாரணை கமிஷனை கலைத்துவிடும்படி கூறியிருக்கிறார். மூலர் விசாரணையையும் நிறுத்தி, அவரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அதற்கான உத்தரவை பிறப்பிக்கும்படி உதவி நீதி அமைச்சருக்கு கூறும்படியும் கேட்டிருக்கின்றார்.

ஆக குற்றமற்ற ஒருவராக இருந்தால் விசாரணை கமிஷனை அழிக்கவும் நிறுத்தவும் அவர் ஏன் அவசரப்பட்டார்? மேலும் விசாரணை கமிஷனை கெட்ட வார்த்தைகளால் திட்டியிருக்கிறார், ஏன்..?

மொத்தம் பதினொரு குற்றச்சாட்டுக்கள் அதிபர் விசாரணை கமிஷனை தனது அதிகாரத்தை பயன்படுத்தி, செயலிழக்கச் செய்வதற்காக எடுத்த முயற்சிகளை அடையாளம் காட்டுகின்றன.

அதில் முக்கியமானது குற்றவாளி பிடிபட வரும் தருணத்தில் ஒன்று சட்டென பதவி விலகுவது, இல்லை விலக்கப்படுவதும் வழமையாக நடந்துள்ளது.

உதாரணம் எப்.பி.ஐ போலீஸ் பிரிவு கமிஷனர் ஜேம்ஸ் கொமி நடத்திய விசாரணையானது அமெரிக்க அதிபரின் பாதுகாப்பு ஆலோசகர் மிச்சேல் புளுய்னின் குரல்வளையை பிடிக்க நெருங்கிவிட்டது. பிடித்திருந்தால் ஒரு வேளை அதிபரும் கூடவே மாட்டியிருக்கலாம்.

அத்தருணம் விழித்துக் கொண்ட அதிபர் கேடுகெட்ட கருப்பு ஆடு என்று கூறி எப்.பி.ஐ நிர்வாகியாகிய ஜேம்ஸ் கொமியை பதவி விலக்கினார். இது அந்த 11 உதாரணங்களில் ஒன்றாகும்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா உள்நுழைய முயன்றது உண்மை. டொனால்ட் ரம்பை வெற்றித் தடத்தில் திருப்ப முயன்றதும் உண்மை. ஆனால்; அதை உறுதியாக நிறுவுவதற்கு ஆதாரங்கள் போதியதாக இல்லை. இது றொபேட் மூலர் கருத்து.

22 மாத விசாரணைக்கு இதுவா முடிவு..?

இப்படி விசாரணையை அவர் முடிக்க என்ன காரணம்..?

இந்த விசாரணையின் அம்பு அர்ச்சுணனாகிய அதிபர் மீது பாயாமல் இருக்க றொபேட் மூலர் என்கின்ற ஏகலைவனின் பெருவிரலை வெட்டிய துரோணரை இதுவரை யாருமே அம்பலத்திற்கு கொண்டு வரவில்லை.

இந்த அறிக்கையில் அமெரிக்க அதிபர் தேர்வுக்கான 2016 நவம்பர் தேர்தலை திசை திருப்பி, மக்களினுடைய வாக்குப்பலத்தை மடைமாற்றி, வெல்ல முடியாத ஒருவரை.. தானே தோற்று விடுவேன் என்று நிலைகுலைந்து போயிருந்த ஒருவரை.. ஒரே இரவில் வெற்றியாளராக்கிய அரும் பெரும் செயலை செய்தவர்கள் யார்..?

இதில் 26 ரஸ்யர்கள் 3 ரஸ்ய நிறுவனங்கள் 6 அமெரிக்க அதிபரின் ஆலோசகர்கள் என்று பெருந்தொகையானவர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். ஆனால் அதிபர் மட்டும் தவிர்க்கப்பட்டுள்ளார். இதுதான் டெமக்கிரட் கட்சிக்குள்ள கோபமும் கேள்வியுமாகும்.

இவ்வளவு சாட்சியங்கள் இருந்தும் 2400 க்கும் மேற்பட்ட ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் டொனால்ட் ட்ரம்ப் மட்டும் விடுவிக்கப்பட்டது எப்படி? இதுதான் கேள்வி.

இனி இவை பற்றிய இரண்டு சர்வதேச விவகார ஆய்வாளர்களின் மதிப்பீடுகளை பார்க்கலாம். ஒருவர் டென்மார்க் தெற்கு பல்கலைக்கழக அமெரிக்க விவகார பேராசிரியர் நீல்ஸ் பியார போவுல்சன். இன்னொருவர் ராஸ்முஸ் சின்டிங் சுனகோட் இவர் ஜோர்ஜ் ரவுண் பல்கலைக்கழக பேராசிரியர்.

இவர்கள் இருவருமே இந்த அறிக்கையை கறுப்பு வெள்ளையாக பார்த்து வெற்றி அல்லது தோல்வி என்று பூவா தலையா என்ற முடிவுக்கு வர முடியாது என்கிறார்கள். இது அதிபருக்கு மகிழ்ச்சி தரும் அறிக்கை அல்ல என்றும் குறிப்பிடுகிறார்கள்.

காரணம் அதிபருக்கு எதிராக வழக்குத் தொடர போதிய ஆதாரங்கள் இதில் உள்ளன. ஆனால் அவற்றை கொய்தெடுத்து மாலையாகக் கட்டாமல் றொபேட் மூலர் வேண்டுமென்றே விட்டுள்ளார். அவர் தன் முடிவுரையைச் சரியாக எழுத முடியவில்லை.

ஆனால் அவர் வழங்கிய அறிக்கையானது அதிபர் கழுத்தில் மாலை போட்டு பலிக்கடாவாக இழுத்துச் செல்லக்கூடிய பலம் கொண்டதே. அதிபரை பலிக்கடாவாக்க வேண்டிய வேள்வி மாலை ஒன்றை கட்டத் தேவையான பூக்களை பறித்து போட்டு விட்டு, இந்தப் பூக்களை எல்லாம் தொகுத்தால் மாலையாகிவிடும் என்று சொல்லாமல் சொல்லி விடை பெற்றுள்ளார் றொபேர்ட் மூலர்.

எதிர் காலத்தில் அமெரிக்க அதிபருக்கு எதிராக வழக்குத் தொடர போதிய காரணங்கள் இல்லாத உயிரற்ற எலும்புக் கூடல்ல இந்த அறிக்கை.

அமெரிக்க நீதி அமைச்சரிடம் கொடுத்து, வேவு பார்த்துள்ளார். அமெரிக்க நீதியமைச்சர் அமெரிக்க மக்களுக்கான நீதியமைச்சரா இல்லை அமெரிக்க அதிபருக்கான நீதியமைச்சரா என்று மக்கள் சிந்திக்க இந்த சம்பவம் வழிகாட்டியுள்ளது.

மேலும் அறிக்கையில் இன்னொரு விடயமும் வருகிறது. கருத்துக் கணிப்பில் அமெரிக்க அதிபர் பின் தங்கியிருந்தபோது அதிபரின் பிரச்சார பிரிவு பொறுப்பாளராகிய போல் மனோ போட்டின் நெற்றி சுருங்கியது.

அவர் ஏதாவது குறுக்கு வழியில் செல்லாவிட்டால் கருத்து கணிப்பில் முன்னேற முடியாது என்று கருதி, ரஷ்ய அரசின் நிர்வாக இயந்திரத்துடன் தொடர்புடைய சிலரை நாடியுள்ளார். அதைத் தொடர்ந்து ரஷ்ய ராணுவத்தின் உளவுப்பிரிவு களமிறங்கியது.

விளைவு நான்கு மாநிலங்களின் முடிவுகள் மாறுகின்றன..

1980 முதல் அமெரிக்க அதிபருடைய ரிபப்ளிகன் கட்சி வெற்றி பெறாத மாநிலங்களாக இருப்பவை விஸ்கொன்சின், பென்சில்வேனியா, மிச்சிக்கன், மினிசோற்றா என்ற நான்கு மாநிலங்களுமாகும். இங்கு யாருமே எதிர்பாராத வகையில் மிக சிறிய பெரும்பான்மையில் அமெரிக்க அதிபர் வென்றார்.

இப்படியொரு வெற்றி கிடைப்பதற்கு நடந்த அதிசம் என்ன..? அங்குதான் உள்ளது மர்மம்.

இந்த மாநில வாக்காளர்களை திசை திருப்பும் வேலையை ரஸ்ய இணைய உளவாளிகள் கையிலெடுத்தார்கள். கிளிண்டனின் மின்னஞ்சல்களை களவாடினார்கள் அவை விக்கிலீக்சில் வெளியாகின.

றொபேட் மூலர் விசாரணை கமிஷன் அறிக்கை வெளியாக, இங்கிலாந்தில் விக்கிலீக்ஸ் அதிபர் யூலியன் அஸங்கேயும் கைதானார். இதையும் இங்கு சேர்த்தே பார்க்க வேண்டும்.

இப்படி நடந்திருக்கும் திரை மறைவு நாடகங்களுக்கான காரணங்களைப் பார்த்தால், உண்மையில் டொனால்ட் ரம்பிற்கு இந்த அறிக்கை வெற்றியைத் தந்துவிட்டது என்று கூற முடியாது என்பதே நிபுணர்கள் கருத்தாகும்.

சரியான முடிவுரையை எழுதி..

இப்போதே டொனால்ட் ட்ரம்பபை மடக்கினால் இந்த விடயத்தில் அமெரிக்கா ரஸ்யாவிடம் தோற்றுப் போனது என்பதை, அமெரிக்கா எழுதாவிட்டாலும் நாளைய வரலாறு எழுதிவிடும்..

மாறாக இதுபோல ரஷ்யாவின் உதவியை எதிர்காலத்தில் எந்தவொரு வேட்பாளருமே நாடாமல் இருக்க வேண்டுமானால் அதற்கும் ஒரு வலுவான நடவடிக்கை வேண்டும்.

ஆகவேதான் முடிவுரையில்லாமல் அறிக்கையின் கதவுகள் யாரும் உள்நுழையக் கூடிய வகையில் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்கா தனது சுயநலத்திற்காக இப்போது செய்து வரும் காரியங்களான எருசலேமில் அமெரிக்கக் கொடியை ஏற்றியது, இஸ்ரேலுக்கு கோலான் குன்றை எழுதிக் கொடுத்தது, நேட்டோ நாடுகள் தமது மொத்த தேசிய வருமானத்தில் இரண்டு வீதமான பணத்தை படைகளுக்கு ஒதுக்க வேண்டும் என்றது, பின் அப்பணத்தை அப்படியே மடை மாற்றி, தம்மிடமே தந்து தமது நாட்டு ஆயுதங்களை வாங்க வேண்டும் என்று கட்டளை போட்டது, மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டுவது போன்ற காரியங்களை எல்லாம் செய்தது உலக நண்பனான அமெரிக்கா அல்ல.. அது தனி நபரான டொனால்ட் ரம்பின் வேலை என்று நாளை சப்பை கட்டு கட்ட இந்த நாடகங்கள் அமெரிக்காவுக்கு அவசியம். இதைச் சொல்ல இன்று உலகில் எந்த ஊடகமும் தயாரில்லை என்பதுதான் உண்மை.

கூர்ந்து பார்த்தால் இலங்கையில் 1983 யூலை கலவரத்தின் பின் அமைக்கப்பட்ட கண்துடைப்பு சன்சோனி கமிஷன் அறிக்கைக்கும் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் விசாரணைக்காக அமைக்கப்பட்ட றொபேட் மூலர் விசாரணைக் கமிஷன் அறிக்கைக்கும் பெரிய வேறுபாடுகள் இருப்பதாக தெரியவில்லை.

விசாரணைக் கமிஷன்கள் ஜனநாயகம் பெற்ற ஊனப்பட்ட குழந்தைகள் என்பதை றொபேர்ட் மூலர் விசாரணைக் கமிஷனும் உலகிற்கு எடுத்துரைத்துள்ளது.


ஆனால் பாவம் அமெரிக்க அதிபர்.. இந்த பாம்பு இன்னமும் செத்துவிடவில்லை என்பதும், அமெரிக்க சுயநலத்திற்காக அது மீண்டும் உயிர்க்கும் என்பதும் அவர் அறியாத இரகசியமல்ல.

- கி.செ.துரை



Majestic City
தமிழர்களின் அங்காடி
Shop • Dine • Entertainment
COMPLETION AUGUST 2019
70%
LEASED OUT
சிறிய முதலீட்டில் வியாபாரம் தொடங்குவதற்கு
அறிய சந்தர்ப்பம் அழையுங்கள்!
LEASING OPPORTUNITY
CRISH SIVAAKOLUNDU
Project Manager
Tel: 647-218-3698
www.majesticcity.ca • info@majesticcity.ca

IBC தமிழ் பத்திரிகை வாசகப் பெருமக்களுக்கு வணக்கம். பகுதி 03 தாண்டி செல்லும் நெடுந்தொடர் கட்டுரை உங்களுக்கு புதிய அனுபவங்களை சிந்திக்க வைக்கும் தொடரே. சில குழந்தைகளுக்கு நல்ல அழகான, அறிவான பெற்றோர் கிடைப்பார்கள் சிலருக்கு நல்ல ஆசான்கள் கிடைப்பார்கள். சிலருக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள், ஆனால் உங்கள் குடும்பத்துடன் இணைத்து அவர்கள் குடும்பத்துடன் சமமாக இணைத்து பேசாதீர். காரணம் இன்றைய புலம்பெயர் சூழலில் வசதி என்பது அவர்களின் முயற்சி முன்னேற்றங்களில் தங்கியுள்ளது. அவர்களின் குடும்ப வசதிகருதி அவர்கள் சற்று வித்தியாசமாக வாழ முற்படலாம்.





எல்லோருக்கும் எல்லாம் நல்லதாக அமையமாட்டாது. ஆனாலும் நல்ல கணவன் அல்லது மனைவி அமைய வேண்டும் என்பதே பலரின் கனவுகள். இருப்பினும் ஒரு சிலருக்கு தமக்கு ஏற்றால்போல் அமையவில்லையே என்று தமக்குள்ளே மனதினை குழப்பிக்கொள்வார்கள். இதற்கு முக்கிய காரணம் உங்கள் கணவனையோ இல்லை மனைவியையோ நீங்கள் யாருடனும் ஒப்பிட்டு பார்க்காதீர்கள். இது மிக மிக உங்கள் மனநிலையை மட்டுமன்றி தேவையற்ற விவாகரத்து வரை செல்லும். உங்கள் மனைவியிடமோ இல்லை கணவனிடமோ உள்ள நல்ல குணங்களை நீங்கள் கவனித்துக்கொள்ளுங்கள். ஏதோ ஒரு சந்தர்ப்பத்துக்காக உங்கள் இருவரில் ஒருவர் சிறு பிழை விட வாய்ப்புள்ளது.

உலகத்தில் பிறந்த எல்லோரும் நலவர்களும் அல்ல அதே நேரம் கெட்டவர்களும் இல்லை. சந்தர்ப்ப சூழலினால் பிழை விடுவது இயல்பு. பிழை என்று நான் முக்கியமாக கூறுவது நீங்கள் சொன்ன ஏதோ ஒரு வேலையை அவர் செய்யாமல் இருக்கலாம். அவர்கள் சார்ந்த குடும்ப சூழலினால் சிறு பொய் சொல்லியிருக்கலாம். பிள்ளையின் தவறை தாமே சமாளித்து தவறை நிவர்த்தி செய்திருக்கலாம். இப்படியான பிழைகளை பெரிதாக்கி நீங்கள் திரும்ப திரும்ப சுட்டிக்காட்டும் போது ஒருவருக்கு ஒருவர் இடையேயான அன்பின் தன்மை மாறி விரக்தி நிலை ஏற்படலாம். நீங்கள் குடும்பமாக வாழுகின்ற சூழலில் பக்கத்து வீட்டாரோ இல்லை உங்கள் நண்பர் குடும்பங்களையோ ஆனால் அவர்களைப் போல நாம் இல்லையே என்று நீங்கள் நினைப்பது முட்டாள் தனம்.

அவர்களின் வேலை, குழந்தைகளின் நிலை, வீடு, கார் நிலை என்பவற்றை நினைத்து நீங்களும் வர முயற்சி செய்யுங்கள். ஆனால் அப்படியான தன்மை உங்கள் கணவரிடமோ இல்லை மனைவியிடமோ இல்லை எனின் மற்றவர் குடும்பங்களை உதாரணம் காட்டி பேசுவதை நிறுத்துங்கள். காரணம் திரும்ப திரும்ப பேசுவதனால் மனநிலையில் ஒருவகையான விரக்தி நிலை ஏற்பட்டு இருவர்களுக்கும் இடையில் மனம்விட்டு பேசும் நிலை வர வாய்ப்பிருக்காது.பணம் எனும் பொருள் வரும், போகும் ஆனால் வாழ்க்கை என்பது மகிழ்வாக வாழ்வதற்கே. பணத்தை சம்பாதிக்க வேண்டும் நான் அவரைப்போல அடுக்குமாடி வேண்ட உழைக்க வேண்டும். என்று நீங்கள் உங்கள் வாழ்நாளை இழக்காதீர். மகிழ்வாக மனைவியோடு இல்லை கணவனோடு, பிள்ளைகளோடு நேரத்தை குறைந்தளவு செலவழித்து மகிழ்வாக வாழுங்கள். விவாகரத்து என்ற பொல்லாத அரக்கன் எமைவிட்டு போய்விடுவான். மனித வாழ்வே மகிழ்வாக வாழ்வதற்கே.....

சாவகச்சேரி விழா 2019 பிரான்ஸ்



கடந்த 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை சித்திரைப்புத்தாண்டு தினத்தில் பிரான்ஸ் பழையமாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து "தாமோதரகானம்" எனும் மாபெரும் குரல்தேடும் போட்டி நிகழ்வாகவும். "தென்னகத்தாரகை" விருது வழங்கும் நிகழ்வாகவும் நடாத்தியிருந்தார்கள். காலை 11.30 அளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது. நிகழ்வின் பிரதமஅதிதியாக பாடசாலையின் பழைய மாணவியும் கனடா பழையமாணவர் சங்க கிளை உறுப்பினரும் ஆகிய திருமதி. ஜெயமணி இந்திரகுமார் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பிரித்தானிய கிளை தலைவர் திரு.க.பாலகிருஸ்ணன் அவர்களும், கௌரவவிருந்தினர்களாக சீனநாட்டு சீனத்தமிழன் வில்லியம் சியாம் அவர்களும் ,சுவிஸ் கிளை தலைவர் திரு. கோவிந்தபிள்ளை ஸ்ரீகாந்தா அவர்களும் கலந்து கொண்டார்கள்

மங்கலவிளக்கேற்றல், அகவணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை தொடர்ந்து கீழ் பிரிவிற்கான போட்டிகள் ஆரம்பமானது. குழந்தைகளின் தமிழ் உச்சரிப்பும், பாடலின் இனிமையும் அழகே.தொடர்ந்து தலைமையுரையினை பிரான்ஸ் கிளை தலைவர் ஆசிரியர் த.பரமானந்தம் அவர்கள் உரைநிகழ்த்தினார். தொடர்ந்து சகாதேவி நடனப்பள்ளி மாணவிகளின் நடனம், Bolly exprees நடனக்குழுக்களின் நடனம், சீனத்தமிழன் கரகாட்டம் என நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தன. தொடர்ந்து மத்தியபிரிவு, மேற்ப்பிரிவு போட்டிகளை தொடர்ந்து. 2018 ம் ஆண்டு நடைபெற்ற தாமோதரகான நிகழ்வு இறுவெட்டு வெளியீடு செய்யப்பட்டது. தொடர்ந்து யேர்மனியில் இருந்து வருகை தந்த கி.த.கவிமாமணி அவர்களின் சிறப்புரை, பிரதம அதிதி உரை, விருந்தினர்கள் உரையென நிகழ்வுகள் இடைவெளியின்றி தொடர்ந்தது.

நிகழ்விற்கு பிரான்ஸ் வாழ் கலைஞர்கள், எழுத்தாளர்கள், என பலரும் கலந்து கொண்டமை சிறப்பே. போட்டியின் நடுவர்களாக திருமதி. ஜெயதர்சினி சிவசங்கரன், இசைப்பிரியன், திருமதி. மீரா நித்தியானந்தன் ஆகியோர் சிறப்பாக நடுநிலை வகித்தார்கள். மூன்று நிலை போட்டியின் சிறந்த பாடகராக செல்வி. உதயகுலசிங்கம் உவானா "தென்னகத்தாராகை" விருதினை பெற்றுக்கொண்டார் .நிகழ்வின் தொகுப்பினை ஆசிரியர் த.பரமேஸ்வரன் அவர்கள் தொகுத்து வழங்க விளம்பர தொகுப்பினை யேர்மனி அறிவிப்பாளர் அவைத்தென்றல் வல்லிபுரம் திலகேஸ்வரன் தொகுத்து வழங்கியிருந்தார்.

நூல்தேட்டம்

கவிஞர் பா.சத்தியசீலன்:

நாம் மறந்துவிடக்கூடாத ஒரு குழந்தைக் கவிஞன்

பகுதி - 2

முதல் நூலிலேயே நன்றியுரையில் இவர் தன் வளர்ச்சிக்குப் பாத்திரமானவர்களைக் குறிப்பிட்டு கவிவரிகளால் நன்றி நவில்கிறார். நாவற்குழியூர் நடராசன், மஹாகவி உருத்திரமூர்த்தி, கவிஞர் நீர்வை முருகையன் ஆகியோரின் நினைவுகளைப் பின்வரும் வரிகளில் பதிவுசெய்கின்றார்.

கீழ்மாகாணத்து விழாவொன்றிற் கண்டெடுத்து இலங்கை
வானொலியில் இந்நாள் வரையெனது
நாவின் தமிழ்கள் ஒலிக்க
பாவின் வகைகள் பலிக்க
காலானவரே
பாவரங்கம் ஆளும் பதி, அப் பெருங்கவிஞன்
"நாவற் குழியூர் நடராசன்" அன்னார்க்கு
நன்றிக் கடனுடையேன் நான்.

அந்நாளில் என்பா பலவற்றின் தந்தை இவர்.
இந்நாளில் நான்சுவைக்கும் ஒற்றைப் பெருங்கவிஞன்.
இன்றியலும் ஈழத்து எழுச்சிக் கவிதைக்கு
முன்னோடி யான முனைவன்; வலுப்பாய்ந்த
மின்போன்ற வீச்சு, மெழுகு மொழியாளன்
என்போல் இளைஞர்க்கு எதுகையாய் வாய்த்துள்ள
அன்னான் "மகாகவி" என் ஆக்கத்தின் அச்சுநிலை.

பேனாப் பிடித்த பெரிய "முருகையன்"
தானாக வந்தொருநாட் தண்ணந் தமிழ்தந்தான்!
ஊனா முதலான ஓசை ஒடிவுகளை
நானகற்ற யாப்பு மரபும் புகட்டியவன்!
பா நாடகத்தைப் படிப்பித்த ஆசிரியன்!
மோனை எனக்கு முருகு.

கவிஞர் பா.சத்தியசீலனின் மற்றுமொரு நூல் பத்தாண்டுகளின் பின்னர் "மழலைத் தமிழ் அமிழ்தம்" என்ற தலைப்பில் ஜனவரி 1978இல் யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா புத்தகசாலையினால் 20 பக்கங்களில் சித்திரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஓவியர் ரமணியின் ஓவியங்கள் பாடல்களுக்கு அணிசேர்த்துள்ளன. யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் இது வெளியிடப்பட்டது. கவிஞர் பா.சத்தியசீலனின் நான்காவது சிறுவர் பாடல் தொகுப்பு இது என்ற குறிப்பு அந்நூலில் காணப்பட்ட போதிலும், அதற்கு முன்னர் வெளிவந்த மூன்று சிறுவர் பாடல் தொகுப்புகள் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

டிசம்பர் 1979இல் 12 பக்கங்களில் இவரது மற்றொரு சிறுவர் கதைப் பாடலான "சந்தனப் பொட்டுச் சுந்தரம்பிள்ளை" வெளிவந்தது. இது சிறுவர்களுக்கானதொரு வேடிக்கைக் கதைப்பாடல். ரமணி என அழைக்கப்படும் ஓவியர் வை.சிவசுப்பிரமணியத்தினதும், க.இராசரெத்தினம் அவர்களதும் கைவண்ணத்தில் அமைந்த சித்திரங்களுடன் இந்நூல் வெளிவந்தது. நகைச்சுவை உணர்வுமிக்கதும் குழந்தைகளின் சிந்தனை வெளிப்பாட்டுக்கு ஊக்கசக்தியாகவும் களமாகவும் அமையத்தக்க பாடல்வரிகளை எளிய நடையில் இந்நூலில் காணமுடிகின்றது.

மார்ச் 1985இல் "தலை காத்த தலைமயிர்" என்ற தலைப்பில் மற்றொரு நூலை 8 பக்கங்களில் வெளியிட்டிருந்தார். இது சிறுவர்க்கானதொரு கதைப் பாடல். தனது ஓவியத் திறமையால் உயிர்தப்பிய ஒரு எலிக்குஞ்சின் கதையிது. சந்தம் மிகு சிறந்த சிறுவர் பாடல்களை யாத்த சத்தியசீலனின் சிறப்பியல்புகளில் ஒன்று, சிறுவர்களின் வாசிப்பினை சுவைமிகுந்ததாக மாற்றுவதற்குத் தன் வாழ்நாளில் பெரும்பங்கைச் செலவிட்டவர் என்பதாகும். புதிர்ப் பாட்டு, படம் சொல்லும் பாட்டு, குழந்தைகளே எதுகை மோனைகளை உருவாக்க வழியமைக்கும் சிறுவர் பாட்டுப் புதிர்கள் என சத்தியசீலனின் சிந்தையில் மலர்ந்த சிறுவர் இலக்கியங்களில் ஒருசிலவே நூலுருக் கண்டுள்ளமை வேதனையானது.

1985இல் இவரது மற்றுமொரு சிறுவர் பாடல் 'கப்பல்" என்ற தலைப்பில் நூலுருவாயிற்று. சிறுவர்க்கான புதிர்ப்பாட்டுக்கள், அவற்றுக்கான விடைகளுடன் 32 பக்கங்களில் இந்நூல் வெளியானது. புதிர்களுக்கான விடைகளும் கவிதைவரிகளிலேயே அமைந்திருந்தமை சிறப்பு. கவிதையினைப் பாடி இரசிக்கும் அதேவேளை சிறுவர்கள் தம் சிந்தனை வளத்தைப் பெருக்கும் விடுகதைகளுக்கு விடைநாடும் ஆர்வத்தினையும் அவரது பாடல்கள் ஏற்படுத்தியிருந்தன.

1989இல் இவர் மூன்று நூல்களை வெளியிட்டிருந்தார். "பன்றியாரை வென்றுவிட்ட பாட்டியம்மா" 32 பக்கங்களில் வண்ணப்படங்களுடன் வெளியாயிற்று. சிறுவர்களுக்கேற்ற எளிய நடையில், அந்த அதிசயமான பாத அணிகள், பன்றியாரை வென்றுவிட்ட பாட்டியம்மா, உயிர் காத்த ஓவியம், குழப்படியும் குளப்படியும் ஆகிய சிறுவர் கதைகளை கவிதையுருவில் ஆக்கியிருந்தார். இவற்றில் உயிர் காத்த ஓவியம் என்ற பாடல் ஒரு பாட்டுக்கூத்து உருவில் ஆக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.



இவ்வாண்டில்(1989) வெளிவந்த இவரது இரண்டாவது சிறுவர் இலக்கியம் "பாட்டு விளையாட்டு" என்பதாகும். தனித்துவமானதோர் எழுத்துப்பாணியின் மூலமும், நேர்த்தியான நூலாக்கங்களின் மூலமும் ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தில் தனியிடம் பெற்ற பாவலவன், 24 பக்கங்களில் சித்திரங்களுடன் கூடியதாக இந்நூலை ஆக்கியிருந்தார். 1988 சித்திரை மாதத்தில் ரூபவாகினியில் ஒளிபரப்பாகிய 'பாப்பா புதிர்ப்பா" நிகழ்ச்சியிலே சிறுவர்களோடு சேர்ந்து தாம் வழங்கிய பாடல்கள் பலவற்றைச் சேர்த்து இந்நூலை அவர் வெளியிட்டிருந்தார். நகைச்சுவையும் புதிர்ச் சுவையும் பொருந்த அழகிய சந்தங்களுடன் அமைந்துள்ள பாடல்கள் இவை. ஆமை, யானை யார், வண்ணத்துப்பூச்சி, நத்தையார், பலூன், பாட்டை விடையுடன் இணையுங்கள், நிரையாய் வருகிற பூ, பூட்டாத பூட்டு, பாவைப்பிள்ளை, நடைவண்டி, ஆமையார், சீட்டாட்டம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டிருந்தன.

1989இல் மூன்றாவதாக இவரது முக்கியமான மற்றொரு நூலும் வெளிவந்தது. "அல்லைப்பிட்டிப்பதி அருளப்பர் அம்மானை" என்ற நூலே அதுவாகும். 82 பக்கங்களில் வெளிவந்த இந்நூல் அண்ணல் யேசுவிற்கு அருள்முழுக்குத் தந்தவரான அருளப்பரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட அம்மானைவடிவமாகும். அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர் என்ற வகையில் கவிஞர் பா.சத்தியசீலன் ஊர்ப்பற்றுடன் இயற்றிய இவ்வம்மானை, இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டதுடன், பத்திரிகைகளிலும் தொடராக பிரசுரிக்கப்பட்டுப் பிரபல்யமானது. அல்லைப்பிட்டி அருளப்பர் அம்மானை கத்தோலிக்க சமூகத்தினரதும், நற்புலமை வாய்ந்தோரதும் பாராட்டையும் புகழினையும் பெற்று குழந்தை இலக்கிய கர்த்தா என்பதற்கும் அப்பால் நல்லதொரு "கிறிஸ்தவ கவிஞராகவும்" இவரை அடையாளம் காட்டியது.

இதனைத்தொடர்ந்து சத்தியசீலன் கிறிஸ்தவ இலக்கியங்களைப் படைப்பதில் தன் ஆர்வத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார். அடுத்த ஆண்டு 1990இல் "உலகினார்க்கு ஓர் உடன்பிறப்பு: சார்ள்ஸ் டிஃபுக்கோ" என்ற இவரது மற்றொரு கிறிஸ்தவ இலக்கியம் 32 பக்கங்களில் வெளிவந்தது. இதனை யாழ்ப்பாணம் PaxChristi, அமைதி அருள் மையம் அமைப்பின் வண.ஜே.இ.ஜெயசீலன் அவர்கள் வெளியிட்டிருந்தார். சார்ள்ஸ் டிஃபுக்கோ அடிகளின் (Brother Charles) வாழ்க்கை வரலாறு பாவடிவில் எளிய முறையில் இதில் கூறப்பட்டிருந்தது.

தொடரும்...

யேர்மனியில் தமிழீழ நாட்டுப் பற்றாளர் தின நிகழ்வுகள்!




தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இலட்சியப் பயணத்திலே போரின் பக்கத் துணையாளர்களாய் வாழ்ந்து, பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு சம்பவங்களில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர்களை ஒருசேர நினைவிருத்தி வணக்கம் செலுத்தும், அன்னை பூபதி அவர்களின் 31ம் ஆண்டு நினைவு எழுச்சி நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக யேர்மனியின் வூப்பெற்றால், பிராங்பேர்ட் ஆகிய இரு பெரு நகரங்களிலும் நடைபெற்றன.




"விடுதலை மாலை" எழுச்சி நிகழ்வு

Berlin Germany




தமிழீழ ஆன்மாவை மனதில் நிறுத்தி தமிழீழ தேசத்துக்காக தமது இன்னுயிர்களை விதையாக்கி சென்ற அனைத்து உறவுகளின் நினைவாக (27.04.19) சனிக்கிழமை அன்று பேர்லின் மாநகரத்தில் விடுதலை மாலை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தமிழின அழிப்புக்கு பரிகார நீதியை நிலைநாட்டவும் ,தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கவும் 10 வது ஆண்டு தமிழின அழிப்பு நாள் மே 18 Dusseldorf மாநகரில் நடைபெறும் பேரணிக்கு வலுச்சேர்க்கும் முகமாக பேர்லின் வாழ் மக்களை ஒருங்கிணைக்கும் முகமாக தகவல்கள் அறிவிக்கப்பட்டன.




யேர்மனியில் பல்லின மக்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினம்




பேர்லினில் தமிழ் மக்கள் கூட்டிணைந்து சுடர் ஏற்றி மலர் தூவி வணங்கினர்

சிறிலங்காவிலும், தமிழீழம், மட்டக்களப்பிலும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்கள் மீதும் உல்லாச விடுதிகள் மற்றும் குடியிருப்புக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் பலியான மக்களின் நினைவாகவும், அரசபயங்கரவாதத்தால் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் நினைவாகவும் இன்றைய தினம் யேர்மனி பேர்லினில் தமிழ் மக்கள் கூட்டிணைந்து சுடர் ஏற்றி மலர் தூவி வணங்கினர்









IBC தமிழ்
10 வது ஆண்டு
தமிழின அழிப்பு
நாள்


MAY
18
WORLD GENOCIDE DAY

VIBRANT HOSPITALITY GROUP

OVER 25 YEARS
IN THE HOSPITALITY
INDUSTRY

DEVELOPMENT
MANAGEMENT

OUR EXPERTISE

CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

SHANKAR NALLATHAMBY, CHA
DIRECTOR
CELL: 416 270 4343
EMAIL: SHANKAR@VHGCANADA.COM

VIBRANTHOSPITALITYGROUP.COM

TOLL FREE: 1 888 674 7770 | LOCAL: 905 769 1509

SkyRoute
TRAVEL SERVICES INC.

Rock Bottom Fare to Worldwide Destinations

www.skyroutetravel.com

விமான பயண சீட்டு | வெளிநாடு - உள்நாடு சுற்றுலா ஏற்பாடுகள்

SkyRoute
TRAVEL SERVICES INC.

1200 Markham Rd, Unit #106
Toronto ON M1H 3C3

(+1) 416-439-4000

Offices In

T&C Apply.

IATA


FOR ALL YOUR
BUILDING
MATERIAL
NEEDS
PLUMBING
ADHESIVE
ELECTRICAL
PAINT & STAINS
DISCOUNT
UPTO
40%*
OFF
DEPARTMENTS WE HAVE:
PLUMBING
ELECTRICAL
MEASURING TOOLS
HAND TOOLS
ADHESIVE
PROTECTIVE GEARS
SECURITY
HOUSEHOLD
BUILDER TOOLS
PAINT AND STAINS
AUTOMOTIVE TOOLS
FASTENERS
FREE*
SHIPPING
SERVICES:
TAKE OFF BLUEPRINT
BOOM TRUCK DELIVERY
PRICE QUOTE BY PROJECTS
DELIVERY IN-SIDE THE HOUSE
WE HAVE WHOLESALE PROGRAM
RESIDENTIAL, COMMERCIAL AND INDUSTRIAL CUSTOM MATERIAL ORDERS.
CTS BUILDING SUPPLIES LTD
733 PROGRESS AVENUE,
SCARBOROUGH, ONTARIO, M1H 2W7
416-840-4538
www.ctsbuildingsupplies.com
*Some Conditions May Apply


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
THE BIGGER THE DREAM,
THE MORE IMPORTANT YOUR TEAM
Real Estate • Corporate Law • Litigation
416-321-1100
www.navawilson.law

SOUTHERN AROMA

WHAT WE HAVE



OUR HOURS:

Monday-Thursday: 11AM - 3PM • 5PM - 10:30PM | Friday - Saturday: 11AM - 3PM • 5PM - 11PM | Sunday: 11AM - 3PM | 5PM - 10:30PM

#14 - 7200 MARKHAM RD. MARKHAM, ON L3S 3R7

(905) 554-2255

contact@southernaroma.ca



EXPERIENCE THE WARMTH OF ELEGANTLY DESIGNED LUXURIOUS LIVING SPACES IN COLOMBO

from

Sri Lanka's Largest Property Developer

Luxurious Living • Investment Property • Holiday Home

Blue Ocean GROUP OF COMPANIES™

10+ PROJECT LOCATIONS | 35+ CONDO PROJECTS | 1250+ LUXURY UNITS

18 COMPLETED CONDO PROJECTS COMPRISING **431 CONDO UNITS**

WHY CHOOSE BLUE OCEAN?

Blue Ocean luxury condominiums are located across Sri Lanka's most vibrant and premier destinations that provide breathtaking views of the Indian Ocean and Colombo City. Our apartments are designed by renowned architects to conform to international standards, using premium-quality building materials and best practice construction techniques to deliver outstanding living spaces. A Blue Ocean condominium is an exceptional capital investment and they are specifically planned in accordance to neighboring areas.

- **Kollupitiya**
- **Bambalapitiya**
- **Colombo 07**
- **Havelock Town**
- **Nuwara Eliya**
- **Dehiwala**
- **Mount Lavinia**
- **Wellawatte**

Easy Interest Free Installment Scheme or **BANK LOAN** can be obtained through Tripartite Agreement.
(*Conditions Apply)

NSB National Savings Bank

DFCC BANK Keep Growing

NDB bank Our Commitment. Your Success.

Nations Trust Bank




Platinum Office : No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka | **Hotline : +94 777 546 546**

Branch Office - United Kingdom : Dartford Business Park, Victoria Rd, Dartford, Kent, DA1 5FS, UK

Email : info@blueocean.lk / **mktgroup@blueocean.lk** Branch Offices : **Dubai, Australia & Canada**

Like Us on **facebook**

UK +44 79 6096 9684 SL +94 777 121 924 | +94 772 348 989 | +94 777 755 657 | +94 774 872 611


THE ELECTRONICS LIFE CYCLE OPTIMIZED
CONSULTI
Services we do:
• Part Sourcing & Product Assembly
• Forward Logistics & Distribution
• Reverse Logistics & Repair
• Engineering Consulting
• High Volume Automated Test Solutions
• Analytics & Reporting
CSI
THE CABLESHOPPE, INC.
1410 Birchmount Road,
Toronto, Ontario M1P 2E3, Canada
sales@thecableshoppe.com
+1 (416) 293 – 3634


JC's
BANQUET HALL
Where Your Traditions Matter
& CONVENTION CENTRE
BOOK YOUR
Special event with us
Birthdays, bachelor/bachelorette, weddings, engagements, reception, retirement, sari ceremony, corporate events, holiday parties & more.
New Venue Now Open in Oshawa
For events in our outdoor garden.
Event planning and catering options available up to 2000 people.
1686 Ellesmere Rd, Toronto, ON M1H 2V5
416-290-6186 | jc@jcsgroup.ca | www.jcsbanquet.ca


JC'S GRILL HOUSE
Fresh Dining
neighbourhood family run restaurant
Dine In, Takeout & Delivery Available
COMING SOON
Jaffna, Sri Lanka
www.jcsgrillhouse.ca


AUDIO VISUAL
ENGINEERING
WHAT WE DO:
SOUND · STAGE · VIDEO · LIGHTING
118 Production Drive, Toronto, Ontario M1H 2X8
+1 647-298-5523


SIGNAGE
& PRODUCT
DESIGNS
Our Services
• Direct Flatboard Printing
• Large Format Printing
• Plastic Works
• Digital Printing
SAN PRO SIGNS
sign + print
705 Progress Avenue Unit 14
Toronto, Ontario M1H 2X1
416-288-9525
info@sanpro.ca
www.sanpro.ca


Aalayaa
SHOP THE LATEST TRENDS
SAREES • AUTHENTIC KANCHIPURAMS
SILK COTTON • SHALWARS • LEHENGAS
BOLLYWOOD REPLICAS • MEN
FREE SHIPPING ON ALL ORDERS
GET FREE SHIPPING ON ALL ORDERS ABOVE $250.
SATISFACTION GUARANTEED
CUSTOMER SATISFACTION IS OUR FIRST PRIORITY.
NO CUSTOMS OR DUTY FEES!
WE'LL REFUND THE FEES ON ALL ORDERS ABOVE $500.
WE ARE OPEN 24/7 ONLINE
Shop @ www.aalayaaonline.com
FREE WORLDWIDE SHIPPING ON ORDERS ABOVE USD $250
100 Middlesex Blvd, Plainsboro, NJ 08536, USA • Email: aalayaaonline@gmail.com


NEW SPICELAND SUPER MARKET
நியூ ஸ்பைஸ்லாண்ட் சுப்பர் மார்க்கெட்
NEW SPICELAND
SUPER MARKET
DAILY FRESH VEGETABLE FRUITS, FRESH FISH & MEAT
Markham and Sheppard - 5790 Sheppard Ave E, Scarborough.
416-292-9769
Markham and Steeles - 6065 Steeles Ave E, Toronto.
416-335-3035
Ajax: 1801 Harwood Ave N, Ajax.
905-426-1114


BEANS
SAUCES
OIL
NEW OCEAN
SUPER MARKET
MULTICULTURAL STORE
நீயு ஓஷன்
சூப்பர் மார்க்கட்
சுத்தம், தரம், மலிவு
CUSTOMERS TO:
· Offer top quality products with the lowest price
· Create a safe shopping environment in our store
· Provide the best quality customer service
· Show our appreciations by giving out gifts, prizes and sponsorships back to our community
· Continue innovation and improvement to give our shoppers a pleasant experience at our store
NOW AVAILABLE!
Daisy Mart
WESTERN UNION
MONEY TRANSFER
OLG
TEL: 416-292-0122
5635 Finch Ave East Toronto ON M1B 5K9
www.newoceansupermarket.com
/newoceansupermarket
Mon to Fri: 9am to 10pm
Sat and Sun: 8am to 10pm
Mcnicoll
Tapscott
Markham
Finch

Shinol inc.

GROUP OF COMPANIES

www.shinol.ca



Corporate Offices
Industrial Buildings
Commerical Buildings
Retail Buildings
Medical Buildings
Institutional Buildings

Shinol
CLEANING INC.

2050 Ellesmere Rd. Unit 5
Scarborough ON M1H 3A9 416-286-6375
www.shinolcleaning.com



General Contracting
Commercial Renovations
Commercial & Industrial Painting
Handy-Man Services

Shinol
MAINTENANCE INC.

2050 Ellesmere Rd. Unit 5
Scarborough ON M1H 3A9 416-286-6375
www.shinolmaintenance.com

General Labour | Material Handlers
Shipping & Receiving | Maintenance Staff
Machine Operators | Packers



Shinol
WORKFORCE INC.

2050 Ellesmere Rd. Unit 3
Scarborough ON M1H 3A9 416-286-5553
www.shinolworkforce.com

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION

What if your Lawyer is also an Accountant?



- Tax Law
- HST - New Housing Rebate and Residential Rental Property Rebate Claims
- Appeals to CRA / Tax Court of Canada
- CRA Questionnaires / CRA Audits
- Tax planning for businesses and individuals
- Business law – Incorporations / Purchase, Sale & Lease
- Employment Law – Termination / Dismissal Claims
- Estate Planning and Last Wills

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca



- Real Estate – Residential / Commercial - Purchase, Sale & Refinancing
- Family law – Divorce / Separation / Custody & Support
- Immigration – Sponsorship / Super Visa / Work Permits
- Power of Attorney, Affidavits, Statutory declaration
- Notarization & Commissioning

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

DROP IN FOR A FREE 30 MINUTE INITIAL CONSULTATION
Evenings & weekends consultation by appointments

Devadas Law Professional Corporation
LAW with ACCOUNTability

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


DYNEVOR EXPRESS
EXPEDITED SERVICES
1-866-DYNEVOR
Service is what we Sell...
MON - FRI 8:30 AM - 5:00 PM
866-DYNEVOR
416-994-9568
info@dynevorexpress.com
24 Bethridge Road,
Etobicoke, ON M9W 1N1
Transportation Services
• Trucking Services
• Logistics Services
• Facility Management


A PROFESSIONAL WORKING ENVIRONMENT
OUR WORKSPACE SERVICES INCLUDE
• FREE SUPER FAST INTERNET
• CALL ANSWERING
• AMPLE FREE PARKING
• COFFEE MACHINE
• LOUNGE AREA
• PRINTING AND SCANNING
• LOCKERS
• BOARD ROOMS TIME
Netwyn.Place
10 Thornmount Drive,
Toronto, Ontario, M1B 3J4, CA
+1 416-906-1414


JRB
universal inc
• Home Mortgage
• 2nd Mortgage
• Re-Financing
• Commercial Mortgage
• Business Loan
• Line of Credit
All Approved!
R.R.RAJKUMAR
B.Com (Hons) M.B.A
647-289-6164



இனிமையான ஒலிநாதம் தரும் ராஜவாத்தியம் தண்ணுமை ஆகிய மிருதங்கம். பலா, தென்னை, கருங்காலி போன்றமரக்குற்றிகளில்வடித்தெடுக்கப்படும் இவ்வாத்தியம் கடந்த 300 ஆண்டுகளுக்கு முன்னர் மராட்டியில் இருந்து தஞ்சை வந்து தமிழ்நாட்டுக்குள் சேர்ந்துகொண்டது.

இன்று தமிழ் இசையில், இசைக்கச்சேரிகளில், ஆடல்கலை அரங்கேற்றங்களில் பிரதான இசைக்கருவியாக இராஜவலம் வருகிறது.

தவில், பறை, உடுக்கு, கெஞ்சிரா எனப்பல தோல்கருவிகள் இருக்கின்ற போதிலும் அவற்றிலிருந்து தனித்துவமாக விளங்குவது மிருதங்கம்.

நாலரைவயதில் மிருதங்கநாதத்தால் கவரப்பட்டு 13 வயதில் கடந்த 20.04.19 அன்று அரங்கேற்றம் நடத்தினார் செல்வன். ரொசான் மோகன குமாரன்.

இவருடைய மிருதங்கக் குருகந்தையா ஆனந்த நடேசன் அவர்கள்.

யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்று விளங்கிய மிருதங்க இசைப்பேராசான் கே.பி.சின்னராசா அவர்களின் மாணவர்.

செல்வன் ரொசான் மோகனகுமார் அவர்களின் ஆர்வத்துக்கும் ஆசைக்கும் வழிசமைத்து அவருக்குச்சரியான முறையில் வழிகாட்டி மிகச்சிறந்த குருவிடம் ஒப்படைத்து தங்கள் புதல்வரை அரங்கிலே மிருதங்கம் மீட்டும் கலைஞராகக் காணும் காட்சியைப் பெற்ற மோகன குமாரன் சோதிகலா தம்பதி பாராட்டுக்குரியவர்கள்.

பூச்சிறினிவாச ஐயங்கார் இயற்றிய வர்ணம் எழிலும், ஈர்ப்பும் கொண்டமைந்த களிப்பூட்டும் கானடா இராகத்திலும் கண்ட ஆதிதாளத்திலும் அமையப்பெற்று ஆரம்பித்த மிருதங்க அரங்கேற்றம் ஒரு இசைக்சேரி போலவே நகர்ந்து சென்றது.

காவதிஇராகத்தில், ஆதிதாளத்தில் கல்யாணராமனின் தில்லானா பாடிய போது தான் தெரிந்தது அரங்கேற்றம் நிறைவு பெறுகிறதென்பது.

தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த கலைமாமணி உன்னிக்கிருஸ்ணன் அவர்கள் மிகவும் சிறப்பாகப்பாடி ரொசானிடம் இருக்கும் திறமையை அரங்கில் வெளிப்படுத்தினார்.

ரொசான் சிரமப்படாமல் மிகவும் இலாவகமா கமிருதங்கம் இசைத்தார்.

குரு ஆனந்தநடேசன் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகளையே தரிசிக்க முடிந்தது.

மிகவும் சிறப்பான பயிற்சியை தனதுமாணவனுக்கு வழங்கியிருக்கிறார்.

பாடகர் உன்னிக்கிருஸ்ணன் அவர்கள் ரொசானின் இசைஞானத்தையும் மிருதங்கவாசிப்பினையும் மனம் திறந்து பாராட்டினார்.

யாவற்றுக்கும் மேலாக “எனது அடுத்த லண்டன் இசைக்கச் சேரிக்கு நீதான் மிருதங்கம் வாசிக்க வேண்டும்” என்றார்.

ரொசான் மோகன குமாரன் தனதுஅரங்கேற்றத்தின் போதே மாபெரும் கலைஞரிடமிருந்து உயர்வான விருதைப் பெற்றுள்ளார்.

யாருமே லண்டனில் மேற்கொள்ளாத பயிற்சியை ரொசான் மேற்கொண்டு வருகிறார். தினமும் அதிகாலையில் சாதகம் செய்து வருகின்றார்.



இதனை அரங்கில் அவரதுமிருதங்க இசைமீட்டலில் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

தனது குருகந்தையா ஆனந்த நடேசன் அவர்களுக்குப் பெரும்புகழ் சேர்த்தார்.

தனது பூர்வீகமண்ணாகிய புங்குடுதீவுக்கும் பெற்றோருக்கும் புகழைத் தேடிக் கொடுத்துள்ளார்.

செல்வன் ரொசான் மோகன குமாரன்அவர்களின் இசைப்பணி மென் மேலும் சிறக்க நல்வாழ்த்துகள்.

அரங்கேற்றத்தை மிக அழகாக எஸ். கே.ராஜென் தொகுத்துவழங்கினார்.

- கலையமுதன்



பரிஸ் நகரிலிருந்து சுமார் 30km தொலைவில் அமைந்துள்ள காட்டுமாதா அல்லது வயல் மாதா என்று எம்மவர்களால் அழைக்கப்படும் Chemin Notre-Dame de France (95560 Baillet en France) தேவாலயம் மத பேதமற்று அனைவரும் சென்று தரிசிக்கும் புனித தலமாகும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை விவசாய நிலங்கள் சூழ்ந்திருக்க, நடுவே இத் தேவாலயம் அமைந்திருக்கும் அழகே மனதுக்கு அமைதியும் இதமும் தரக்கூடியது.

ஆனால் தேவாலயம் செல்லும் தமிழர்கள், அங்கு விளைந்திருக்கும் அப்பிள் மற்றும் சோளம் என்பவற்றை விவசாயிகளின் காணிகளுக்குள் புகுந்து பிடுங்கி நாசம் செய்து செல்வதால், அப்பகுதியில் விவசாயம் செய்யும் பிரெஞ்சு விவசாயிகள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டதோடு, பலமுறை தேவாலய குருவிடமும் முறைப்பாடு செய்திருந்தனர். திருப்பலிகளின் போது அருட்தந்தைகள் பலமுறை பக்தர்களுக்கு எடுத்துச்சொல்லியும், மாடாடு போலவே மக்கள் நடந்து கொண்டனர். இதனால் மிகவும் நொந்துபோன அப்பகுதி விவசாயிகள் 37 பேர் இணைந்து தமது நலனைப்பேண சங்கம் ஒன்றை அமைத்து பிரெஞ்சு அரசின் பாதுகாப்பு உதவியை நாடியிருந்தனர். இதன்படி பிரெஞ்சு காவல் துறையினர் சோளம் அப்பிள் என்பவற்றை பிடுங்கிய சிலரை கையும் களவுமாக பிடித்து எச்சரித்து சிலர்மீது குற்றப்பதிவும் செய்தனர். கடந்த திருநாளன்று தேவாலய நிர்வாகம் 100ற்கும் மேற்பட்ட தொண்டர்களை பாதைகளெங்கும் காவலுக்கு நிறுத்தியும், நம்மவர்களின் கைவரிசையை கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பிள் தோட்டங்களுக்கு வேலியமைத்து ஓரளவுக்கு பாதுகாத்தாலும், வேலிகளற்ற சோளக்காணிகளை பாதுகாக்க முடியவில்லை.

இதை கட்டுப்படுத்த மிகத் தீவிரமாக யோசனை செய்த 37 விவசாயிகளும் தீர்க்கமாக ஒரு முடிவை எடுத்துள்ளனர். அது யாதெனில்...?

“இனிமேல் யாருமே சோளம் பயிரிடுவதில்லை”.

ஆமாம், காலாகாலமாக சோளம் பயிரிட்டுவந்த விவசாயிகள் யாவரும், தற்போது ஆரம்பித்துள்ள போகத்தில் ஒருவர்கூட சோளம் பயிரிடவில்லை. இனி இந்த நிலங்களில் தமிழர்கள் தின்னாத ஏதேனும் ஒன்றை இவர்கள் பயிரிடக்கூடும்.

கடந்த திருப்பலி ஒப்புக்கொடுத்த பாதர் பிறிற்ரோ அவர்கள் வேதனையுடன் இந்த தகவலை தெரிவித்துவிட்டு, மக்களைப் பார்த்து கேட்டார்,

“வெறும் 50சென்ற்(சதம்) தானே இந்த சோளம், இதை வாங்கி சாப்பிட முடியாதா உங்களால்..?”

- விசுவாசி



முஸ்லிம்கள் நாம் சுயபரிசீலிப்போம்!

பாத்திமா மாஜிதா




வெடிகுண்டுத் தாக்குதல்கள் அரச அதிகாரசக்திகளின் துணையோடுதான் நடைபெற்றுள்ளன என்பதற்கு நிறைய சாட்சியங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. ஆனால், அரசை மட்டுமே நாங்கள் பொறுப்புக்கூறுவது ஒருவிதத் தப்பித்தல்தான். “தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல; அவர்கள் பயங்கரவாதிகள்; அவர்களுக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தமில்லை” என்று சப்பைக்கட்டுவதை நிறுத்துங்கள். இப்போதுகூட நம்மை நாமே சுயபரிசீலனை செய்துகொள்ளாவிட்டால் எங்கேயோ போய் முட்டி மோதிவிடுவோம்.

கிட்டத்தட்ட இரு தசாப்தங்கள் முன்னோக்கிப் பார்க்கிறேன். என்னையும் என்னைச் சுற்றி இருந்தவர்களும் படித்த பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வேலை செய்த இடங்கள் எல்லாவற்றிலும் மனிதம் இருந்தது. படிப்படியாக அரேபியக் கலாச்சாரம் தலைக்கு ஏறத் தொடங்கியது, முஸ்லிம், காபிர் என்ற பிரிவினைப் போக்கை இந்த ஒற்றைக் கலாச்சாரம் ஏற்படுத்திவிட்டது. அன்று நாம் சாப்பிட்ட நாரிசர் சோறு, பராத் ரொட்டி போன்ற எல்லாவற்றையும் ஹராம் என்ற ஒற்றைக் கதவு போட்டு அடைத்துவிட்டார்கள். ஒவ்வொருவரும் அடுத்த சமூகத்திலிருந்து பிரித்துவிடப்பட்டுள்ளோம்.

நான் ஐந்து வயதாக இருக்கிறபோது எனது ஆடையைப் பற்றி கேள்வி எழுப்பாத மதரஸாக்கள் இன்று எனது எட்டு வயது மகள் கருப்பு ஹபாயாவை அணிந்து வந்ததால்தான் ஓத முடியும் என்று சட்டம் வகுக்கின்றன. பாவாடை சட்டை அணிந்து பாடசாலை சென்ற ராத்தா பல்கலைக்கழகம் செல்கிற அவளது மகளுக்குக் கண்கள் இரண்டு மட்டும் தெரியும் விதமாக ஹபாயாவைப் போர்த்தி அனுப்பிவைக்கும் சூழல் இலங்கையிலே நிலவுகிறது.

சகிப்புத்தன்மையற்ற வஹாபியிஸத்தின் கொடூரங்கள் எல்லாவற்றையும் நாங்கள் பார்த்தும் பார்க்காமலும் இருந்த இந்த நோய் முற்றித்தான் பயங்கரவாதமாக இன்று மாறி உயிர்களைப் பலிகொண்டு நிற்கும் நிலை உருவாகியிருக்கிறது. சில குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இக்காட்டான நிலையில் நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இனிமேலும் சவூதியின் கைக்கூலிகளாகச் செயல்படும் இத்தீவிரவாதப் போக்கைக் கண்டுகொள்ளாமல் விடுவது முஸ்லிம் சமூகத்துக்கு மிகவும் ஆபத்தானது. ஆகையால், நம்மைச் சுற்றி என்ன நடந்தது, எப்படியெல்லாம் நாம் மூளைச்சலவை செய்யப்படுகிறோம் என்பதை உணருங்கள்; நம் தலைமுறைகளைக் காப்பாற்ற முனையுங்கள்.






நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க
வீட்டுக்கடன் வாங்க உங்கள் CREDIT SCORE இனி தடை இல்லை. வீட்டை வைத்து இலகுவாக கடன் பெறலாம்
தம்பி பிரபா
416 645 3027
அதி குறைந்த வட்டி வீதத்தில் ஆரம்பித்து OVER MILLION DOLLAR வரை கடன் பெற்றுக்கொள்ளலாம்
காசோலைக்கு பணம் வழங்கும் சேவை BUSINESS CHEQUE CASHING
மாறி வரும் சட்டதிட்டங்களுக்கு அமைய வீட்டுக்கடன் செய்துகொடுப்பது எமது கடமை



"SELLING LIFESTYLE, NOT JUST HOMES"
— www.SoldBySuman.com —
RE/MAX
FOR SALE
FOR SALE
Pickering (Fairport & Strouds)
4+1 5
SUMAN THARMARAJAH
SELLING LIFESTYLE, NOT JUST HOMES
416-725-0527
416-321-0110
www.SoldBySuman.com
sumanthar@gmail.com
Children's Miracle Network Hospitals
RE/MAX
ROYAL PROPERTIES

குழந்தைகள் கேட்டுச் சொல்கிறார்களா? கேட்டதைச் சொல்கிறார்களா?



“குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று” தெளிவான வெள்ளை உள்ளத்துக்குச் சொந்தமானவர்களே குழந்தைகள். மழலை மொழி பேசி புன்னகை புரிகையில் இறைவன் முகம் இப்படித்தான் இருக்குமோ என கற்பனை செய்ய வைத்துவிடும் பேரழகு தோன்றும் அவர்கள் ஒளி முகத்தில் ஒவ்வொரு விடயங்களாக புறச்சூழலில் இருந்து கற்றுக்கொள்ள அவர்கள் காட்டும் ஆழமான ஈடுபாடு, அடுக்கடுக்கான கேள்விகள், குறும்புகள் என அவர்களின் வாழ்வின் தேடல் வீட்டிலிருந்தே தொடங்கும்.

அன்பு என்பது முழு உலகையும் ஆட்சி செய்கிறது இருப்பினும் ஒரு குழந்தை தன் தாயின் அருகாமையை தக்கவைத்து தனது பாதுகாப்பான இருப்பை உறுதிப்படுத்துகிறது. தாயின் வாசனை, இதயத்துடிப்பின் ஓசை, உடலின் கதகதப்பு, குரல், தொடு உணர்வு போன்றவைதான் குழந்தையின் முதல் அனுபவம். அந்த பாதுகாப்பு நிலையில் நிலைத்திருக்க அக்குழந்தை தன்னால் இயன்ற பிரயத்தனங்கள் அத்தனையும் செய்யும். அழுகை, தேடல், அடம்பிடித்தல் போன்ற அத்தனையும் செய்து பார்க்கும். பிறரின் கவனத்தை தன்பால் திருப்ப பல யுக்திகளை கையாளும். இதில் எது சரிவர சாதகமாக அமைகிறதோ அதனையே பின்பற்றத் தொடங்கும். அதிகபட்சம் புறச்சூழலின் பயம் காரணமாகவே தன் பாதுகாப்பு, தேவை கருதியே குழந்தை தாயைத் தேடி அழுகிறது. எப்படியோ யுக்திகளைக் கையாண்டு தம் தேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் இயற்கைக் குணம் இவை பிறப்பிலே வருபவை. இதுவே காலங்காலமாக படைப்பின்படி அமைந்தது.

பெற்றோர் தமது குழந்தைகளில் அதிக கவனம் எடுக்கின்ற போதிலும் அநேக விடயங்களில் தம்மை அறியாமலேயே பல தவறுகளைச் செய்து விடுகின்றனர். குழந்தைகள் வளர்ந்து வருகின்ற பொழுது அவர்களுக்கான சுய ஆற்றலும் மேம்பட்டுக்கொண்டே வருகிறது. ஆனால் பெற்றோரின் அளவுகடந்த பாசம், குழந்தைகள் தம் தேவைகளுக்கான முயற்சியை மேற்கொள்ளும் முன்னரே அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இயற்கையோடு ஒன்றித்து பழகுவதற்கான சுதந்திரம் கொடுக்காது பொத்திப் பொத்தி வளர்த்தல், வளருகின்றபோதும் எப்போதும் அவர்களை குழந்தைப் பருவமாகவே பாவித்தல் போன்ற பல விடயங்களால் குழந்தைகளின் சுய ஆற்றல்கள் முடக்கப்படுகின்றன. பெரும்பாலும் பெற்றோரின் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க காத்திருக்கும் கருவியாகவே மாறி பல குழந்தைகள் தம் கனவுகளை நனவாக்க முடியாமல் தவிக்கின்றனர்

குழந்தைகள் முன்னிலையில் பல



பெற்றோர்கள் வாக்குவாதங்களும், சண்டைகளும் மேற்கொள்வதுண்டு. அந்த தருணங்களில் சிறு குழந்தைகள் புறச்சூழலில் இருந்து கற்றுக் கொள்ளும் முக்கிய பருவத்தில் இருப்பதனால் எல்லாவற்றையும் உட்கிரகித்துக் கொள்கிறார்கள். பெரும்பாலான சிறுவர்களின் மன அழுத்தம், பயம், மூளைச்சோர்வு போன்ற விடயங்களுக்கு பெற்றோர் வீட்டில் சுமூகமற்று இருப்பதே முக்கிய காரணமாய் இருக்கிறது.

குழந்தைகள் மூலம் பிறருக்கு பொய் கூறும் விடயத்தை மிகச் சாதாரணமாகவே இன்று பல பெற்றோர்கள் செய்து வருகின்றனர். குறிப்பாக யாராவது தொலைபேசியில் அழைக்கும்போதுவீட்டில்இருந்துகொண்டே இல்லை என்று கூறும்படி நிர்ப்பந்திப்பது. உறவினர் வீடுகளுக்குச் செல்லும்போதும் இப்படியான பொய் கூறும்படி சொல்லி கூட்டிச் செல்வது, அப்பாவிடம் இப்படி சொல்லு அல்லது அம்மாவிடம் இப்படி சொல்லு என பொய்யாக ஏதேனும் காரணங்களை சொல்லிக் கொடுப்பது இப்படி பல விடயங்களில் பெற்றோர் பொய் சொல்லும்படி கூறும்போது அது பெற்றோருக்கு சாதாரண விடயமாக இருப்பினும் முதல் தடவை குழந்தைகள் பெற்றோரை திகைப்பாகவே பார்ப்பார்கள். அடுத்தடுத்த தடவை சிறிது குழப்பமடைவார்கள். பின்னர் அவர்கள் இதே பழக்கத்தை பின்பற்றத் தொடங்குவார்கள். அவர்கள் பெற்றோர்களிடமிருந்து கற்றுவிட்டு சுயமாக ஒரு பொய்யில் ஆரம்பிக்கும்போது பெற்றோர்கள் கோபமடைந்து குழந்தைகளை கண்டிப்பதோடு மட்டுமன்றி “ உன்னை எப்படியெல்லாம் கனவு கண்டு வளர்த்தேன் இப்படி பொய்காரனாக வந்து பிறந்திருக்கிறாயே எங்கிருந்து வந்தது இந்த குணம் உனக்கு” எனப் புலம்புவர்.

பெற்றவர்களிடம் மட்டுமன்றி தம் சூழலில் உள்ளவர்கள் அனைவரிடமிருந்தும் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. இருப்பினும் குழந்தைகளின் முதல் உலகமே குடும்பம் தான். அவர்களின் வளர்ச்சிக்கான விருட்சத்தின் ஆணிவேர் வீட்டிலிருந்து தான் வளரும். புறச்சூழலில் இருந்து அவர்கள் கற்றலானது விரிவடைந்துகொண்டே செல்லும். அவற்றையே அவர்கள் பிரதிபலிப்பார்கள்.

சிறுவர்கள், குழந்தைகள் தம் கருத்துக்களை முன்வைக்கும் போது அதனை கவனமாக கேட்காதபோதும், தமது மொழி புலமை பற்றாக்குறையால் தாம் சொல்ல வருவதை சொல்ல முடியாமல் போகும் போதும் அவர்கள் தாம் சொல்ல வருவதை விட்டுவிட்டு மற்றவர்கள் எதிர்பார்க்கும் பதிலை சுருக்கமாக தந்துவிட்டு நகர்ந்து போய் விடுவார்கள்.

இப்படியாக குழந்தைகள் எப்போதும் பெரியவர்களை விட பிறரின் உளவியலை முகபாவனை கொண்டு அறியும் திறன் கொண்டவர்கள். அவர்கள் மொழிக்கு பழக்கப்படுவதற்கு முன்பே இதனைத்தான் கையாண்டார்கள். புறச்சூழலில் எது அதிகம் தப்பிப் பிழைக்கிறது என்பதை இலகுவில் கண்டுபிடித்து அதனை பின்பற்றி வாழத் தொடங்கிவிடுவார்கள். எனவே இப்படியான சின்னச்சின்ன விடயங்கள் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கருத்திற் கொண்டு இவற்றில் அதிக கவனம் எடுப்பதோடு பெரியவர்கள் உண்மையாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் தம் குழந்தைகள் முன்னிலையிலாவது உண்மையாக இருந்து எதிர்காலத்துக்கு நல்ல மனிதர்களை உருவாக்கித் தந்த நிறைவோடு வாழ வேண்டும். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். நாளைய உலகை ஆளப் போகிறவர்கள் நல்ல பாதையில் பயணிக்க வேண்டியது அவசியம்.







சுகமான பயணங்களை பாதுகாப்புடன் சென்றடைந்திட...

CALL US AND SAVE BIG

Airline Tickets | Cruises | Vacation Packages | Tours

DELTA TORONTO EAST (INSIDE DELTA HOTEL) 2035 Kennedy Road, Toronto, On M1T 3G2

Tel: 4164319100 Toll Free: 1-866-FLY4MLT Email: info@flymlt.com Web: www.flymlt.com

"கனவு மெய்ப்பட வேண்டும்.."



AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.

125 Topflight Dr, 2nd floor, Mississauga ON. L5S 1Y1
647 401 5800 / 416 439 2800



நிம்மதிக் குறைவு என்பது எல்லோருக்கும் ஒருநாள் வந்தே தீர்கிறது. "எங்கே நிம்மதி எங்கே நிம்மதி" என்று கவிஞன் பாடினானே.. "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்பது இயேசுநாதர் வாக்கு. அங்கே,இங்கே என்று தேடி அலைந்தால் அது கிடைத்துவிடுமா என்ன? அது நமக்குள்ளேதான் இருக்கிறது. நமது உள்ளங்களுக்குள்ளே ஒளிமயமாக இருக்கிறது.

நிம்மதி இல்லாத நிலை கடவுள்களுக்கு கூட ஏற்பட்டிருக்கிறது. கேட்பவர்க்கெல்லாம் வரம் கொடுத்த சிவனுக்கும் நிம்மதியற்ற காலம் இருந்ததாம். அன்பே உருவான இயேசுபிரானுக்கும் துன்பம்,வேதனை நிறைந்த நேரம் இருந்ததுதானே. இறைதூதர் நபி நாதர்கூட துன்பத்தில் சிக்குண்டதாக திருக்குர்ஆன் கூறுகிறது.

ராமனும் காட்டுக்குப் போனான், பாண்டவர்களும் வனவாசம் செய்தார்கள். தேவர்களுக்கும் பல இக்கட்டான காலம் இருந்ததாக நாம் படித்தறிகிறோம். அப்போ, நிம்மதிக் குறைவு என்பது அனைவருக்கும் எப்படியும் ஒருநாள் வந்திருகிறது.வரும். வசதியுள்ளவனோ,அல்லது இல்லாதவனோ வாழ்க்கைப் பயணத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் இடறிவிடுகிறான்.

ஜீரணிக்க தெரிந்தவன் தேறிவிடுகிறான். தெரியாதவன் கஷ்டப்படுகிறான். மௌனம்,அமைதி,பொறுமை இவைகளை கடைப்பிடிப்பவர்கள் வாழ்கையில் ஒரு வகை நிம்மதி உண்டு. நிம்மதி இல்லாத வாழ்வுக்கு அதிக ஆசையே காரணம்.இதை நாம் புரிந்து கொண்டால் நமது அதிகமான துன்பங்கள் குறைந்துவிடும். மனம் கட்டுக்குள் இருந்தால் வாழ்க்கை கட்டுக்குள் வந்துவிடும்.

- கோவிலூர் செல்வராஜன்

மொழியால் ஒன்றுபட்ட முஸ்லிம்களின் மனங்களைப் புண்படுத்துவதைத் தவிர்ப்போம்!

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை ஒரு சில இஸ்லாம் அடிப்படை வாதிகள் செய்தார்கள் என்பதை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம் சமுகத்தையும் புண்படுத்தும் வகையில் இணையங்களிலோ அல்லது முகநூல்களிலோ அல்லது துண்டுப்பிரசுரங்களாகவோ எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மதத்தால் வேறுபட்டாலும், அவர்கள் பேசுகின்ற மொழியினால் தமிழர்களுடன் ஒன்றுபட்டவர்கள். பைபிளுக்கும், திருக்குர் ஆனுக்கும் அதிகளவில் `வேறுபாடுகள் இல்லை

நாங்கள் வடமாகாணத்திற்கு வெளியில் வேலைகள் செய்த பொழுது, முஸ்லிம் மக்களும் சிங்களமக்களும் அதிகளவில் நண்பர்களாக இருந்திருக்கின்றார்கள்.

அவர்களுடைய விழாக்களில், அவர்களின் வீடுகளுக்குச் சென்று உணவருந்தி வந்திருக்கின்றோம். அதே போன்று அவர்கள் எங்களுடைய வீடுகளில் வந்து உணவருந்திச் சந்தோசமாகக் கலந்துரையாடிச் செல்வார்கள்.

தென்னிலங்கையில் சிங்களக் காடையர்களினாலும், பேரினவாத அரசியல் கட்சிகளினாலும் தமிழ்மக்களுக்கு எதிராகத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட பொழுது, தமிழர்களைக் காப்பாற்றியதில் பெரும்பங்கு சிங்களமக்களுக்கும் முஸ்லிம்மக்களுக்கும் இருந்துள்ளது.

1977 கலவரத்தில் நான் கூட எனது குடும்பத்தினருடன் வன்செயலில் பாதிக்கப்பட்ட பொழுது, எங்களைக் காப்பாற்றி அகதி முகாமில் சேர்த்தவர்கள் சிங்களமக்களும், முஸ்லிம்மக்களும் தான்.

இந்தத் தாக்குதலை நடத்தியமைக்காக பல முஸ்லிம்கள் வெட்கமும், வேதனையும் அடைந்திருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்கள் வழங்கிய ஒரு பேட்டியில், "எங்களுக்கு எதிரி சிங்களப் பேரினவாத அரசே ஒழிய சிங்கள மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ அல்ல" என்று குறிப்பிட்டது போல் அவர்களையும் எங்களுடைய உறவுகளாகப் பார்க்க வேண்டும்.

பிரபல வானொலி அறிவிப்பாளர் திரு. பி.எச்.அப்துல் ஹறமீட் அவர்கள் தனது முகநூலில் மனம் வருந்தி எழுதிய கடிதத்தைப் பார்க்கும் பொழுது வேதனையாகவும், கவலையாகவும் இருந்தது. இலங்கையிலும் தமிழகத்திலும் சுத்தமான யாழ்ப்பாணத் தமிழை வாழவைத்துக் கொண்டும் பெருமைப்படுத்திக் கொண்டும் இருக்கின்ற ஓர் "இஸ்லாமியத் தமிழர்" என்பதை நாம் எல்லோருமே அறிவோம்.


இந்த நிலையில் இனவாதம் என்ற கண்ணாடியை அணிந்து, அவர்களைப் போன்றவர்களின் மனங்களைப் புண்படுத்தலாமா?

1994 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமைக்கு, ஒரு சில முஸ்லிம் குழுக்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து விடுதலைப்புலிகளைக் காட்டிக்கொடுத்து, போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட பொழுது, வடக்கில் எஞ்சி இருக்கின்ற முஸ்லிம் சகோதரர்கள் மீது எவரும் தாக்குதல்களை மேற்கொள்ளாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களைப் பாதுகாப்பாக எவ்வித உயிர் இழப்புக்களும் இன்றி வெளியேற்றியதாகக் குறிப்பிடப்பட்டது

இந்த நெருக்கடியான நிலையில் தமிழ்மக்கள் மத்தியில் சிறுபான்மையாக வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை நாம் ஒவ்வொரு வரும் ஏற்றுக்கொள்வோம்.

- நடராஜா ஆனந்தராஜா









அண்ணை மௌனிக்காமல் இருந்திருந்தால்...

இது மிக முக்கியமான தருணம். நான் இதை கட்டாயம் பகிர்ந்தே ஆக வேண்டிய நிலையில் உள்ளேன். தமிழீழ விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப் போகாமல் இருந்திருந்தால், இன்றைய இலங்கையை நிச்சயமாக விடுதலைப்புலிகள் காத்திருப்பார்கள். இதை பலர் பலவாறு எழுதுகிறார்கள். ஆனால் அதன் உண்மைத் தன்மையை நிறுவ முடியும். ஏனெனில் அவர்கள் எதிரிகளுடன் மட்டுமே போராடினார்கள். அப்பாவி இலங்கை மக்களின் சாவுகளை கண்டு தமிழீழ மக்களோ தமிழீழ விடுதலைப்போராளிகளோ நிச்சயமாக மனம் மகிழ்ந்திருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவும், ஊடுருவல் முறியடிப்பு பிரிவும் நிச்சயமாக இன்றைய இலங்கையின் நிலையை இத் துன்பவியல் சம்பவம் நடக்க முன்பாகவே கண்டு பிடித்திருப்பார்கள். தம்மால் இனங்காணப்பட்ட இவ்விடயத்தினை தலைமைக்கு தெரியப்படுத்தி இருப்பார்கள். அதன் அடிப்படையில் தமிழீழ தேசியத் தலைமை தன்னுடைய தமிழீழ தேசத்தில் இருந்து உத்தியோகபூர்வமான புலனாய்வு அறிக்கையைக் கொடுத்திருப்பார்.

முஸ்லீம் தீவிரவாத அணி பாகிஸ்தானின் பின்னணியில் இயங்குகின்றது என்பதை அன்றே (2005) தெட்டத் தெளிவாக கூறி இருந்த விடுதலைப்புலிகளின் தேசியத்தலைமையினதும் தேசக்குரலினதும் தீர்க்கதரிசனமான பார்வை இன்றும் முன் நின்றிருக்கும். அதை அடிப்படையாக வைத்து நிச்சயமாக புலனாய்வறிக்கை தமிழீழத்தில் இருந்து அயல் நாடான இலங்கைக்கு அனுப்பப் பட்டிருக்கும் அதை அடிப்படையாக வைத்து இன்றைய நல்லாட்சி அரசு சில முன்நகர்வுகளை செய்து தமது மக்களை காத்திருக்கும்

ஏற்கனவே வேறு அரசுகளால் எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தது தானே, அப்படி இருந்தும் இலங்கை அரசு கவலையீனமாக செயற்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை சரியாக பேணாதது தானே காரணம் என்ற கேள்வி இப்போது எழலாம். ஆனாலும் தமது அரசை எதிர்த்து போராடும் ஒரு விடுதலை இயக்கத்தின் புலனாய்வு அறிக்கை என்பது நிச்சயமாக கவனிக்கப்படும் என்றே நான் கருதுகிறேன். அல்லது விடுதலைப்புலிகள் தாம் வேறு தாக்குதல்களை செய்வதற்காக பொய்யான அறிக்கைகளை தந்தார்கள் என்ற கோணத்திலாவது விடுதலைப்புலிகளை கண்காணிக்க என்றேனும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கப் பட்டிருக்கும்.

அதனூடாக இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப்புலிகளால் செய்யப்படாத மக்கள் மீதான வெடிகுண்டு தாக்குதல்களை முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்கள் செய்வதை நிச்சயமாக தடுத்து நிறுத்தி இருப்பார்கள். இதை நான் எழுந்தமானமாக கூறவில்லை. நடந்த சம்பவம் ஒன்றை நினைவு கொள்வதன் மூலமாக என்னால் நிறுவ முடியும்.

1998 ஆம் ஆண்டு எம் தாயகம் மீது மிக அழிவைத் தரவல்ல கொலரா நோய் மன்னாரின் விடத்தல் தீவு பகுதியில் தாக்கி இருந்தது. அது தொடர்பாக நான் ஏற்கனவே எழுதிய "குருதிக்குள் ஒருபயணம்" என்ற தொடர் பத்தி ஒன்றில் தெளிவாக எழுதி இருந்தேன். ஆனாலும் அவ்விடயத்தை சுருக்க கூறி இவ்விடயத்தை நிறுவ வேண்டியது இப்போது என் நிலையாகிறது.

அப் பத்தி இவ்வாறு தான் தொடர்கிறது.

"கொலரா Bacteria கிருமியான Vibrio Cholera எப்படி எங்கட பிரதேசத்துக்க வந்தது? என்ற வினாவுக்கு மருத்துவப் பரிவு விடை தேடத் தொடங்கியது. அப்போது தொற்றுநோய் தடுப்பு, காப்பு என்று ஒரு புறம் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த போது விடைதெரியாத இந்த கேள்வி அவர்கள் முன்னே எழுந்தது நியம்.

அப்போது, முதல் கொலரா நோயாளியை இனங்கண்டு அவரை பின்தொடர்ந்து அவர் எங்கிருந்து வந்தார், எங்கெல்லாம் பயணித்தார், என்ற தகவல்களை ஆராய்ந்தது தமிழீழ மருத்துவப்பிரிவு. அப்போது எம் பிரதேசத்துக்குள் வந்துள்ள கிருமி காவியாக இருந்தவர் புத்தளம் பகுதியில் இருந்து கொலரா கிருமியை கொண்டு வந்த அதிர்ச்சியான உண்மையை நாம் கண்டு பிடிக்கிறார்கள் அவர்கள்.

அப்பொழுது தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவன் வார்த்தைகளை உளத்தில் கொண்டு நிமிர்ந்து நின்ற மருத்துவர்களுக்கு மருத்துவ தர்மம் என்பதை விட தலைவரின் வார்த்தைகள் செவிகளில் ஒலிக்கத் தொடங்கின.

"எதிரியாக இருந்தாலும் அவன் நோயாளி என்ற கோணத்தில் மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும்" என்ற கூற்றில் அவர் கூறியது இராணுவத்தையும் அரசையும் தான். தான் எதிர்த்து களமாடும் எதிரிக்கே இவ்வாறான உயரிய மரியாதையை கொடுக்கும் தேசிய தலைவர், மக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் எவ்வாறான நிலையை கையில் கொள்வார் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியது இல்லை. அதனால் மருத்துவப் போராளிகள் செயலில் இறங்கினார்கள்.

புத்தளத்தில் இருந்து வந்திருந்த கொலரா கிருமியால் புத்தளம் பகுதியிலும் மக்கள் பாதிக்கப்படலாம் என்ற உண்மையை உடனடியாக ICRC, மற்றும் MSF என்ற சர்வதேச அமைப்புக்கள் ஊடாக ஆதாரத்தோடு இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தி உடனடியாக புத்தளம்பகுதியை கொலரா தடுப்பு பகுதியாக இனங்காட்டுகிறார்கள். அந்த எச்சரிக்கையை தொடர்ந்தே அரச மருத்துவக்குழு அது தொடர்பாக புத்தளம் பகுதியை ஆராய்கிறது. நிலமையை கண்டு பிடித்து நடவடிக்கையை ஆரம்பிக்கிறது.



இது இன்றைய அரசுக்குத் தெரியுமோ, இல்லையோ அன்றைய அரச அதிபராக இருந்த சந்திரிக்காவுக்கு நன்றாகத் தெரியும்.

விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவு அன்று அரச மருத்துவத்திணைக் களத்தை எச்சரிக்கவில்லை எனில் அங்கும் பல சாவுகள் நடந்திருக்கும். இது நியம்.

நாம் நினைத்திருந்தால் கொலரா எச்சரிக்கையை கொடுக்காமல் விட்டிருக்கலாம். அவ்வாறு நடந்திருந்தால், பலநூறு சிங்கள மக்கள் இறந்திருக்கக் கூடும். ஆனால் நாம் என்றும் மனிதாபிமானம் உள்ளவர்கள். சிங்கள மக்கள் மீது எங்கள் துப்பாக்கிகளோ அல்லது எந்த தாக்குதல் முறைமைகளோ நிமிர்ந்ததில்லை.

என்று நிறைவாகிய அப் பத்தியின் மூலமாக நான் மேலே கூறிய விடயங்களை நிச்சயமாக நிறுவ முடியும்.

நாங்கள் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், கொலைகாரரர்கள் என்று சர்வதேசத்துக்கு மகிந்தவும் அவனின் அடிவருடிகளும் பரப்புரை செய்கின்ற இந்த நேரத்தில் அல்லது மைத்திரியின் நல்லாட்சி அரசு இங்கே இனப்படுகொலை நடக்கவே இல்லை என்று பரப்புரை செய்யும் இந்த நேரத்தில் எம் அமைப்பும், எம் அண்ணனும் மௌனிக்காமல் இருந்திருந்தால், நிச்சயமாக 300 மக்கள் இறந்திருக்கவோ 500 மக்கள் காயப்பட்டிருக்கவோ மாட்டார்கள் என்பதோடு இலங்கை அரசு இன்று படும் அவல நிலையை தாண்டி முஸ்லீம் சர்வதேச தீவிரவாதத்தை இலங்கையில் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்பது மட்டுமே திண்ணம்



யாரோ கொலை செய்கிறார்கள் யாரோ ரத்தம் சிந்துகிறார்கள் ரத்தம் சிந்துபவர்களுக்காக நானும் கண்ணீர் சிந்துகிறேன் ரத்தம் சிந்த வைப்பவர்களை நானும் சபிக்கிறேன்

"நீ ஒரு இஸ்லாமியனா வெளியே வந்து பதில் சொல்" என வீட்டிற்கு வெளியே யாரோ கூச்சலிடுகிறார்கள் கதவுகளையும் ஜன்னல்களையும் வேகமாக தட்டுகிறார்கள்

நான் அப்போது என் தொழுகைப் பாயில் இருந்தேன் நான் இன்னும் என் இரவு உணவை அருந்தவில்லை என் குழந்தைகள் பயப்படுகிறார்கள் என் இரண்டு கைகளையும் மேலே தூக்கி கொண்டு வெளியே வருகிறேன் என்னிடம் ஆயுதங்கள் இல்லை என்பதை நான் தினமும் நிரூபிக்க வேண்டியிருக்கிறது மேலும் ஒரு வெள்ளைக் கொடியை நான் தூக்கிப் பிடித்துக்கொண்டு வெளியே வருகிறேன் அந்தக் கொடியை தினமும் துவைத்துப் போட்டு தயாராக வைத்திருக்கிறேன் ஒரு சமாதானப் புறாவை பறக்கவிட்டபடியே வெளியே வருகிறேன் அதற்காகவே நிறைய வெண் புறாக்களை வீட்டில் வளர்க்கிறேன் ஒரு இஸ்லாமியனாக பிறப்பது மிகவும் சிக்கலானது எப்போதும் ஒரு ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்

"நீதான் அந்தக் குண்டுகளை வெடித்தாயா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"நீ அவர்களுக்கு தங்குமிடம் அளித்தாயா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"அவர்களுக்கு பணம் கொடுத்தாயா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"அவர்களை பார்த்திருக்கிறாயா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"இந்தக் கொலைகளை ஆதரிக்கிறாயா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"உன்மதம் அதை ஆதரிக்கிறதா?" என்கிறார்கள் "இல்லை" என்கிறேன்

"நீ வணங்கும் கடவுளைத்தான் கொலைகாரரர்களும் வணங்குகிறார்களா?" என்கிறார்கள் "எனக்குத் தெரியாது" என்கிறேன்

"நீ பின்பற்றும் மதத்தைத் தான் கொலைகாரரர்களும் பின்பற்றுகிறார்களா?" என்கிறார்கள் "எனக்குத் தெரியாது" என்கிறேன்

"கொலைகாரரர்கள் ஏன் உன்னை போலவே தாடி வைத்திருக்கிறார்கள்?" என்கிறார்கள் "எனக்குத் தெரியாது" என்கிறேன்

"நீ அந்தக் கொலைகாரரர்களை கண்டிப்பதாக உரத்துச் சொல்ல முடியுமா?" என்கிறார்கள்

"நான் இந்தக் கொலைகள் நடப்பதற்கு முன்பே இந்தக் கொலைகளை கண்டித்துவிட்டேன் நான் தினமும் ஐந்து வேளை தொழுகிறேன் ஆனால் தினமும் பத்து முறை பயங்கரவாதிகளை கண்டிக்கிறேன்" என்றேன்

"நீ கண்டித்த பிறகும் அவர்கள் கொலை செய்கிறார்கள் என்றால் நீ அவர்களை சரியாக கண்டிக்கவில்லை என்று தானே அர்த்தம்?" என்கிறார்கள்

"நான் வேண்டுமானால் பத்து முறைக்குப் பதில் இனி நூறு முறை கண்டிக்கட்டுமா?" என்கிறேன்

"நீயும் நாளை ஒரு இஸ்லாமிய பயங்கரவாதியாக மாறமாட்டாய் என்று என்ன உத்திரவாதம்" என்கிறார்கள்

"எனக்கு ரத்தத்தைக் கண்டால் மிகவும் பயமாக இருக்கும் மேலும் உயிரோடிருப்பதைத் தவிர வாழ்க்கையில் எனக்கு வேறு எந்த இலட்சியமும் இல்லை" என்கிறேன்

"நீ இந்தக் கொலைகளுக்கு ஏன் பொறுப்பேற்றுக் கொள்ள மறுக்கிறாய்" என்கிறார்கள்

"எனக்கு நிறைய குடும்பப் பொறுப்புகள் இருக்கின்றன என் குழந்தைகளுக்கு நான் பொறுப்பாக இருக்கிறேன் என் வேலைக்கு பொறுப்பாக இருக்கிறேன் என் நோய்களுக்கு பொறுப்பாக இருக்கிறேன் என் துயரமான தலை விதிக்கு பொறுப்பாக இருக்கிறேன் மேலும் இந்த தேசத்திற்கு வேறு பொறுப்பாக இருக்க வேண்டியிருக்கிறது இதில் நான் கொலைகளுக்கு எங்கே பொறுப்பேற்பது?" என்கிறேன் விரக்தியோடு

"இவ்வளவு கொலைகளுக்குப் பிறகு நீயும் உன்கடவுளும் இஸ்லாமியர்களாக இருக்கத்தான் வேண்டுமா?" என்கிறார்கள்

"இருவரும் அதைப் பற்றி விரைவில் பேசி ஒரு முடிவெடுக்கிறோம்" என்று வாக்குறுதி அளிக்கிறேன்

பிறகு அவர்கள் என் ஆடைகளை களைந்து சோதித்தார்கள் நான் ஒரு இஸ்லாமியன் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதும் நிர்வாணமாக ஒருமைதானத்திற்கு அழைத்துச் சென்றார்கள் அங்கே இன்னும் நிறைய பேர் நின்று கொண்டிருந்தார்கள் பயங்கரவாதத்திற்கு எதிரே கத்தும் படி கட்டளையிட்டார்கள் நான் ஏற்கனவே கத்தி விட்டதை சொன்னேன் மறுபடி கத்து என்றார்கள் கத்தினேன்

"சத்தம் ஒழுங்காவே வரவில்லை" என்று தலையில் அடித்தார்கள் நான் இன்னும் சத்தமாக கத்தினேன்

"பயங்கரவாதிகளுக்கு கேட்கும் படிகத்து" என்றார்கள் இயற்கையாகவே நான் மென்மையான குரல் உடையவன் என் தொண்டை கிழியும் படிகத்தினேன் எல்லோரும் சேர்ந்து கத்தினோம் அந்தக் காட்சி பயங்கரமானது அந்தக் காட்சி அவலமானது

இந்த உலகத்தில் சமாதானத்தைக் கொண்டு வரும் பொறுப்பு எங்களுக்கு மட்டும் தான் இருக்கிறது விடிய விடிய கத்திக் கொண்டே இருந்தோம்.

நன்றி! - மனுஷ்யபுத்திரன்.



வரலாற்றில் குளிரூட்டி போட்டு ஒரு மணிநேர உண்ணாவிரதம் நடத்திய ஒரே தலைவர் மு. கருணாநிதி!

'அழுக்கு மூட்டையும்'- ஆடாத நாடகமும்.'

மறந்தே போய்விட்டது. இன்று, ஒரு நாடகத்தின் 10-ம் ஆண்டு நினைவு நாள் 27.04.2009.

ஈழ மண்ணில் நடந்தேறிய இனப்படுகொலைக்கு எதிராக, 'இந்திய அரசே போர் நிறுத்தம் செய்ய அழுத்தம்கொடு- நடவடிக்கை எடு' என்று தமிழகமே போராடியது. ஆமாம் கண் பார்வையற்ற, உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகள் வரையிலும் வீதியில் வந்து போராடினார்கள்.

நாங்கள் என்ன செய்ய முடியும், முதல்வர் பதவி என்பது அதிகாரமற்றதுதானே என்று கலைஞரின் 'நிலைய வித்துவான்கள்' ஒத்து ஊதி பாடினார்கள்.

சரி, அந்த அதிகாரமில்லா பதவிக்கு ஏனப்பா, தந்தை பெரியாரை நடுத்தெருவில் விட்டுவிட்டு, 'பதவி என்ற அதிகாரத்தை பிடித்தால்தான் எதையும் செய்ய முடியும்' என்று கூறி வெளியேறினீர்கள், என்றால் பதில் இல்லை.

அந்த அதிகாரமில்லா பதவி எதற்கு, 'என் இனம் அழிந்துகொண்டிருக்கிறது. தடுத்து நிறுத்த முடியா என் முதல்வர் பதவி எதற்கு' என்று தூக்கி எறிந்துவிட்டு வரமுடியவில்லை. மன்மோகன் சிங்கும்- சோனியாவும் சேர்ந்து கழுத்துக்கு குறுக்காக 2ஜி ஊழல் முறைகேடு என்ற கத்தியை அழுத்தி வைத்து விட்டிருந்தார்கள்.

கலைஞர், அந்த கத்தியை இழுத்துப் பிடித்தபடியேதான் 27.ஏப்ரல்2009 அன்று காலை, மெரினா கடற்கரையில் போய் உண்ணாவிரதம் என படுத்துக்கொண்டார். உலகிலேயே இந்த தினுசில், போராட்டம் நடத்திய ஒரு தலைவரை பார்த்திருக்கவே முடியாது. அதுவும் சில மணித்துளிகள்தான்.



கலைஞரின் உண்ணாவிரதப் போராட்டம் கண்டு நடுங்கிய!!! இலங்கை அதிபர் ராஜபக்சே 'போர் நிறுத்தம் செய்வதாக' ஒப்புக்கொண்டுவிட்டார் என்று மத்திய அமைச்சரும், குடியரசுத் தலைவர் பிரனாப்பும் கூறினார்களாம். அப்படிச் சொல்லி மகிழ்ந்து, பழரசம் பருகி உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார் கலைஞர்.

ஆக, 2ஜி விஷயத்தில் மத்திய அரசை மிரட்டின மாதிரியும் ஆயிற்று. கட்சிக்காரர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் இலங்கைத் தமிழர்களுக்கு குரலும் கொடுத்த மாதிரியும் ஆயிற்று, என்று கலைஞர் சாமார்த்தியமாக ஆடிய நாடகம் அது என்று அப்போது யாருக்கும் தெரியாது. அண்ணனுக்கு பொண்ணு பார்த்த மாதிரியும் ஆச்சு. ஆட்ட மேய்ச்ச மாதிரியும் ஆச்சு என்கிற மாதிரி.

பிறகென்ன? "இலங்கைத் தமிழர்களுக்கு நான்கே நாளில் விடுதலையைப் பெற்றுத் தந்த கலைஞருக்குப் பாராட்டு" என்று போஸ்ட்டர்கூட அடித்து ஒட்டிக்கொண்டார்கள். உலகிலேயே இப்படி ஒரு சமாதானப் புறாவை பார்த்திருக்க முடியாது.

தொடர்ந்து எத்தனை நாடகங்கள்?

உச்சகட்டமாக, திமுகவும்- காங்கிரஸ் கட்சியுமே மக்களோடு மக்களாக நின்று கொண்டு, 'இந்திய அரசே-இலங்கையில் போர் நிறுத்தம் செய்' என்று 'போராடியதுதான்' வேடிக்கையிலும் வேடிக்கை.

ஆனாலும் அங்கே 2009 மே- மாதம். திட்டமிட்டபடி தமிழின அழிப்பை நடத்தி முடித்துவிட்டான் மகிந்த ராஜபக்சே. இந்த பக்கம் மக்களோடு மக்களாக போராடுவதைப் போலவே நாடகமாடி 2009 மக்களைவை தேர்தலிலும் வெற்றி பெற்றது திமுக-காங் கூட்டணி.

அதன் பிறகு கோத்தபயா ராஜபக்சே கொடுத்த பேட்டிதான் முக்கியம்.

'இந்தியாவிற்கான போரைத்தான் நாங்கள் நடத்தினோம். சேர்ந்தேதான் நடத்தினோம். ஒவ்வொரு நகர்வும் இந்தியாவுக்கு கூறப்பட்டது. ஆலோசனை பெறப்பட்டது. இந்தியாவை விட எங்களுக்கு தமிழகத்தின் மீதுதான் ஒரு அச்சம் இருந்தது. அங்கே பெரியதாக ஏதும் போராட்டம் வெடித்து, அது இந்திய அரசுக்கு அழுத்தமாக மாறி- எங்களை போர் நிறுத்தம் செய்ய நிர்பந்தித்துவிடக்கூடாதே என கவனமாக இருந்தோம்." என்றான்.

தமிழினத்திற்காக கலைஞர் போராடிய விதம் பற்றி ராஜபக்சே வகையறா கொடுத்த துரோகச் சான்று இப்படித்தான் இருந்தது.

2014-ல் அடுத்த மக்களவைத் தேர்தல் வந்தது. தொடர்ந்து, மத்திய மந்திரி பதவியில் இருந்த திமுக கடைசி கட்டத்தில் விலகி வெளியே வந்தது. 'கூடா நட்பு கேடாய் முடிந்தது' என்று, காங்கிரஸ் கட்சியை விட்டு விலகினார் கலைஞர். அண்ணா அறிவாலயத்தில் உடன் பிறப்புகள் எல்லாம் தாறுமாறா பட்டாசு வெடித்து மகிழ்ந்தார்கள்.

மறுபக்கம், காங்.கட்சி தலைவராக இருந்த ஈ.வி. கே.எஸ். இளங்கோவன், 'நாங்கள் தேவையில்லாமல் முதுகில் தூக்கிச் சுமந்த அழுக்கு மூட்டை திமுக. இறக்கிப் போட்டுவிட்டோம். சுமையில்லாமல் நடக்கின்றோம்' என்று பதிலுக்குத் துப்பினார்.

அப்போதுதான் கலைஞர், 'இலங்கைப் போர் விஷயத்தில் நாங்கள் காங்.கட்சியை நம்பினோம். அவர்கள் துரோகம் செய்தார்கள்' என பல விஷயங்களை போட்டு உடைத்தார். கலைஞர் உண்ணாவிரதம் இருந்த போது ப.சிதம்பரம்தான் 'போர் நிறுத்தப்பட்டுவிட்டது' என பொய்சொன்னார் என உடன் பிறப்புகள் பேசிக்கொண்டார்கள்.

காலம் எவ்வளவு கொடியது பாருங்கள். விக்கிரமாதித்தியன் தோளில் இருந்த வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக, மோடி ஆட்சி செய்த கெடுநேரம் இப்போது, 'திமுக- என்ற அழுக்கு மூட்டையை' காங்கிரஸ் கட்சி மீண்டும் முதுகில் சுமக்கத் தொடங்கியுள்ளது.

இல்லை என்றால் பாஜக உள்ளே வந்துவிடும் அல்லவா என்ற சாமானியனும், அந்த, 'அழுக்கு மூட்டைகளின்' பச்சைத் துரோகத்தை மறக்க வேண்டியதாயிற்று.

இல்லை என்றால் மறந்துபோகக்கூடிய துரோகமா அது.?

இந்த 'அழுக்கு மூட்டைகளின்' ஒத்து ஊதும் ஊடக நண்பர்கள்தான் இப்போது, 'சீமான் போன்ற தமிழ் தேசியம் கும்பல்தான்' ஈழப்போராட்டத்தைக் கலைத்தது என்று ஆங்காங்கே கதையளந்து கொண்டிருக்கிறார்கள். அந்த காலகட்டத்தில், சீமான் உள்ளிட்ட தமிழ்த் தேசிய 'கும்பல்கள்' எல்லாம் களத்திலேயே இல்லை. பிறக்கவும் இல்லை என்று அறியாமலேயே பொய் உரைத்துநிற்கிறார்கள். காலம், 'அழுக்கு மூட்டைகளை' வெளுத்துத் துவைத்து போடாமல் விடாதா என்ன?

நன்றி!

- பா.ஏகலைவன்



தேசப்பற்றை நிரூபிக்க சிங்கக் கொடி!

போகிற போக்கை பார்த்தால், இலங்கை முஸ்லிம்கள் தமது தேசப்பற்றை நிரூபிக்க சிங்கக் கொடியை மேலாடையாக அணிந்து, கோத்தாவுக்கு வாக்களிக்க வேண்டும் என நெருக்குவது போல் உள்ளது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் இதுவரை எதிர்கொள்ளாத மிக ஆபத்தான சூழல் இது. இந்த நிலையை தன்னளவில் நின்று எதிர்கொள்வதற்கான மனப் பலத்தை உடனடியாகக் கட்டியெழுப்ப சமூக அகத்திற்குள் வேலை செய்ய வேண்டியது உடனடிப் பணிகளில் முதன்மையானது. இதில் சிவில் சமூகத்தின் பணி கணிசமானது.

இலங்கை முஸ்லிம் சமூகம் பெரியளவில் தன் சமூக அகத்திற்குள் உள்ளார்ந்து பல்வேறு சீர்திருத்தப் பணிகளை மிக வெளிப்படையாக, தைரியமாக, அறிவார்ந்த தளத்தில்செய்யவேண்டியமுக்கியதருணமிது. அதே போல் சக இன, மத, சமூகங்களுடன் உரையாடலை தொடங்குவதுடன் சமூக நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப வேலை செய்ய வேண்டி உள்ளது. இவ்விரு பணிகளும் ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டியவை.

இதில் முதல் நிபந்தனை, தம் பக்கமான தவறுகளுக்கு, தம் சமூகம் சார்ந்து பொறுப்பெடுப்பதுடன், பாதிக்கப்பட்டுள்ள மக்களிடம் தார்மீக மன்னிப்பை கேட்பதாகும்.நடந்த கொலைகளையும் அனர்த்தங்களையும் ஆதரிக்கவில்லை என்பதுடன், மனித குல அழிவை இனத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் கொண்டாட இதுவரை இலங்கை முஸ்லிம்கள் முற்படவில்லை என்பது மிக நம்பிக்கை தரும் சூழலாகும். சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் அவர் அப்படி சொல்கிறார் -இப்படி சொல்கிறார்கள் என்பதற்கெல்லாம் உடனடி எதிர்வினையாற்றும் நேரம் இல்லை இது. இது ஆக்கபூர்வமான செயல்பாட்டிற்கான நேரம். நற்செயற்பாடுகளே பதிலாக அமைய வேண்டிய நேரமிது.

ஆனால் சமூக வலைத்தளங்களையும் பெருமளவு ஊடகங்களையும் பார்க்கும் போது இலங்கை முஸ்லிம்களை அழித்து விடும் வாய்ப்பு வந்திருக்கிறது என களிப்பு கொள்வது போல் தெரிகின்றன. இன்றைய நிலை முஸ்லிம்களை அதிகளவில் பாதிக்கக் கூடிய அரசியல், மத,இராணுவ வியூக முட்டுச் சந்திக்குள் தள்ளியுள்ளது என்பது ஒரு பகுதி அளவு உண்மைதான்,ஆனால் இந்த நிலை முழு அளவில் இலங்கை வாழ் அனைத்து இன,மத, சமூகங்களையும் ஒட்டு மொத்தமாக படுகுழிக்குள் தள்ளப்போகிறது என்பதை உணராதவர்களாக இருப்பது ஒரு துரதிஷ்டமே.

- ஃபௌசர்





TNEXT Communication Inc

Get Connected. Stay Connected.



SERVICES

High Speed Internet
Experience the internet in a completely different way with the leaders in the industry.

Home Phone
With 17 Standard Calling features, our VOIP Home Phone plans let you call anywhere in North America.

Long Distance
Providing affordable long distance rates for you and your family, because we understand the value of staying connected.

Business Internet
We have the business specialists, expertise and resources to help you.

Cyber Security
- Bot Management
- Web Application Firewall
- DDoS Protection -24/7
- Threat Response

Web Hosting
Dominating the industry, our platform provides 99.9% uptime guarantee & 24/7 technical support.

20% Discount on Regular Tickets for Existing Clients
50% Discount on VIP Tickets for new customers

416 477 8181 www.tnext.ca

Pick Up Location 1
TNEXT Office
155 Rexdale Blvd #502a,
Etobicoke, ON M9W 5Z8

IBC
TAMIL
LOGO

Pick Up Location 2
Annam Jewelry
TBD Scarborough

We are a Founder focused Venture Capital Firm



Supporting early stage startups, on the path to success

Knowledgehook ▪ Sampler ▪ AMBIENCE DATA ▪ Continyou Care

IDEAL.VENTURES

1100 Rodick Road Markham ON Canada L3R 8C3


TEKNO®
MEDIA
Your Protection Champion
Since 2004...
www.tekno.cc
24/7 SECURITY
NON STOP
RECORDINGS
TEKNO
We are into....
Cameras | Video Recordings | Accessories
Why Tekno Media?
• 24/7 Online Technical Support
• We Manufacture & Distribute
• We have the Leading Price
• Products with Canadian Standards (Weatherproof)
• Variety of Camera Upgrades
• Upto 8 Years of Extended Warranty
• Maintenance / Service Packages
• Professional Installation Service
WORLD'S FIRST TAMIL TEKNO® DVR
உலகின் முதலாவது ரெக்னோ இலத்திரனியல் ஒளி-ஒலிப்பதிவு சாதனம்
Full HD 1080
HD-SDI
Easy to Use
Smart Email Notification
Control from Mobile
Built-in Alarm Feature
4K TV Support
Made in Canada
FEATURING TEKNO® Bell
Purchase Your TEKNO BELL TODAY
&
Save with After Mail-In Rebate!
Ask Us How You Can Receive Your Rebate
NEW!
120 Woodstream Blvd., Unit 24, Woodbridge, ON L4L 7Z1
905 913 2727 • 1 888 953 2727 (Toll Free)